
SPECIAL CONVOCATI
CONFERRING D.LITT (HONOR
ON
ER OF T
தமிழரசு
16-7-1993 ரூ.3


பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதி கிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR/273/Dis/MS/93/7
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...


மதுரை காமராஜர் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை ... 5

கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் வறுமை நீங்கிடவும், வேலைவாய்ப்புகள் பெருகிடவும் தொடர்ந்து பாடுபடுவோம்! —மாண்புமிகு முதல்வர் உரை ... 13

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் - ஒரு கண்ணோட்டம் ... 17

மனநிறைவு தரும் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 21

கலைக்கோயில் ... 24

தமிழே! உன்னை வாழ்விக்க வாழ்வதுதான் நெல்லைச் சீமை ... 28

களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் ... 30

மக்களாட்சித் தத்துவத்தின் மாட்சிக்கு அடிப்படை - பயனுள்ள விவாதங்களே... —மாண்புமிகு முதல்வர் உரை ... 33

கடமைகளை அர்ப்பணிப்பு உணர்வோடும் உறுதியோடும் தொடர்ந்து செய்யுங்கள்! -மாண்புமிகு முதல்வர் உரை ... 39

சென்னைப் புறநகரில் ஒரு தொழில் பூங்கா ... 44

கிருஷ்ணகிரியில் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா ... 47

புதுப்பொலிவு பெறும் குற்றாலம் ... 48


உள்ளே...

திருநெல்வேலி கட்டபொம்மன்

மாவட்டச் சிறப்புக்

கட்டுரைகள் ... பக்கம்: 17


## தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

ஆடித் திங்கள் - 1

மலர்:24 இதழ்:2

16-7-1993

விலை: ரூ.3

# டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மனிதாபிமான அணுகுமுறையுடன் கூடிய ஈர நெஞ்சம் கொண்ட ஒரு மாதரசி!

அரும்புகழ் பெற்ற, அனைவரையும் ஈர்க்கும் ஆளுமைப் பண்பு கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களை அறிமுகப்படுத்துவதை எனக்களிக்கப்பட்ட இணையில்லா மரியாதையாகவும், பெருமைக்குரிய தனிச் சிறப்பாகவும் மதிக்கிறேன். அவர்களுடைய தலைமையின்கீழ் தமிழகத்தின் ஏழை எளிய மக்கள் புதிய ஒளியைக் கண்டு ஒரு புதிய வாழ்வை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். உயர்ந்த எண்ணங்கள், உண்மை, புத்திக்கூர்மை, செயல் வேகம், நடைமுறையில் செயலாக்கும் திறன் ஆகியவற்றின் உறைவிடமாகத் திகழுகின்றார். அவர் முழுமைப் பண்புகளுக்கு முன்னுதாரணமாக விளங்குகிறார்.

தமிழ்நாட்டின் முதல்வர் என்ற முறையில் தாம் ஒரு தகுதி வாய்ந்த தலைவர் என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டார். இந்தியாவில் தமிழ்நாடு ஒரு முதன்மை மாநிலமாகத் திகழ வைத்தார். அவரை வணங்கும் தமிழ்நாட்டு மக்கள் அவரைப் பாசத்துடனும் மரியாதையுடனும் புரட்சித்தலைவி என்று அழைக்கிறார்கள்.

மிகப் பிரகாசமான கல்விச் சாதனையைப் பள்ளியில் புரிந்த டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சுய கல்வி மூலம் தம் அறிவாற்றலை மேன்மேலும் வளர்த்துக் கொண்டார். அவர் மேன்மேலும் ஏராளமான நூல்களைக் கற்பதில் ஆர்வமுள்ளவர் என்பதை நாம் குறிப்பிட்டே ஆகவேண்டும். அவர் மிகப் பெரிய எழுத்தாளர்களான டிக்கன்ஸ், பிரான்ட் சிஸ்டர்ஸ், ஜேன் ஆஸ்டின், மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் படைப்புகளோடு இடையறாத் தொடர்பு கொண்டு அதன்மூலம் தமது மனதை விசாலமாக்கி, தமது அறிவு வானத்தை அகலப் படுத்திக் கொண்டவர்.

ஆங்கில மொழியில் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு இருந்த புலமையும் ஆற்றலும் அனைவரும் அறிந்த ஒன்றாகும். ஆங்கிலத்தோடு தமிழ், கன்னடம், தெலுங்கு, இந்தி, மலையாளம் ஆகிய மொழிகளில் அவருக்கு உள்ள ஆற்றலும் தகுதியும் அவர் ஒரு பன்மொழி அறிஞர் என்பதைப் பறைசான்றுகின்றன. தன் பேச்சுக்களையும் எழுத்துக்களையும், சிறந்த மொழி ஞானம், சந்தர்ப்பங்களுக்குப் பொருந்தும் திறன், சிந்தனை வளம் ஆகியவை நிறைந்தவைகளாக ஆக்குவதில் அவருக்குள்ள திறமை, அவரை ஒரு சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் விளங்க வைக்கின்றன.

சிறந்த நாடக நடிகையாகவும், திரைப்பட நடிகையாகவும் விளங்கிய டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், வாழ்க்கை அனுபவத்தை ஒரு கலை ஞானத்துடன் விசாலப்படுத்தியுள்ளார். பல் வேறு கலைகளில் அவருக்கிருந்த தேர்ச்சி, வாழ்க்கை அனுபவத்தை வளப்படுத்தியது; பொதுவாழ்வில் அவர் எதிர்நோக்க வேண்டியிருந்த அநேக சோதனைகளையும் தாங்குகின்ற ஆற்றலை அவருக்கு அளித்தது.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஒரு குறிப்பிடத்தக்க, படைப்பாற்றலில் சிறந்த கலைஞர் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். மிக நுணுக்கமான விவரங்களைப் புரிந்துகொள்வதில் ஒரு ஓவியனின் கண் பார்வையும், அனைத்திலும் உள்ள உயிர்த்துடிப்புகளை உணர்ந்து கொள்வதில் ஒரு பாடகனின் காதுகளையும் பெற்றவர். தமது சுயசரிதையாகிய 'மனம் திறந்து பேசுகிறேன்', நான்கு நாவல்கள், ஏராளமான தமிழ்ச் சிறுகதைகள் மற்றும் தகவல்களைத் தரும் பல ஆங்கில, தமிழ்க் கட்டுரைகள் மூலம் வளமான கற்பனை, உயர்ந்த புத்திக்கூர்மை, மொழி ஆற்றல் ஆகியவற்றின் மூலம் தான் ஒரு வளமான எழுத்தாளர் என்ற மதிப்பைப் பெற்றார். இந்த வகையில், ஒரே சமயத்தில் தான் ஒரு, பிராந்தியவாதி, தேசியவாதி, பிரபஞ்சவாதி என்பதை எடுத்துக்காட்டியுள்ளார்.

மனித மனப்பாங்கினை ஆழமாக அறிந்து கொள்ளும் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் திறன், நடுவுநிலைமை, தன்வயப்படாமை, புரிந்து போற்றும் நன்னெஞ்சம், துயர்ப் படுவோரைப் பற்றிய உண்மையான அக்கறை ஆகியவற்றை வழங்கியுள்ளது. ஆட்சித்திறம், அரசியல் நுழைபுலம், சூழ்நிலைக்கேற்ற மதிநுட்பம், இயற்கையிலும் முயற்சியிலும் பெற்ற ஞானம் இவை அனைத்தையும் வரமாகப் பெற்ற அரசியல் நிபுணர் அவர் ஆவார்.


(மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு, 1993 ஜூலை 14-ஆம் நாளன்று மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தால் டாக்டர் பட்டம் வழங்கப் பட்டபோது, பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் எம்.டி.கே. குத்தாலிங்கம், டி.எஸ்.சி அவர்களால் வழங்கப்பட்ட பட்டமளிப்புப் பட்டயம்)

தலைமைப் பண்புகளை ஏராளமாகப் பெற்ற தலைவர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் புரியும் ஒவ்வொரு செயலிலும் அவருடைய சம நிலைத் தன்மை, அறிவுபூர்வமான, நடைமுறை சாத்தியமான, முற்போக்கான எண்ணங்கள் ஆகியவை பிரதிபலிக்கும். அவரது வளமான பேச்சுத் திறமையும், நிர்வாகத் திறமையும், புத்திக்கூர்மையும் அவர் ஒரு சாதனையாளர் என்பதை நிரூபித்துவிட்டன. ஆனால், அவர் முற்றிலும் தன்னடக்கத்துடனும், பணிவுடனும் திகழ்கிறார். டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பண்பாடு, கண்ணியம், சுய கட்டுப்பாடு உடைய வராவார். தமது பகுத்தறிவினாலும் பிரச்சினை களைச் சரியான கோணத்தில் நோக்கும் தன்மை யினாலும், சமுதாயத்தின் அனைத்துப் பிரச்சினை களையும் விஷயங்களையும் தீர்த்து வைக்கின்றார். அவரது வலுவான மதிநுட்பமும், உயரிய சிந்தனை யும் மிகக் கடுமையான நிர்வாகப் பணியை எளிமையாகவும், நளினமாகவும் செய்து முடிக்கும் ஆற்றலை வழங்கியுள்ளன.

தாழ்த்தப்பட்டோர், சமூகத்தின் வசதி வாய்ப் புகள் பெறாதோர், நலிந்த பிரிவினர், குறிப்பாக, பெண்கள், குழந்தைகள் ஆகியோர் மீது கொண்ட அக்கறையும், அனுதாபமும் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் வாழ்க்கையையும்,வாழ்வியல் கோட் பாட்டையும் பெரிதும் பாதித்திருக்கின்றன. அதனை, பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டமும், தொட் டில் குழந்தைத் திட்டமும் பிரதிபலிக்கக் காண லாம். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல்வாழ்வுக்காக ஒரு பத்து அம்சத் திட்டம் தற் போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தி லுள்ள உடல் ஊனமுற்றோர்களின் தேவைகளைக் கவனிப்பதற்காகவே ஒரு தனி இயக்குநரகத்தை உருவாக்கி இருக்கும் தனிப்பெரும் பெருமை இவரையே சாரும். இலவச மருத்துவ முகாம்கள், சிறப்பு மருத்துவ முகாம்கள், ரயில் மருத்துவமனை ஆகியவற்றை நடத்துவதன் மூலம், அனைவருக்கும் நலவாழ்வு எனும் அரிய திட்டத்தை அரசு முனைப்போடு நடத்தி வருகிறது.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா 20-ஆம் நூற் றாண்டின் தன்னிகரற்ற, தலைமை வாய்ந்த, பெண்ணுரிமை வீராங்கனை ஆவார். பெண்கள் தங்கள் சமூக உரிமைகளைப் பெறவேண்டும் என்றும், பொருளாதார ரீதியாகச் சுதந்திரம் பெற அவர்களுக்கு உதவி செய்யப்பட வேண்டும் என்று உறுதியாக நம்புகிறார். அதேநேரத்தில், வீடு, சமூகம், நாடு என்று குறித்த தங்களது பொறுப்புக் களை அவர்கள் சரிவர நிறைவேற்ற வேண்டும் என்பதும் அவர் கருத்தாகும்.

பெண்கள் வாழ்க்கையில் உயர்வதற்காக அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் விதத்தில் பெண்களுக்காக மாநில அளவிலான குழு ஒன்று அவரால் அமைக்கப்பட்டிருக்கிறது. அனைத்துத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களும் பெண் களாகவே இருக்க வேண்டும் என்று அவர் ஆணை



யிட்டிருக்கிறார். இது ஒரு சரியான நடவடிக்கை யாகும். ஏனெனில், சின்னஞ்சிறு குழந்தை களுக்குத் தேவை - தாய்மையின் பராமரிப்பு, தாய்மையின் கவனிப்பு, தாய்மையின் பரிவு ஆகியவையாகும்.

பெண்களின் முறையீடுகளைக் கவனிப்பதற் காகவே அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் முழுவதும் பெண்களாலேயே நிர்வகிக்கப்படும் காவல் நிலையங்கள் அமைக்க அவர் ஆணை யிட்டுருக்கிறார்.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமைப் பொறுப்பில் இருந்து மாநிலத்தை வழிநடத்திச் செல்லும் இந்த இரண்டாண்டுகளில், ரூ.20,000 கோடிக்கு மேலான முதலீட்டுத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேசிய அரோ மெடிக்ஸ் தொழிற்சாலையும், ஜெயங்கொண்டத் தில் லிக்னைட் நிலக்கரி தோண்டியெடுத்தல் மற்றும் மின் உற்பத்தி ஒருங்கிணைப்புத் திட்டமும் அவற்றில் குறிப்பிடத்தக்க முக்கிய திட்டங்களாகும்.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் விளையாட்டு ஆர்வம் நிர்வாகத் திறன் ஆகிய வற்றை எடுத்துக்கூறும் விதத்தில், மிக நவீனமான வெளி அரங்க விளையாட்டுத் திடல் ஒன்று உலகத்தரம் வாய்ந்ததாகக் குறிப்பிட்ட குறுகிய காலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. உருவாகிவரும் விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் இனங்காணவும், மேலும் அவர்களது திறமைகளை வளர்க்கவும், தேசிய, சர்வதேச விளையாட்டுக் களங்களில் பெருமைக்குரிய, சிறப்பிடத்தைத்

தமிழகம் பெறவும், தமது தலைமையில் இயங்கும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தை அவர் உருவாக்கியிருக்கிறார்.

தமிழகத்தின் புகழ்வாய்ந்த, நீண்ட காலமாகக் கவனிப்பாரற்ற திருக்கோவில்களின் சீரமைப்புக் காகவும், ஆலயங்களில் அன்றாட வழிபாடு நிகழ்த்த நிதியமைப்பதற்காகவும் டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெரும்பணி ஆற்றியுள்ளார். இவ்வாறு நமது தொன்மையான பண்பாட்டு மரபைப் பேணுவதற்கும், பாதுகாப்பதற்கும் இந்தியப் பண்பாட்டை வளர்க்கவும் அவர் ஆற்றியுள்ள பணிகள் அளப்பரியன.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா, கல்வித்துறையில் பெரிதும் நாட்டமுடையவர். வகுப்பு உணர்வையும் ஏழ்மையையும் அகற்றுவதற்கான ஒரு வழி, பொதுமக்களுக்குக் கல்வி புகட்டுவதே என்பது அவரது உறுதியான நம்பிக்கையாகும். கட்டாயத் தொடக்கக் கல்வியைத் தமிழ்நாடு அறிமுகப்படுத்தி உள்ளது. பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் தரமிக்க உயர்கல்வியைப் பேணி வளர்க்க வேண்டு மென்பது அவரது பெருவிழைவாகும். உயர் கல்விக்கான மாநிலக் குழுவையும், மாநிலக் கல்வி ஆலோசனைக் குழுவையும் நிறுவிட அவரே காரணமாவார். தமிழக மக்களின் தலைவிதியை நிர்ணயித்து அறிவுப்பூர்வமாகவும் ஆக்கப்பூர்வ மாகவும் அவர்களை வழிநடத்திச் செல்பவர் புரட்சித்தலைவர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களே என்றால் மிகையாகாது.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உருக்குப் போன்ற உறுதியுடன் விளங்கும் ஒரு செயல்வேகம் மிக்க தலைவர்.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மனிதா பிமான அணுகுமுறையுடன் கூடிய ஈரநெஞ்சம் கொண்ட ஒரு மாதரசி.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு கலைவடிவங்களில் பழமையையும் புதுமையையும் சரியாக இணைக்கவல்ல திறம்படைத்த புத்தார்வம் கொண்ட கலைஞர். டாக்டர் ஜெ. ஜெயலலிதா குறிப்பிடத்தக்க தலைமைப் பண்புகளை உடையவர்.

டாக்டர் ஜெ. ஜெயலலிதா கல்வியில் சிறந்த வர். தமிழகத்தில் தன்னிகரற்ற பொறுப்புமிக்க தலைவர் என்ற முறையில், தமிழகத்தின் விரை வான வளர்ச்சிக்காகப் பாராட்டிற்குரிய பெருஞ் செயல்களை ஆற்றுவதில் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமது தெளிவான பார்வை, சிந்தனை, ஆக்கப்பூர்வமான ஆற்றல் மற்றும் நுண் மான்நுழைபுலம் ஆகியவற்றைப் பயன்படுத்தி இருக்கிறார்.

எனவே, டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர் களுக்கு, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் ஆட்சிப் பேரவையும், ஆட்சிக்குழுவும், 'டாக்டர் ஆப் லெட்டர்ஸ்' (Doctor of Letters-Homoris Causa) பட்டம் வழங்க ஒருமனதாகப் பரிந்துரைத் துள்ளன; அவர்களுக்கு அப்பட்டம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மதுரையில், தல்லாகுளம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்தை திறந்து வைத்தார் (14.7.1993).*








# இளைஞர்களின் ஆற்றலை வளர்ப்பதற்குத் தேவையான சூழலைப் பல்கலைக்கழகம் உருவாக்க வேண்டும்!

## மதுரை காமராஜர் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில்

## மாண்புமிகு முதல்வர் உரை

**ம**துரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழாவினையொட்டி நடைபெறுகின்ற இந்தச் சிறப்புப் பட்டமளிப்பு விழாவில் பேச என்னை அழைத்துப் பெருமைப்படுத்தியமைக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சிறப்புமிகு விழாவில் உங்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள என்னை அழைத்தமைக்கு இப்பல்கலைக் கழகத்தின் வேந்தரான மேதகு ஆளுநர் அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். 25 ஆண்டுகள் என்பது ஒரு நிறுவனத்தின் வரலாற்றில் குறுகிய காலமே. ஆனால், இந்தப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் நெருங்கிய தொடர்பு கொண்டு, அதன் மேம்பாட்டிற்குச் சிறந்த பங்கினை ஆற்றிய உங்களுக்கு இந்த விழா ஒரு தனி முக்கியத்துவம் வாய்ந்தது என நம்புகிறேன். ஏனெனில், இந்தப் பல்கலைக் கழகம் எந்தக் குறிக்கோள்களை முன்னிறுத்தித் தொடங்கப்பட்டதோ, அதன் அடிப்படையில் இதன் சாதனைகளை எடைபோட இது ஒரு சந்தர்ப்பமாக அமையும்.

''மதுரை காமராஜர் பல்கலைக் கழகம்'' என்ற பெயரில் மதுரை நகரின் பெயரும், பெருந்தலைவர் காமராஜர் பெயரும் அடங்கியுள்ளன. இப்படி ஓர் பெயர் வைக்கப்பட்ட காரணத்தினாலேயே இப்பல்கலைக்கழகத்தின் மதிப்பு உயர்ந்துள்ளது. தேச வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனம் என்ற குணத்தையும் பெற்றது.

அட்டை சொல்லும் செய்தி:

சரித்திரக் காலத்திற்கு முன்பிருந்தே வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு சில இந்திய நகரங்களில் மதுரையும் ஒன்று. புராணங்களில் காணப்படும் ஒரு சில மேற்கோள்கள் இந்நகரின் வளமையை உணர்த்துகின்றன. இராமாயணம், மகாபாரதம்; கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம், மெகஸ்தனிஸ் எழுதிய நூல்கள் பருத்தி ஆடைகளுக்கும், மாணிக்கங்களுக்கும் பெயர் பெற்ற பாண்டியர்களின் நகரத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கின்றன. மகாவம்சம் எனப்படும் இலங்கை நூல் மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டிய அரசனைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. புத்தரின் மகா நிர்வாணத்திற்குப் பின்பு ஆண்ட, இம் மன்னனின் காலம் கி.மு. 6-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம். கி.பி. 75-இல் பிளீனியும், கி.பி. 130-இல்

டாலமியும் பாண்டியர்களின் நகரத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள்.

மதுரை மாநகரம் சங்க காலத்தில் புகழின் உச்சிக்கே சென்றது. இந்தக் கால கட்டத்தில் பல நூற்றாண்டுகளாக மதுரை மாநகரம் கல்வி, கலாச்சாரம், நாகரிகத்தின் பெருமையாக விளங்கியது. சங்கம் என அழைக்கப்படும் தமிழ்க் கழகத்தைச் சேர்ந்த பிரபல கவிஞர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க சேவையைப் புரிந்திருக்கிறார்கள்.

பத்துப்பாட்டுகளில் மிக நீளமான கவிதையாகிய மதுரைக் காஞ்சியில் கி.பி. ஆரம்ப நூற்றாண்டுகளில் மதுரையைப் பற்றிய அழகிய வர்ணணைகள் காணப்படுகின்றன. அக்காலத்தில் நகரங்களைத் திட்டமிட்டு அமைப்பவர்களுடைய கனவாக மதுரை விளங்கியது. அமைதியான, வளமான கலாச்சாரம், கல்வி மற்றும் பக்தி நிறைந்த சூழலில் இங்கு மக்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்தினார்கள். கிறிஸ்து பிறப்பதற்கு முன்பிருந்தே மதுரை மாநகரம், சுமேரியா, பாபிலோனியா, எகிப்து, அரேபியா, கிரேக்க ரோம நாடுகளுடன் வியாபார, வணிக தொடர்புகளைக் கொண்டிருந்தது. இந்நகரின் கலை, கட்டடக் கலைகளின் கம்பீரமும், எழிலும் மக்களின் உயர்ந்த கலாச்சாரமும் மதுரைக்குத் ''தென் இந்தியாவின் ஏதென்ஸ்'' என்ற பட்டத்தைப் பெற்றுத் தந்தன. இலக்கியங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க சாதனைகளைக் கொண்டு மதுரை ஒரு பெரிய கல்வி மைய்மாக விளங்கியது என அறியலாம். இப்பொழுது மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் அகில உலகக் கல்வி மையமாக உருவாகிப் பழமையும், புதுமையும் அருமையாக அமையப்பெற்று பண்டைய பெருமையை மீண்டும் அமைத்துக் காட்டியுள்ளது என்று நான் சொன்னால் அது மிகையாகாது என்று நான் நம்புகிறேன்.

காமராஜ் என்ற பெயரே ஒரு மாபெரும் சக்தி. வாழும்போதே வரலாறான திரு. காமராஜ் அவர்கள் கூர்ந்த அரசியல் மதிநுட்பம், எதார்த்தம் ஆகியவற்றின் அடிப்படையில் சமுதாயத்தின் விதியை நிர்ணயித்த தலைவர்களுக்கு உதாரணமாக விளங்கக்கூடியவர். அவர் உண்மையிலேயே ஒரு மக்கள் தலைவர். மக்களுக்கு என்ன தேவை என்பதை உணர்ந்தவர். மக்களின் தேவைகளையும் குறிக்கோள்களையும் பிரதிபலிக்கும் கொள்கைகளையும் வகுத்தவர். இம் மாநிலத்தின் கல்வி வளர்ச்சிக்காக மகத்தான தொண்டு புரிந்தவர். அனைத்து வளர்ச்சிக்கும் வேலை வாய்ப்புக்கும் திறவுகோலாக கல்வி விளங்குவதை அவர் உணர்ந்தார். எனவே, கல்வியின் பலன்கள் குறிப்பிட்ட ஒரு சில செல்வந்தர்களின் தனிச் சொத்தாக விளங்காமல் பரம ஏழைக்கும் கிடைக்க வேண்டுமென்று விரும்பினார். இன்று நம் மாநிலத்திலுள்ள இலட்சக்கணக்கான மக்களின் முன்னேற்றத்திற்குக் காமராஜரின் தீர்க்க தரிசனமே காரணம். இன்று தமிழகத்தில் படித்த, தொழில்நுட்ப வல்லுநர்கள் ஏராளமாக உள்ளனர் என்றால் அந்தப் பெருமை, 'இலவசக் கல்வியைத்' திட்டமிட்டு அமல்படுத்திய பெருந்தலைவர் காமராஜர் அவர்களைச் சாரும். எனினும் தமது மதிய சத்துணவுத் திட்டத்தின் மூலம் பரம ஏழைகளின் குழந்தைகளுக்கும் கல்வியைத் தந்த பெருமை புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையே சாரும். இந்த மதிய உணவுத் திட்டம் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு வேளை சத்துணவையாவது உறுதியாக அளித்து; ஏழைப் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப ஊக்குவிக்கின்றது.

நமது நாட்டில் உயர்கல்வி என்பது இப்போது முக்கியமான கால கட்டத்தில் இருக்கிறது. நம்மைப் பல பிரச்சினைகள் எதிர்கொண்டுள்ளன. பல கல்வி நிறுவனங்கள் பல்வேறு பிரச்சினைகளை நன்கு அலசி நல்ல பல யோசனைகளைக் கூறியிருக்கின்றன. ஆனால் அடுத்தடுத்து வரும் அரசுகள் இவற்றை அமல்படுத்துவதில் தாமதம் காட்டின. பல சமயங்களில் அந்த அரசுகள் அரைமனதுடன் பிரச்சினையை அணுகின. இதன் விளைவாக அவர்கள், இளைஞர்களின் வாழ்க்கையுடன் விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள். இப்போதுள்ள பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வு காண, இனியும் காலதாமதம் செய்தால், நமது எதிர்கால சமுதாயமே அழிந்து போகக்கூடும்.

நமது நாட்டில் சீரிய வாழ்விற்குச்



சரியான கல்வி இன்றியமையாததாக காலகாலமாகக் கருதப்பட்டது. உயர்ப் பண்புகளைத் தேட முயற்சிக்கும்போது கல்வி முறையைப் பின்பற்றி திறமையுள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுடைய திறமைகளை வெளிப்படுத்தி மிகச் சிறந்தவைகளையே கற்பிக்க வேண்டும். ஒரு மாணவனிடத்தில் எதிர்பார்க்கப்படும் நன்னடத்தையையும் சிறந்த ஒழுக்க மேம்பாட்டினையும் இது வலியுறுத்துகின்றது. ஆன்மீக வளர்ச்சி பெற்று, வாழ்க்கையின் புனிதத்துவத்தின் மதிப்பையும் இயற்கையின் பெருமைகளையும் உணர்ந்து, தற்பெருமையைக் குறைத்து, தன்னிடம் உள்ள சிறந்தவைகளை சமுதாயத்திற்கு வழங்கிடும் வகையில் மாணவர்களை உயர்த்துவது கல்வியின் குறிக்கோளாகும்.

**மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மதுரை காமராஜ் பல்கலைக்கழகக் கட்ட நிதியாக, தமது சொந்தப் பணத்திலிருந்து ரூ.5 இலட்சத்தை, காசோலையாக, பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களிடம் வழங்கினர்.**



உபநிஷத்துக்களில் ஒரு கதை உண்டு. இதன்படி சநத்குமாரனை நாரதர் அணுகி தனக்குக் கற்றுக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். அவர் ஏற்கெனவே கற்றுக் கொண்டது என்ன என்பதை அறிய சநத்குமாரன் விரும்பினார்.

அதற்கு நாரதர் விஞ்ஞானம், இரசாயனம், வானவியல், ஜோதிடம் இயற்பியல் மற்றும் பல பாடங்களைக் கற்று இருப்பதாகக் கூறினார்.

இதற்கு சநத்குமார் பதில் கூறும் போது, அவர் எதையுமே கற்றுக் கொள்ளவில்லை என்றார். அதாவது கல்வியின் நோக்கமே, தெரியாததை அறிந்து கொள்வதுதான் என்பதை உணர்த்தும் எண்ணத்தில் அவ்வாறு கூறினார்.

ஆசிரியரும், மாணவரும் உண்மையைத் தேடும் பயணத்தை மேற்கொண்டு இருக்கிறார்கள் என்றே கருதப்படுகிறார்கள்.

இதைத்தான் பாஸ்கல் என்ற அறிஞர், ''கல்வி என்பது வான வெளியில் உள்ள வட்டம் போன்றது, அது அமைப்பில் எவ்வளவு பெரியதாக உள்ளதோ அந்த அளவு அறியாதவற்றுடன் தொடர்புடையது'' என்று எழுதினார்.

கல்வியைப் பற்றியும் கற்பதைப் பற்றியும் தமிழக மக்கள் உண்மையிலேயே தன்னிகரற்ற பழக்க வழக்கங்களை மேற்கொண்டுள்ளனர். அவர்களைப் பொறுத்த வரையில் கல்வியின் மதிப்பு வாழ்க்கையின் மதிப்புடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. ஒரு மனிதன் சரியாக வாழ, கல்வி உதவவில்லையென்றால், அது உபயோகமான கல்வியாகக் கருதப்படமாட்டாது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர், அன்றைய தமிழர்கள் நடைமுறையில் கொண்டிருந்தவைகளை ஒட்டி, கல்வியைப் புற்றி கூறிய கருத்துக்கள் இன்றும் பொருந்தி வருகின்றன.

திருவள்ளுவர் கூறினார்:

''கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்கு தக''

— கற்க வேண்டியவற்றை ஐயந்திரிபறக் கற்க. கற்றதோடு நின்று விடாமல், கற்ற நூல்கள் காட்டிய வழியில் செல்க.

கல்வி அறிவைத் தருகிறது. எவ்வளவு ஆழமாக ஒருவன் கற்கிறானோ அவ்வளவு ஆழமுடையதாக அவனது அறிவு விளங்குகிறது. இந்த அறிவு, சமுதாயத்தின் நன்மைக்காகவேயல்லாமல், தனி மனிதன் தன்னை வளப்படுத்திக் கொள்வதற்காக அல்ல!

''தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு''

— திருவள்ளுவ முனிவர் எண், எழுத்து என்னும் இரண்டைப் பற்றியும் கூறினார். இரண்டும் கற்பதற்குத் தேவையானவை என்று கருதினார். கல்வி பகுத்தறிவை வளர்க்கிறது. பகுத்தறிவு அல்லவை நீக்கவும், நல்லதைச் சேர்க்கவும் உதவுகிறது. அத்தகைய கல்வி உலகத்துச் செல்வங்களைக் காட்டிலும் உயர்ந்தது. ஏனெனில் செல்வம் அழியும். கல்வி அழிவதில்லை.

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை''

கல்வி இவ்வாறு லட்சியப் பார்வையில் வடிவமைக்கப்பட்டு வாழ்க்கையின் தேவைகளைச் சந்திக்கும் வகையில் இணைக்கப்பட்டது. பண்டைய தமிழர்கள் அடிப்படைக் கல்விக்கும், புலமையை வழங்கும் கல்விக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்திருந்தார்கள். பகுத்தறிவுத் திறனை வளர்ப்பது, முறையல்லாத நடத்தையை விலக்குவது, வாழ்க்கையின் சிறந்த பண்புகளைப் போற்றுவது, புரிந்து கொள்வது, சகமனிதர்களிடம் அன்பு காட்டுவது ஆகியவற்றிற்கு மாணவனை ஆயத்தப்படுத்துவதே கல்வி முறையின் இறுதிக் குறிக்கோளாகக் கருதப்பட்டது.

ஒரு இலட்சியச் சமுதாயத்தை நிறுவுவதற்கு உரிய சாதனமாகவே பொதுக் கல்வியைத் திருவள்ளுவர் கருதினார். தமிழ்க் கல்வியில் உள்ள சிறந்த மரபுகளின் ஒட்டு மொத்த வடிவமே திருக்குறள் ஆகும். 1857-ஆம் ஆண்டு இந்தியாவில் முதல் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டபோது, ஆங்கிலக் கல்வியை மாதிரியாகக் கொண்டு தற்போதைய உயர்தரக் கல்வி முறை இந்தியாவில் தோன்றியது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில மாணவர்களுக்கு மட்டுமே முற்போக்குக் கல்வியின் பலன்கள் கிடைப்பது, பல்கலைக் கல்வியின் முக்கியக் குறிக்கோளாகக் கருதப்பட்டது. அதனால் ஒரு சில நபர்கள் கலைகளிலும் பழம்பெரும் இலக்கியங்களிலும் நன்கு தேர்ச்சி பெற்று, சமுதாயத்தின் தலைமை ஏற்கவும், நாட்டின் நிர்வாக இயந்திரத்தில் பங்கேற்கவும் பயிற்சியளிக்கப்பட்டார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலரே பல் கலைக் கழக வளாகத்துக்குள் நுழைந்து, ஆங்கிலேயர்கள் நிர்வாகத்தை நடத்த உதவி புரியும் வகையிலும், ஆங்கிலேயர்களின் கலாச்சார, இலக்கிய, சமூக நடவடிக்கைகளுடன் ஒன்றிவிடும் விதத்திலும் உருவாக்கப்பட்டார்கள்.

நிர்வாகத்தைக் கவனிக்கும் பொறுப்பு அமைச்சுப் பணிகளில் அமர்த்தப்பட்ட ஏராளமான படித்தவர்களின் கையில் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், இந்தப் பல்கலைக் கழகங்களின் மூலமாக ஆங்கிலேயர்கள் புகுத்த விரும்பிய கல்வியே, மக்களிடையே ஒரு விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தியது. இலட்சக் கணக்கான மக்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்பியது. அதே கல்வியின் மூலம் ஆங்கிலேயர்களின் அதிகாரத்தைப் பறிப்பார்கள், என்பதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

கல்வி ஒரு சக்தி வாய்ந்த கருவி. ஒரு குறிப்பிட்ட குறிக்கோளுடனும், இலட்சியங்களுடனும் கூடிய குறுகிய வட்டத்துக்குள் மட்டும் கல்வியின் தாக்கத்தையும் செல்வாக்கையும் அடக்கிவிட முடியாது. இது, எண்ணங்களைத் தூண்டிவிட்டு ஆழமான இசை மீட்டுகின்றது. இது நமது உணர்வுகளைத் தூண்டிவிடுவதுடன், எண்ணத்தை வெளிப்படுத்த சிறந்த கருவியாக விளங்குகிறது. ஆசிரியரின் மதிநுட்பத்தையும் பாடத்திட்டங்களையும் பற்றிக் கவலைப்படாமல், சுதந்திரமாக உயர் பண்புகளைப் பற்றி ஆராய்வதற்கு உதவி செய்யும் வகையில் மனித எண்ணத்தை உருவாக்கி, கலாச்சாரத்தையும், தத்துவத்தையும் போதிக்கின்றது. இளைய சமுதாயத்தின் இலட்சியங்களைத் தடுக்காமல், அதை நிறைவேற்றும் வண்ணம் கல்வியின் கட்டமைப்புகளைச் சிறந்த மனத்துடன் தொடர்ந்து கவனிக்க, வரலாறு நமக்குக் கற்றுக் கொடுத்த இந்தப் பாடத்தை மீண்டும் மீண்டும் படிக்க வேண்டும்.

இதன் பொருள் என்னவென்றால், கீழ்க்கண்ட வினாக்களை நாம் புதிதாகக் கேட்க வேண்டும்:


- பல்கலைக்கழகத்தின் தன்மை எதுவாக இருக்க வேண்டும்?
- அதன் நோக்கம் என்ன?
- சமூக வாழ்க்கையில் அதனுடைய பங்கை அது எந்த முறையில் ஆற்ற வேண்டும்?
- மக்களாட்சியின் இலட்சியங்கள், சமத்துவச் சமுதாயம் அமைக்க வேண்டிய நிர்ப்பந்தங்களைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழகத்தின் பங்கு என்ன?

1947-இல் அலாகாபாத் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பல்கலைக்கழகத்தின் அடிப்படை நோக்கங்களையும், தேசிய வாழ்வில் அதன் பங்கு பற்றியும் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள்-

''மனிதாபிமானம், பொறுமை, பகுத்தறிவு, உண்மையைத் தேடிச் செல்லுதல் ஆகியவற்றின் சின்னமாகப் பல்கலைக் கழகம் விளங்குகிறது. உயர்ந்த நோக்கங்களை நாடி மனித வர்க்கம் தொடர்ந்து நடைபோட இது உறுதுணையாக விளங்குகிறது. பல்கலைக்கழகங்கள் இன்று, தங்களுடைய கடமைகளைச் சரியாகச் செய்துவந்தால், அவைகள் நாட்டுடனும், மக்களுடனும் இசைந்திருக்கின்றன என்று பொருள்படும்.

எனவே, நமது பல்கலைக்கழகங்கள், தாராளமான கல்வி உணர்வை மேம்படுத்துவதே அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. தலைமை ஏற்கத் தகுதி வாய்ந்த அறிவாற்றலையும், நல்லெண்ணத்தையும் கல்வியினால் பெற்ற மனிதர்களை உருவாக்குவதில் பல்கலைக் கழகங்கள் அக்கறை கொண்டுள்ளன. இத்தகைய அடிப்படை நோக்கங்களிலிருந்து வளர்ந்த பல்கலைக்கழகங்கள் கல்வி, தேர்ச்சி, தொண்டு ஆகியவைகளில் கவனம் செலுத்துகின்றன. முற்காலத்தில் கல்வி, தேர்ச்சிப் பணிகள் பல்கலைக்கழகங்களின் நடவடிக்கைகளில் முக்கியப் பங்கினை ஆற்றின. சிக்கலான, எந்திரமயமான இன்றைய சமுதாயத்தில், பணிகள் பெருமளவில் வளர்ந்துவிட்டன. கல்வி, புலமை என்னும் செயற்பாடுகள் தொண்டுப்பணிக்கு மிக அருகில் வந்துவிட்டன. அதாவது, பல்கலைக்கழகங்கள் சமுதாயத்திற்கு நிபுணர்களையும், நிபுணத்துவத்தையும் வழங்குகின்றன. தொழில் நுட்பத்துறையில் மாணவர்கள் சிறந்த தேர்ச்சியைப் பெற உதவும் வகையில் பல்கலைக்கழகங்கள் பணியாற்றுகின்றன. போட்டி நிறைந்த இந்தக் காலத்தில் பல்கலைக்கழகங்கள் சொல்லிக் கொடுக்கும் - கற்றுக்கொள்ளும் முறைகளில் சிறந்து விளங்கி முன்னோடியாகத் திகழவேண்டும். அப்பொழுதுதான் அறிவு பூர்வமான ஒரு மாணவர் தலைமையேற்று தேசிய வாழ்வின் பல்வேறு துறைகளில் மாறுதல்களைச் செய்திட முடியும்.

மேற்கூறப்பட்ட குறிக்கோள்களில் சிக்கலான முறைகள் ஒரு பக்கமிருக்க, பல்கலைக்கழகங்கள், இடைவிடாது மென்மேலும் அறிவைத்தேடி, செல்லும் அறிவுஜீவிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் கொண்டதொரு சமுதாயமாக இயங்கும். இன்றைய கலாச்சார - பரிமாற்றத்தில் உள்ள முக்கியப் பிரச்சினைகளுடன் தொடர்பு கொண்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட, ஒரு சிறப்புக் குழுவாக இருக்கும். வளர்ந்து விட்ட மனித அறிவாற்றல், விஞ்ஞானம் தொழில் நுட்பம் ஏற்படுத்திய மிகுந்த பாதிப்பு ஆகியவற்றால், இந்த கலாச்சார பரிமாற்றத்தைப் புதிய கோணத்தில் ஆராய்ந்து முற்றிலும் மாறுபட்ட விதத்தில் பல்கலைக்கழகங்களை நோக்குவது அவசியமாகிறது. பல்கலைக்கழகத்தைப் பற்றி எந்த ஒரு கண்ணோட்டத்தை நாம் வளர்த்துக் கொண்டாலும், சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும். நாட்டின் நிகழ்காலத் தேவைகளுக்கு மட்டுமல்லாமல் எதிர்காலத் தேவைக்குப் பொருந்துவனவாக இருத்தல் வேண்டும். விஞ்ஞானம், தொழில்நுட்ப மாறுதல்களின் பின்னணியில், தேசத்தின் நலனுக்காக தம்முடைய பங்கை ஆற்றும் வகையில் தனி நபர்களின் அறிவாற்றலையும், இதர பண்புகளையும் வளர்க்கும் நோக்கோடு, மகாத்மா காந்தி, ஸ்ரீ அரவிந்தர், ரவீந்திரநாத் தாகூர் போன்ற நம் நாட்டுப் பெருந்தலைவர்கள் பல்கலைக்கழக கல்வியைப் பற்றிப் பல்வேறு வகையான யோசனைகளைத் தெரிவித்துள்ளார்கள். இந்த அனைத்து மாதிரிகளையும் பரிசீலித்து, கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவை ஒருங்கே இணைக்கப்பட்ட ஒரு முறையை உருவாக்கி, சமுதாயத்தில் தலைமையக



விலங்குகளில் உயர்ந்தது சிங்கம். அதைப் போல மனிதர்களில் சிறந்தவன் சிறந்த சிந்தனையாளனே.

- தந்தை பெரியார்

**• கல்வி கற்பிப்பது என்பது வெறும் அறிவைப் பெற்று ஆங்காங்கே காணப்படும் செய்திகளை, தகவல்களைச் சேகரிப்பது என்ற எல்லையில் வெறுமனே முடிந்து விடுவது அல்ல. வாழ்க்கையின் முதன்மையை, முழுமையை, முழுவதுமாக உணர்ந்து கொண்டு, சிறந்த மனிதனாக மாறுவதற்கு நல்ல பயிற்சியை வழங்குவதுதான் கல்வி என்று நாம் கருத வேண்டும். அந்த வகையில் வாழ்வின் அனுபவமே ஒரு வகையில் நாம் கற்கும் கல்வி என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.**



மாக, ஒரு புதிய பாதையைப் படைப்பதாக, பரிசோதனை செய்வதாக, குறிப்பிட்ட சில அடிப்படைப் பண்புகளை நிலை நிறுத்துவதாகப் ` பல்கலைக்கழகம் அமைகிறது.

அதே சமயத்தில் பல்கலைக்கழகம் கற்றுக் கொடுக்கின்ற கற்றுக் கொள்கிற முறையினைத் தொடரவேண்டும். உயர்தர கற்றுத்தரும் சாதனங்கள் பல்கலைக் கழகத்தில் கிடைக்க வகை செய்ய வேண்டும். உயர் கல்வியில் கற்றுக் கொடுக்கின்ற, கற்றுக் கொள்கிற முறையின் சிறப்பு, செயற்பாடு அல்லது சாதனை ஆகியவை முற்றிலும் மாணவர்களின் தரத்தைப் பொறுத்தே அமைகின்றன. உன்னதத்தை நாடிச் செல்லுதல் என்பதே தூண்டுகோலாக வேண்டும். இவைகளில் உன்னதம் என்பது, உயர் கல்வியில் மனித சக்தி, சாதனங்கள், போதுமான அடிப்படை வசதிகள், தகுதி வாய்ந்த தங்களை அர்ப்பணித்துக் கொண்ட ஆசிரியர்கள், ஆர்வமும் கடமை உணர்வுமிக்க மாணவர்கள், திறமையான கற்பித்தல், திறமையான நிர்வாகம், கல்விக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளுதல், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே சுமூகமான உறவு நிலவுதல் என்றே பொருள்படும். உயர்நிலைச் செயற்பாடு மற்றும் குறிக்கோள் என்ற சூழலில்தான் தரமான உயர்கல்வி எய்திட இயலும். இம்முறையில் வடிவமைக்கப்பட்ட தரத்தை சற்றும் குறைத்துக் கொள்ளவே முடியாது. ஏனெனில் கல்விக்காக சமுதாயம் அதிக செலவு செய்கிறது. அதற்கு ஈடாக சமுதாயத்திற்குச் சேவை, செயல்திறன் வடிவில் பலன்கள் இருந்தாக வேண்டும். துரதிர்ஷ்டவசமாக இந்தக் கருத்து பெரும்பாலும் ஒதுக்கப்படுகிறது. அண்மைக் காலத்தில் படித்தவர்கள் எண்ணிக்கை மட்டுமே கருத்தில் கொள்ளப்படுகிறது. ஆனால் உயர்கல்வி மட்டத்தில் படித்தவர்களின் தரம் நிச்சயமாக வலியுறுத்தப்படும். ஏனெனில், சமுதாயத்தின் நாளைய தலைவர்களைப் பல்கலைக்கழகம்தான் உருவாக்குகின்றது. விஞ்ஞான தொழில் நுட்ப கால கட்டமான இத்தருணத்தில் கல்வியின் அனைத்துத் துறையிலும் பல்கலைக்கழகங்களிலிருந்து படித்துவரும் மாணவர்கள் முன்னணியில் இருக்க வேண்டும் என்பதே பொருளாகும். எனவே தரம் என்பது மிக முக்கியமான குறிக்கோளாகும். ஆனால் பல்கலைக் கழகங்களிடமிருந்து மாணவர்கள் வேறு ஒன்றை எதிர்பார்க்கிறார்கள். பெரும்பாலான மாணவர்களுக்குப் பல்கலைக் கழகம் பட்டம் நல்ல வேலை பெற ஒரு பாஸ்போர்ட் என்றே கருதுகிறார்கள். ஒரு வேலையைப் பெறுவதற்காகத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் பல்கலைக்கழகம் பயிற்சியளிக்கும் என்றே எதிர்பார்க்கிறார்கள். ஆனால் நடைமுறையில் அதுபோல் நடைபெறுவது இல்லை. மாணவர்களின் தேவையையோ, சமுதாயத்தின் தேவைகளையோ பூர்த்தி செய்யும் அளவிற்குப் பல்கலைக் கழகத்தின் செயல்பாடுகள் அமைவதில்லை. எனவே அனைத்துத் தரப்பிலும் ஒரு விரக்தி ஏற்பட்டுள்ளது.

இந்த உணர்வுகளை திரு வில் டுராண்ட் பொருத்தமாக வர்ணித்துள்ளார்.

''வகுப்பறையை விட விளையாட்டு மைதானத்தையும், தத்துவத்தை விட பந்தாட்டங்களையும் இளைஞர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். கண்ணாடி அணிந்த ஒரு சீன நாட்டு மாணவன், அமெரிக்கப் பல்கலைக் கழகத்தைப் பற்றி ''உடல் வலிமையற்றவர்களுக்குப் பாடங்களைச் சொல்லித்தர சந்தர்ப்பங்கள் வழங்கும் ஒரு விளையாட்டுச் சங்கம்'' என்று வர்ணித்தபோது, அனைவரும் நினைப்பதைப் போல அந்தக் கருத்து அவ்வளவு மோசமானதல்ல. வில் டுராண்ட் அமெரிக்க மாணவனைக் குறிப்பிட்டுச் சொன்னார். இந்தியாவில் இந்திய மாணவன் விளையாட்டு மைதானத்தையும் விரும்புவதில்லை.

ஒரு மனிதனின் வாழ்வில் இளமை என்பது சாதனைகள் புரிய வேண்டிய பருவம். வாழ்க்கையின் அந்தக் கால கட்டத்தில் நிறைய எதிர்பார்ப்புகள் இருக்கும். இலட்சிய உணர்வுகள் பிராதானமாக இருக்கும். பண்புகளை அளக்கும் கருவியில் எது சரி எது தவறு என்பது உயர்நிலையில் வைக்கப்படும். சேவை மனப்பான்மை இயற்கையாகவே வரும். உணர்ச்சிகளும், தவறான கருத்துக்களும் பகுத்தறிவையையும், நடு நிலையையும் தாண்டிச் செல்வதில்லை.

அறிவாற்றல் மிக உயர்ந்த நிலையிலும், பகுத்துப் பார்க்கும் ஆர்வம் அதிகமாகவும் உள்ளன. இயற்கையிலேயே அறிவுத்தாகம் ஏற்படுகிறது. இளைஞர்கள் இயற்கையாகவே வெளிப்படுத்தும் இத்தகைய ஆற்றலை வெளிக் கொணர்வதே சமுதாயத்தின் முக்கியக் கடமையாகும். இளைஞர்கள் ஆற்றலை வளர்ப்பதற்குத் தேவையான சூழ்நிலையைப் பல்கலைக்கழகம் உருவாக்க வேண்டும் எனச் சமுதாயம் எதிர்பார்க்கிறது. இத்தகைய பொறுப்பைச் சமாளிக்க பல்கலைக்கழகம், போதிய வசதிகளைப் பெற்றிராத காரணத்தால், விரைவில் வெறுப்பும், ஏமாற்றமுமே வந்தடைகின்றன. நமது நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள், தற்போதுள்ள அதன் கட்டமைப்பில், இளைஞர்களின் இலட்சியங்களைப் பிரதிபலிப்பதாக இல்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தமக்கே இயல்பான அமைப்பு, சிந்தனைப் போக்கு மாணவரின் கவனத்தை ஈர்ப்பதற்குப் பதில் அதனை ஒதுக்கித் தள்ளுகிற செயல்பாடு இவற்றால் பல்கலைக்கழகம் சிரமப்படுவதாகத் தோன்றுகிறது. வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றவோ, ஈர்ப்புடையதாக ஆக்கவோ அதிக அளவிற்குச் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையிலோ பல்கலைக்கழகங்கள் செயல்படவில்லை. இதைச் சொல்லும்பொழுது, எந்த ஒரு குறிப்பிட்டப் பல்கலைக் கழகத்தையும், மனதில் கொள்ளாமல் பொதுவான கருத்தாகச் சொல்லுகிறேன். இந்தப் பிரச்சினையை அதிகப்படியான முக்கியத்துவத்துடன் கவனிக்க வேண்டும். பல்கலைக்கழகக் கல்வி இப்பொழுது இந்தியாவில் சமூகம் மற்றும் அரசியல் விமர்சனத்தை நோக்கியுள்ளது. பாட

முறை வைப்பிலும் வலியுறுத்தும் பண்பிலும் செயல்படும் முறையிலும் முறையாகப் பிரதிபலிக்கும் வண்ணம் தேசிய எதார்த்தங்களைப் பல்கலைக்கழகங்கள் விரைவாகவோ தாமதமாகவோ உணர்ந்து கொண்டுதான் தீரவேண்டும்.

உதாரணத்திற்கு, படித்தவர்களிடையே உள்ள உண்மையான பிரச்சினையான வேலையின்மையை எடுத்துக் கொள்வோம். இந்தப் பிரச்சினை நம்மால் உருவாக்கப்பட்ட பிரச்சினை என்பது தெளிவாகத் தெரிகிறது. பல்கலைக்கழகப் பட்டம், வேலைவாய்ப்பைப் பெறும் வழி என்ற வகையில் பெறப்படுகிறது. ஆனால், வேலைவாய்ப்பு என்பது அப்படி நடைமுறையில் இல்லை. மாணவர்கள் பல்கலைக்கழக வாயிலை விட்டு வரும்வரை அதை உணருவதில்லை. இளைஞர்கள் அரசாங்கத்திலோ அல்லது தனியார் துறையிலோ வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெற முந்துகிறார்கள். அரசாங்க வேலைகள் பல்கலைக்கழகங்கள் உற்பத்தி செய்பவர்களுக்குச் சிறிய அளவிலேயே கிடைக்கின்றன. தனியார் துறைகள் பணிக்குத் தேர்ந்தெடுக்க ஏற்றுக் கொள்ளும் முறைகள், வெறும் பட்டங்களை மட்டும் பெற்றுள்ள பெரும்பான்மை மாணவர்களுக்குப் பலனளிப்பதில்லை. இதன் விளைவாக, வேலைவாய்ப்பில்லாத படித்தவர்களின் எண்ணிக்கை எச்சரிக்கும் அளவு உயர்கிறது. மாணவர்கள் விரக்தியடைகிறார்கள். தேசிய முயற்சி வீணாகிறது. இன்று தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள முப்பத்து எட்டு இலட்சம் இளைஞர்களில் 22 இலட்சம் பேர் படித்தவர்கள். ஒவ்வொரு ஆண்டும் 5 இலட்சம் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்கிறார்கள். அவர்களில் 1.41 இலட்சம் இளைஞர்கள் புகுமுக வகுப்பு அல்லது அதற்கு இணையான படிப்பும், ஒரு இலட்சம் இளைஞர்கள் பட்டப் படிப்பும், மேற்பட்ட படிப்பும் படித்தவர்கள். வேலைவாய்ப்பு அலுவலகங்களிலுள்ள பதிவேடுகள் உண்மையிலேயே நிலைமையின் முழு அபாயத்தைப் பிரதிபலிக்கவில்லை. தொழில்நுட்பத் தகுதியுடைய இளைஞர்களிடையே உள்ள வேலையில்லாப் பிரச்சினை கடுமையாக உள்ளது. நமது நாட்டில் நடைபெறும் பொருளாதார வளர்ச்சியின் தரத்தையும் பிரதிபலிப்பதாக உள்ளது. மற்ற மாநிலங்களிலும் ஏறக்குறைய இந்நிலைமைதான் என நிச்சயமாகக் கூறுவேன். இது எப்படிப்பட்ட கல்வியைப் பல்கலைக்கழகங்கள் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படைக் கேள்வியை எழுப்புகிறது. இதனால் வளங்கள் இழக்கப்படாமல் வேலைவாய்ப்பிற்கான அணுகுமுறைகள் எப்போதும் கிடைக்கும் வண்ணம் இருப்பின், இளைஞர்கள் வாழ்க்கை நீரோட்டத்தில், நம்பிக்கையுடனும், சிறப்புடனும் தடைபடாமல் நுழைய முடியும்.

எனவே, இன்று இந்தியாவில் நாம் உருவாக்கிவரும் சமுதாயம் அளிக்கும் எண்ணற்ற வேலைகளுக்குப் பட்டம் ஒரு கட்டாயத் தேவையில்லை. உயர்ந்த படிப்போ, தொழில்நுட்பத் தகுதிகளோ தேவையில்லை. நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு நிலையைத் தொடர்புபடுத்தி பல்கலைக்கழகக் கல்வியைக் கவனித்து, இது சம்பந்தமாகப் பல்கலைக் கழகங்களின் இலக்கினைத் தெளிவாக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று நான் நினைக்கிறேன். பல்கலைக்கழகங்கள் வேலைகள் உருவாக்கும் தொழிற்சாலை மாதிரி இருப்பது தவறு என்று நான் நினைக்கிறேன். நம்முடைய நாடு அளிக்கும் வேலைகளுக்கு நம்முடைய இளைஞர்களைத் தகுதியாக்குவதற்கு, பலவேறு வகையான நிறுவங்களின் செயல்பாடுகள் கண்டிப்பாக இருக்க வேண்டும். இந்த உண்மை ஆரம்பத்திலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டு, சீர்திருத்தங்கள் தொடக்கப்பள்ளி அளவிலேயே தொடங்க வேண்டும்.

கோத்தாரி ஆணைக்குழுவும், இந்திய அரசின் புதிய கல்விக் கொள்கையும், இது தொடர்பாகச் சந்தேகமில்லாமல் பல பரிந்துரைகளைச் செய்துள்ளன. ஆனால், மேற்கொண்டு தொழில்நுட்பப் பயிற்சியும், மற்ற நிறுவனங்களின் தேவைகளையும் சார்ந்திருக்கின்ற வேலைவாய்ப்புகளுக்கான பட்டதாரி இளைஞர்களைத்தான் பல்கலைக் கழகங்கள் உற்பத்தி செய்கின்றன. சமுதாயம் பெருமிதப் பட்டுக்கொள்வதற்கு மட்டும் அதிகப் பட்டதாரிகளை உருவாக்கும் பொறுப்பினைப் பல்கலைக்கழகங்களின்மீது சுமத்தக் கூடாது என்பதே விடையாக இருக்கும் என நான் கருதுகிறேன். படித்தவர்களை அதிக எண்ணிக்கையில் வெளிக் கொணரும் அளவிலும் இருக்கக்கூடாது. வேகமாக மாறிவரும் சமுதாயத்தில் வேலைவாய்ப்பின் தேவைகள் பல்கலைக் கழகங்களைத் தவிர, தகுந்த நிறுவனங்களினால் சமாளிக்கப்பட வேண்டும்.

மேற்படிப்பு என்பது வேலைவாய்ப்பில் தன் பங்கினைச் செலுத்துகிறது. ஆனால், பலவேறு மட்டங்களில் எண்ணிக்கையில் எந்தத் தாக்கத்தையும் உண்டாக்குவதில்லை. அது மறைமுகமாக, பலன்களை உறுதி செய்கிறது. மேலும், நடைமுறையில் வேலைவாய்ப்பின்மைப் பிரச்சினை படித்தவர்களிடையே மிகக் கடுமையாக உள்ளதைக் காண்கிறோம். படித்த இளைஞர்கள் தாங்கள் பெற விரும்புகின்ற வேலை பெற இயலாமையால் விரக்தி அடைகின்றார்கள். படித்த இளைஞர்கள் ஒரு குறிப்பிட்ட வகையான வேலைகளைப் பார்க்க விரும்புகிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் அரசாங்கத்திலேயோ அல்லது வியாபாரத்திலேயோ ஈடுபட விரும்புகிறார்கள். அவர்கள் பல்கலைக்கழகங்களில் பட்டத்தை நாடுவது, அவர்கள் படிக்கும் பாடங்களிலும் ஆர்வத்தின் காரணமாக அன்று. பட்டப்படிப்பு என்பது அரசாங்கத்திலோ, வியாபாரத்திலோ, வங்கியிலோ வேலைக்காக விண்ணப்பிக்கும்போது ஒரு தேவையான தகுதியாகும். ஆனால், பல்கலைக்கழகங்களிலிருந்து வெளிவரும் பட்டதாரிகளை ஏற்றுக் கொள்ள இந்தப் பகுதிகளில் போதுமான வேலைகள் இல்லை. எனவே, பல்கலைக்கழகக் கல்வியின் வெளிப்பார்வையில் ஒரு தீவிர மாற்றம் வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

பல்கலைக்கழகங்களின் முக்கிய கவனம், குறிப்பாகப் பல்கலைக்கழகங்களின் எல்லைக்குள் வருகின்ற தொழில்நுட்ப நிறுவனங்களின் முக்கிய கவனம் மாணவர்களைச் சொந்தமாகப் புதிய முயற்சிகளை மேற்கொள்ள ஆயத்தப் படுத்த வேண்டும் என நான் நினைக்கிறேன்.

மூடநம்பிக்கையும், குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல் பகைகள்.

- தந்தை பெரியார்

சுயவேலை, பலவகையில் அரிய அனுபவமாகவும், பலனளிக்கத்தக்க வகையிலும் இருக்கும். தனி நபரின் முழுத்திறமையும் பயன்படக்கூடிய சிறு தொழில்கள் மூலம் சுயவேலைவாய்ப்பினைப் பெறலாம்.

இந்தியா வேகமாகத் தொழில்மயமாகி வருவது புதிய வேலைவாய்ப்புகள் பெருகும்வண்ணம் அமைந்து வருகிறது. புதிய வேலைவாய்ப்புகளுக்கான வழிகளை ஆய்ந்து மாணவர்கள் அவைகளுக்குத் தங்களைத் தகுதியானவர்களாக்கிக் கொள்ள உதவுவது பல்கலைக்கழகங்களின் பொறுப்பாகும். மேல் படிப்பு அமைப்பு நம்முடைய பட்டதாரிகளுக்குத் தன்னம்பிக்கை அளிக்க உதவ முடியும். சரியான அளவு தன்னம்பிக்கையையும், ஒழுக்க உணர்வையும் உருவாக்கி முக்கியமான ஒழுங்கான முன்னேற்றத்தைத் தேசத்திற்கு அளிக்க முடியும் இது தொடர்பாக, தற்போது நடத்தப்பெறும் பல்கலைக்கழகக் கல்வியின் செயல்முறைகள் விமரிசனத்திற்கு உள்ளாக வேண்டியுள்ளது.

புதிய தகவல்களையும் அது தொடர்பான விளக்கங்களையும் கொண்டதாக, பாடத் திட்டங்களும் அதனைப் போதிக்கும் முறைகளும் கவனமாக மதிப்பிடப்பட்டு மறுவடிவம் அளிக்கப்பட வேண்டும்.

போதிக்கும் துறைகள் மேல்படிப்பு முறையில் முக்கியப் பங்கினை வகிக்க வேண்டும். எல்லாப் படிப்பும் ஆசிரியருக்கும், சொல்லிக் கொடுப்பவருக்கும் இடையே அமையும் பேச்சுக்கள்தான். ஆசிரியரின் நோக்கம் மாணவர்களின் திறமையை ஊக்கப்படுத்தி, அவர்களிடையே பாடங்களின் மதிப்புமிக்க உணர்வுகளை ஊட்டுவதுதான். தகவல்களின் தொகுப்பாக இருப்பது இறுதியாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. அதைவிட ஆசிரியர்களின் தனித்தன்மையும், தூண்டும் உணர்வும்தான் மாணவர்களின் மனதில் செயலாக்கத்தை உண்டாக்குகின்றன. உணர்ந்த எண்ணங்களும், அறிவுத் திறனும்தான் போதிக்கும் முறைக்கு ஒரு முக்கியத் தேவையாகும் பிரச்சினை. போதுமான ஊதியம் வழங்குவதோ அல்லது பரிசுகள் பெறுவதோ அல்ல. தகுதியானவர்கள் போதுமான அளவு கிடைப்பதுதான் பிரச்சினை. அவர்கள் ஆசிரியப் பணியை விரும்பத்தக்க உழைப்பாகவும், சமுதாயத் தொண்டாகவும், நாட்டுப் பற்றாகவும், ஒரு அறிவுபூர்வ முயற்சியாகவும் கொண்டிருப்பின் மாணவர்களும், ஆசிரியர்களும், தாங்கள் விரிவாகக் கற்றுக் கொள்ள உதவும்.

தமிழக அரசு மேல்படிப்புப் பற்றிய விஷயங்களில் முழுமையான அக்கறை காட்டி வருகிறது என்பதை நான் சொல்லித்தானாகவேண்டும். மாநில முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு உயர் கல்விக்கான மாநிலக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடங்கி வைக்கும்போது, ''மற்ற நாடுகளில் காணப்படும் அற்புத வளர்ச்சியுடன் இணைந்து நமது கல்வி முறையின் இலக்குகள் தொடர அவசியமான தேவைகள் உள்ளன. அறிவியல் நாட்டம், தகவல்கள், மேல்தகவல்கள் பெறுவதில் கவனம் செலுத்த வேண்டும். அப்படிச் செய்யின் புதிய கண்டுபிடிப்புகளும் முன்னேற்றங்களும் மனித இனத்தின் யதார்த்த நலனில் நேரடியாகப் பங்கு பெற முடியும்''.

ஆசிரியர்களின் திறமைகளை உயர்த்தவும், மாணவர்களிடையே ஒழுக்க உணர்வுகளை விதைக்கவும், நமது சமுதாயத்தின் சமூக பொருளாதார மாற்றங்களில் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்க ஆராய்ச்சியாளர்களை அழைக்க வேண்டிய தேவையை நான் வலியுறுத்தினேன். இந்தக் குழு சமீபத்தில்தான் செயல்படத் தொடங்கியுள்ளது.



**எழுத்தறிவு இல்லாமலே, எல்லாச் செயல்களையும் சாதிப்பது என்பது முடியாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். கல்வி ஒருவனுடைய அறிவைப் பெருக்கும், கூர்மையாக்கும், நற்செயல்களைச் செய்யத் தூண்டும்.**

உயர் கல்விக்கான நிறுவனங்களிடையே ஒத்துழைப்பை மேம்படுத்தவும், பாடத்திட்ட வளர்ச்சியில் புதுமைகளை வளர்த்து உற்சாகமூட்டவும், ஆசிரியர்களுக்கு உயர்பயிற்சிகள் வழங்கவும், திறமைகள் இருக்குமிடங்களை இனங்கண்டு உற்சாகமூட்டி, உலகத்தில் சிறந்தவைகளைப் பெற்று கல்வியின் உயர்ந்த தரங்களை வளர்க்க உதவவும் இந்தக்குழு ஒரு சிறந்த பங்கை வகிக்கும் என நாம் நம்புகிறேன்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் கற்பிப்பதிலும், கற்றுக் கொள்வதிலும் புகழ்பெற்ற மரபினை நிலைநிறுத்தியுள்ளதை நான் அறிவேன். புகழ்மிக்க ஆசிரியர்களையும், மாணவர்களையும் அது உருவாக்கியுள்ளது. அவர்கள் உலகமெங்கும் தாங்கள் சிறப்பு பெற்ற துறையில் திறம்படச் செயலாற்றியுள்ளார்கள். தமது சமுதாயத்திற்கு இன்றியமையாத அடிப்படை மதிப்புகளின் முக்கியத்துவத்தைத் தொடர்ந்து, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் உறுதி செய்து வருகிறது என்பதை நான் அறிவேன். தெளிவாகப் புரிந்து கொள்ளாமல் அடிப்படை மதிப்புகளை ஏற்றுக் கொள்ளாமல் எவ்வளவுதான் முன்னேறிய கல்வி என்றாலும், நோக்கம் இழந்து வறண்டுவிடும்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகச் சிறப்புப் பட்டமளிப்பு விழாவில் புத்தகப் போர்க்களத்தில் நீங்கள் அடைந்த புகழையும், வெற்றியையும் பாராட்டுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இப்பொழுது மிகப்பெரிய போர்க்களம் உங்கள் முன்னே இருக்கிறது. வாழ்க்கை என்னும் போர்க்களம். நீங்கள் நுழையவுள்ள உலகம் சவால்களும், துன்பங்களும் நிறைந்தது. உங்களைச் சுற்றி சாதாரணத் தரங்களை அடைவதற்கான ஓயாத ஓட்டத்தைக் காண்பீர்கள். வித்தியாசப்பட்ட மனித உணர்ச்சிகள் மற்றும் தவறான கருத்துக்களின் தாக்கத்தை நீங்கள் உணர்வீர்கள். உங்களைக் கலக்கமுறச் செய்யும் புதிய பிரச்சினைகளை நீங்கள் சந்திக்க வேண்டியிருக்கும். எப்படி இருப்பினும் சோர்வடையத் தேவையில்லை. உங்களது மாணவப் பருவத்தில் நீங்கள் பெற்றுள்ள புரிந்து கொள்ளும் சக்தியும், அறிவுத் திறனும் நம்பிக்கையும், துணிவும் கொண்டு எதிர் வரும் வாழ்க்கைப் போரைச் சந்திக்க உதவும். இப்பொழுது உலகத்தைச் சந்தித்து வாழ்க்கையெனும் போர்க்களத்தில் வெற்றிகரமாகப் போரிடலாம். என்னுடைய சிறிய அறிவுரை,

''புதிய கருத்துக்களை வரவேற்பவராக இருங்கள்;

உங்களையே நீங்கள் சார்ந்திருக்கக் கற்றுக் கொள்ளுங்கள்''

இப்படித்தான் மிகப்பெரிய தலைவர்களான பெருந்தலைவர் காமராஜர் மற்றும் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகியோர் வாழ்க்கையில் முன்னுக்கு வந்துள்ளார்கள்.

மேதகு ஆளுநர் அவர்கள், என்னை அழைத்து இந்தச் சிறப்புப் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளச் செய்ததற்கு, எனது நன்றியை மீண்டும் காணிக்கையாக்குகிறேன்.

இப்பொழுது ஆங்கிலப் புலவர் திரு ஹெச்.டபிள்யூ. லாங்பெலோ அவர்களின் பாடலிலிருந்து ஒரு மேற்கோள் காட்டி உரையை நிறைவு செய்கிறேன்.

''உலகமெனும் விரிந்த போர்க்களப்
பாசறையில்
வாழ்க்கையின் திறந்த வெளியில்
ஊமைபோல் இருக்காதே! ஓடுகின்ற
மந்தையாகாதே!
போராட்டத்தில் கதாநாயகனாக இரு!
எவ்வளவு இனிமையாக இருப்பினும்
எதிர்காலத்தை நம்பாதே!
இறந்தகாலம் இறந்ததைப் புதைக்கட்டும்.
மனதை உன்னுள் இருத்தி கடவுளை
நினைத்து
இன்றே இன்றைய தினமே செயல்படு!
பெரிய மனிதர்களின் வாழ்க்கை நமக்கு
நினைவூட்டுகிறது.
நாம் நம்முடைய வாழ்க்கையை
உயர்வாக்க முடியும்
நாம் வெளியேறும்போது, நமக்குப்
பின்னர் விட்டுச் செல்வது
நமது காலத்திய மண்ணில் நம்
அடிச்சுவடுகள்!

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழாவின் மகிழ்ச்சியான இந்நேரத்தில், வெள்ளிவிழா நிறைவு பெறுவதையொட்டி, இதன் நினைவாக, ஒரு புதிய கட்டடம், ஒரு புதிய மாநாட்டுக் கூடம் கட்டப் பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளதாக நான் அறிகிறேன்.

பல்கலைக்கழகக் கட்ட நிதிக்காக, அதனுடைய புதிய வெள்ளிவிழா மாநாட்டுக் கூடத்துக்காக என்னுடைய தனிப்பட்ட கொடையாக என்னுடைய பங்காக ரூபாய் ஐந்து இலட்சம் அளிப்பதை அறிவிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். மதுரை-காமராஜர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் குத்தாலிங்கம் அவர்களை, அதற்கான காசோலையைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## சென்னை நகரில் குடிநீர் விநியோகம்:

## மாண்புமிகு முதல்வர் ஆலோசனை

சென்னை நகரில் தற்போது நிலவி வரும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு குறித்தும், இதை நிவர்த்தி செய்ய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் 23.6.93 அன்று செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விரிவாக ஆலோசனை நடத்தினார்.

தற்போது சென்னையில் குழாய் மூலமாக இரண்டு நாட்களுக்கு ஒருமுறை 35 மில்லியன் காலன் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர, 276 லாரிகள் மற்றும் 285 டிராக்டர்கள் மூலமாகவும் நாள்தோறும் சுமார் 9 மில்லியன் காலன் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, நகரின் தெருக்களில் 4,795 இரும்புத் தொட்டிகள் வைக்கப்பட்டு அதன் மூலம் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது.

நெய்வேலியிலிருந்து தற்போது நாள்தோறும் 225 லாரிகள் மூலமாகச் சென்னைக்கு 25 இலட்சம் லிட்டர் தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. இந்த நீரின் அளவை அதிகரிப்பதற்காக, அடுத்த ஒரு வாரத்திற்குள் லாரிகளின் எண்ணிக்கையை 500 ஆக உயர்த்தும்படி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

நகரில் தற்போதுள்ள குடிநீர்த் தொட்டிகளின் எண்ணிக்கையைக் குறுகிய காலத்திற்குள் 7,000 ஆக உயர்த்தும்படியாகவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதுதவிர, நகரின் தெருக்களில் தண்ணீர் வழங்கிவரும் டிராக்டர்களின் எண்ணிக்கையை விரைவில் இரட்டிப்பாக்குமாறும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணைபிறப்பித்தார்.

மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின்படி தற்போது லாரிகள் மற்றும் டிராக்டர்களில் தண்ணீர் நிரப்பும் இடங்களின் எண்ணிக்கையை உடனடியாக உயர்த்துவதற்கு, சென்னைக் குடிநீர் வாரியம் உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளும்.

பொதுமக்களிடமிருந்து தண்ணீர் ஒழுங்கான நேரத்தில், போதிய அளவில் வருவதில்லை என்ற புகார்கள் வருவதைக் குறிப்பிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், இது போன்ற புகார்கள் எழாவண்ணம் கண்காணிப்புப் பணியைத் தீவிரப் படுத்த வேண்டும் என்றும் ஆணையிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடத்திய ஆய்வில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர், தலைமைச் செயலர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



# கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் வறுமை நீங்கிடவும், வேலைவாய்ப்புகள் பெருகிடவும் தொடர்ந்து பாடுபடுவோம்!

**— மாண்புமிகு முதல்வர் உரை**

"கிராமங்களில் தான் இந்தியா வாழ்ந்துகொண்டு இருக்கிறது" என்று, மகாத்மா காந்தி அவர்கள் கூறியது, முற்றிலும் உண்மையே! கிராமங்கள்தான் நமது நாட்டின் உயிர்நாடி. கிராமங்களின் பொருளாதாரச் சூழ்நிலையும், சுகாதாரச் சூழ்நிலையும் மேம்படும்போது தான், நமது நாடு முழுமையான வளர்ச்சி அடைந்ததாக, நாம் பெருமைப்பட முடியும். அந்த வகையில், எனது தலைமையிலான இந்த அரசு, கிராம மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக, பல நல்ல திட்டங்களைத் தீட்டி, முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

கிராமப் பொருளாதாரத்தில் மேம்பாட்டிற்கு, அடிப்படையானவைகளுள், கால்நடைச் செல்வமும் ஒன்று; எனவே, அந்தக் கால்நடைச் செல்வங்களின் உற்பத்திப் பெருக்க, இன உயர்வு, நவீன முறைச் சிகிச்சை, ஊட்டமுள்ள கால்நடைத் தீவனங்கள், கால்நடைப் பராமரிப்பு போன்ற பல துறைகளில், இந்த அரசு தனிக் கவனம் செலுத்தி வருகின்றது.

தமிழக அரசால் நடத்தப்பட்டு வரும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், 1903-ஆம் ஆண்டு, ஒரு சாதாரண கால்நடை மருத்துவக் கல்லூரியாக, சென்னையில் தோன்றியது. அன்று விதைக்கப்பட்ட இந்த விதை, இன்று பல விழுதுகளைக் கொண்ட, பெரிய ஆலமரமாக வளர்ந்துள்ளது. காலத்தின் தேவைக்கு ஏற்ப, மக்களின் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதால், ஒரு சாதாரணக் கல்லூரி, இன்று ஒரு பெரிய பல்கலைக் கழகமாக உருவெடுத்துள்ளது.

சேலம் நாமக்கல் பகுதியில், கோழிப் பண்ணைகள் தொடங்கப்பட்டவுடன், அந்தப் பகுதி மக்களின் பொருளாதார நிலையை, உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்துடன், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 1985-ஆம் ஆண்டு நாமக்கல் நகரில், ஒரு 'கால்நடை மருத்துவக் கல்லூரியை' நிறுவிட ஆணையிட்டார்.

கிராமப்புற மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் பணியில், கால்நடை மருத்துவக் கல்லூரியின் பங்கை, நன்கு உணர்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 'கால்நடை மருத்துவம்', மற்றும் கால்நடை மருத்துவ அறிவியலுக்கு' என, ஒரு தனிப் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும், என்ற கருத்தினை வெளியிட்டார்கள். அந்தச் சீரிய சிந்தனையின் செயல் வடிவம் தான் இன்றைய கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம். இந்தப் பல்கலைக் கழகம், இந்தியத் துணைக் கண்டத்தில் அமைந்த, முதலாவது கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் என்பதோடு, உலகிலேயே ஆறாவது கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், என்ற பெருமையும் பெற்றுள்ளது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க, இந்தப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் கட்டடங்களுக்கு, இன்று அடிக்கல் நாட்டியதில், நான் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் அடைகிறேன்.

இந்தியாவில் ஆண்டுதோறும், கால்நடைகள் மூலம் கிடைக்கப் பெறும் பால், இறைச்சி, முட்டை மற்றும் தொழு உரம் ஆகியவற்றின் மதிப்பு, 45,000 கோடி ரூபாய் என்பதை அறியும்போது, இந்தியாவின் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு, எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது தெளிவாகிறது. நமது தமிழ்நாட்டில் மட்டும், ஆண்டுதோறும் 361 கோடி லிட்டர் பாலும், 37,000 டன் இறைச்சியும், 247 கோடி முட்டைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால், நம் நாட்டில் உள்ள கால்நடைகள் மூலம், நமக்குக் கிடைக்கும் உணவுப் பொருட்கள், நமக்குப் போதுமானவையாக உள்ளதா என்றால், 'இல்லை' என்று தான் சொல்ல வேண்டியுள்ளது.

புரதப் பற்றாக்குறை நீங்கி, தன்னிறைவு அடையவேண்டும் என்கிற

உயரிய நோக்கில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், உயர்ந்த ரகக் கால்நடைகளை உருவாக்கியும், மேம்பட்ட மேலாண்மை நுட்பங்களைக் கண்டறிந்தும், உயரிய நோய்த் தடுப்பு மருந்துகளை உருவாக்கியும், சேவை புரிந்து வருகின்றது. அவற்றை உழவர் பெருமக்களுக்குக் கொண்டு சேர்க்க, வானொலி வேளாண்மைப் பயிற்சிப் பள்ளி, மற்றும் உழவர் பயிற்சி நிலையங்கள் மூலமும், கிராமப்புற மக்களுக்கு இந்தத் தொழில் நுட்பங்கள், சென்றடையும் அரிய பணியையும் ஆற்றி வருகின்றது.

தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டம் (Intensive Cattle Development Scheme) உறைநிலை கருப்பொருள் வங்கிகள் (Frozen Semen Banks) ஏற்படுத்துதல், தரமான தீவன மேம்பாட்டுத் திட்டம் (Feed Development Programme), ஆகியவற்றின் மூலம், கால்நடை வளர்ப்போருக்கு இந்தப் பல்கலைக் கழகம், பெரிதும் துணை புரிந்து வருவது, பாராட்டுக்குரியது ஆகும்.

கால்நடை பராமரிப்புத் துறையும், இப்பல்கலைக் கழகமும் இணைந்து, உயர்ந்த ரகக் கோழிகள், சமச்சீர் உணவு, தடுப்பூசி மருந்துகள், நோய்க் கட்டுப்பாட்டு முறைகள், விற்பனை வசதிகள் போன்றவைகள் மூலம், கோழி இனத்தின் மேம்பாட்டிற்குப் பாடுபட்டு வருகின்றன.

அண்மையில், இப்பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமாகிய, நாமக்கல் கால்நடை மருத்துவமனை வளாகத்தில், 15 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள, நவீன வசதிகளுடனும், புதிய கருவிகளுடனும் கூடிய 'கோழியின நோய் அறியும் ஆய்வுக்கூடம்' (Avian Diseases Diagnositic Laboratory) கோழி வளர்ப்போருக்குப் பெருமளவில் பயனளிக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சிறு வயதிலிருந்தே பிராணிகள் என்றால் எனக்குப் பிரியம் அதிகம். குறிப்பாக, Pet animals வளர்ப்பதில் எனக்குத் தனி ஆர்வம் உண்டு. எங்கள் வீட்டில் செல்லப் பிராணிகள் இல்லாமல் இருந்த காலமே இல்லை என்று சொல்லலாம். செல்லப் பிராணிகளை வளர்ப்பவர்களுக்குத் தான், அந்தப் பிராணிகளை வளர்ப்பதில் கிடைக்கும் மகிழ்ச்சியும், மனநிறைவும் புரியும். அத்தகைய செல்லப் பிராணிகளுக்கு எற்படும் நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க, 'மைய நோய் ஆய்வகம்' (Central Diagnositc Laboratory) ஒன்று மாதவரத்திலும், 'மைய மருத்துவச் சிகிச்சை ஆய்வகம்' மற்றும், 'சிறப்பு மருத்துவ ஆலோசனைப் பிரிவு' (Central Clinical

## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகக் கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டு விழா

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகக் கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டுவிழா சென்னை கலைவாணர் அரங்கில் 30.6.1993 அன்று நடந்தது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் 1989-ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. இந்தப் பல்கலைக் கழகத்துக்குச் சென்னையிலுள்ள மாதவரத்தில் நிர்வாக அலுவலகங்களுக் கான கட்டடம் கட்டப்படவுள்ளது. இதைப் போல் சென்னை வேப்பேரியிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் ஆராய்ச்சிக் கூடமும், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் மாணவிகள் விடுதி, மருத்துவமனை போன்றவையும் புதிதாகக் கட்டப்படவுள்ளன. இந்தப் புதிய கட்டடங்கள் ரூ.3 கோடியே 17 இலட்சம் செலவில் கட்டப்படுகின்றன.

விழாவில், இந்தப் புதிய கட்டடங்களுக்கான அடிக்கல்லை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நாட்டிவைத்து, நன்னீர் இறால் வளர்ப்புத் திட்டத்தையும் தொடங்கிவைத்து விழாப் பேருரை ஆற்றினார்.

விழாவில், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு டி. ஜனார்த்தனன் அவர்கள் கலந்துகொண்டு இந்தக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தர் மறைந்த டாக்டர் ரிச்சர்டு மாசிலாமணியின் உருவப்படத்தைத் திறந்துவைத்துப் பேசினார்.

பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் வே. ஞானப்பிரகாசம், பல்கலைக் கழகத்தின் சாதனைகளையும் எதிர்காலத் திட்டங்களையும் விளக்கிப் பேசினார்.

விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பொன்னாடை போர்த்தி, வேலைப்பாடமைந்த சிற்பம் ஒன்றை நினைவுப் பரிசாக வழங்கினார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவிகள் உட்பட பலரும் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

விழா முடிவில், பல்கலைக் கழகப் பதிவாளர் டாக்டர் பத்மநாபன் நன்றி நவின்றார்.



Laboratory and referral Clinic) ஒன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியிலும் செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்தும், பிராணிகளிடத்து அன்பு செலுத்தும், மனித நேயமிக்க மக்களுக்கு, மகிழ்ச்சி தரக்கூடிய செய்திகள் ஆகும்.

தாவர உணவிற்கு அடுத்தபடியாக, மீன் பெரும்பாலான மக்களால் உட்கொள்ளப்படுகிறது. குறிப்பாக, கடற்கரைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு, மீன் முக்கிய உணவாக அமைந்துள்ளது. நமது மாநிலத்தில் அமைந்துள்ள கடற்கரையின் நீளம் மட்டும், 1000 கி.மீட்டர். கடற்கரையை ஒட்டியும் உள்நாட்டிலும், நன்னீர்ப் பரப்பும், உவர்நீர்ப் பரப்புமாக, மீன்பிடிப் பரப்பு மட்டும், 16 இலட்சம் எக்டேர் நிலம் உள்ளது. இவற்றிலிருந்து ஆண்டிற்கு, 3 இலட்சம் டன் மீன் மட்டுமே கிடைக்கிறது. ஆனால், நமது தேவையோ, 6 இலட்சம் டன் மீன்களாகும்.

இதுவரை மீன் வகை உணவு உற்பத்தியில், 50 சதவிகிதம் மட்டுமே நாம் எட்டியுள்ளோம். நமது தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யும் வகையில், தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம், மீன் உற்பத்திப் பெருக்கத்திற்குத் தேவையான வழிவகைகளைச் செய்வதோடு, புதிய மீன் பிடி உத்திகளையும், மீன் உற்பத்திப் பெருக்கத்திற்கு ஆலோசனைகளையும், மீனவர்களுக்குக் கற்றுத் தர வேண்டும் என, இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பெருமளவில், அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும், இறால் வளர்ப்புக்கு, இந்த அரசு பல திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகிறது. இறால் மீன் வகையில், நமது மாநிலத்தில் வளரும் நன்னீர் இறாலுக்கு, வெளிநாடுகளில் நல்ல கிராக்கி உள்ளதால், அதன்மூலம் மிகுந்த அளவில், அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்க வாய்ப்புள்ளது. அதே நேரத்தில், அவற்றை இனப் பெருக்கம் செய்வதில், சில இடர்ப்பாடுகள் உள்ளன, என்ற உண்மையை அறிந்தவுடன், உடனடியாக இவற்றைக் களைய, தேவையான நடவடிக்கைகளை எடுக்க ஆணையிட்டேன். அந்த நிலையில் இந்தப் பல்கலைக் கழகம், ஒரு திட்டத்தைத் தயாரித்து, என் பார்வைக்குக் கொண்டு வந்தபோது, நான் அத்திட்டத்திற்கு 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தேன்.

காவிரி ஆற்றுப் படுகையில் உள்ள, நன்னீர் இறால் வகை மீன்களைக் கொண்டு, தூத்துக்குடி மீன்வளக் கல்லூரிப் பண்ணையில், Induced breeding முறையின் மூலம், ஆண்டு ஒன்றுக்கு 20 இலட்சம் Fresh Water Prawn Seadlings-களை உற்பத்தி செய்து, தமிழகத்தில் உள்ள மீனவர்களுக்கும் கிடைக்குமாறு செய்ய, திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் 200 கிராம் முதல், 250 கிராம் வரை வளரும் இந்த நன்னீர் இறால் மீன்கள், கிலோவுக்கு 1000 ரூபாய் வரை, அந்நியச் செலாவணியை ஈட்டும் என்று அறியும்போது, இதனால் நமது கிராமங்களில் நிகழப் போகும், பொருளாதார மாற்றத்தை எண்ணி, எனது மனம் மகிழ்ச்சி அடைகிறது.

தமிழக அரசு, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற ஏழை எளியவர்கள், ஏற்றம் பெற வேண்டும் என்ற நோக்கோடு, கிராம மக்களுக்குப் பல திட்டங்



# தமிழகத்தைச் சேர்ந்த மூன்று மருத்துவ நிபுணர்களுக்கு விருது!

இந்திய மருத்துவக் கழகம் (Medical Council of India) ஆண்டாண்டுதோறும் சிறந்த மருத்துவர்களுக்கு விருது வழங்கிச் சிறப்பித்து வருகின்றது.

1992-ஆம் ஆண்டுக்கான விருதுகள் தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று மருத்து



டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன்

வர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. அரசு பல் மருத்துவக் கல்லூரியின் முன்னாள் முதல்வர், டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன் அவர்களுக்கு "HARI OM ASHRAM ALEMBIC" ஆராய்ச்சி விருது அவரது சிறந்த ஆராய்ச்சிக்காக அளிக்கப்



டாக்டர் ஏ.என். சந்திரசேகரன்

பட்டுள்ளது. இது, ஒரு சான்றிதழும், தங்கப் பதக்கமும் மற்றும் பத்தாயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் கொண்டது. பேராசிரியர் டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன் அவர்களுக்கு, இந்திய மருத்துவக் கழகம் அவரது தொண்டினைப் பாராட்டி 1982-ஆம் ஆண்டு டாக்டர் பி.சி. ராய் தேசிய விருதினை வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு மருத்துவக் கல்லூரியில் பணிபுரியும் மூட்டுத் தசை இணைப்பிணி நோய் நிபுணர் பேராசிரியர் டாக்டர் ஏ.என். சந்திரசேகரன், அவர்களுக்கு, இந்திய மருத்துவக் கழகம் அத்துறையின் சிறந்த வளர்ச்சிக்காக டாக்டர் பி.சி. ராய் தேசிய விருதினை அளிக்கிறது.

86 வயது முதிர்ந்த டாக்டர் சி.எஸ். ராமன் அவர்களுக்கும் டாக்டர் பி.சி. ராய் விருது இந்திய மருத்துவக் கழகம் அளிக்கிறது. டாக்டர் சி.எஸ். ராமன் அவர்கள் தமிழகத்தின் பல் மருத்துவத் துறையின் தந்தை எனப் போற்றப் படுகிறார்.



டாக்டர் சி.எஸ். ராமன்

மேற்கண்ட இரு மருத்துவர்களுக்கும் சான்றிதழும், தங்கப்பதக்கமும் 15 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங் கப்படும்.

---

களின் கீழ், கால்நடைகளை வாங்க வும் - வளர்க்கவும், கடன் உதவியும் மானியமும் வழங்கி வருகிறது. இவர்களுக்கு உரிய தொழில் நுட்பத்தைக் கண்டறிந்து வழங்கு கின்ற இந்தக் கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கும், கால்நடைப் பராமரிப்புத் துறையின் வளர்ச்சித் திட்டங்களுக்கும், இந்த அரசு, 1993-94-ஆம் ஆண்டில், 81.7 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது.

தமிழகத்தில் உள்ள செம்மறி ஆடு களின் தரத்தை உயர்த்த, ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகத்தின் European Economic Community -யின் நிதி உதவியுடன், 13.5 கோடி ரூபாய் செலவில், ஒரு திட்டம் தீட்டப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

கிராமங்களின் பொருளாதாரத்தை உயர்த்த, பல்வேறான கால்நடை வளர்ச் சித் திட்டங்களை நிறைவேற்ற, இந்த அரசு தயாராக உள்ளது. அத்தகைய திட்டங்களைத் திறம்படச் செயல்படுத் தும், திறன் மிக்க பட்டதாரிகளை, இந்தப் பல்கலைக் கழகம் உருவாக்கித் தர வேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டிலிருந்து இப்பல்கலைக் கழகத்தில், கால்நடை உயிர்நுட்பவியல், கால்நடைப் பராமரிப்புப் பொருளா தாரம், கால்நடைப் பராமரிப்பு விரி வாக்கம், கால்நடை அறிவியல் வணிக நிர்வாகம், வேளாண்காடு வளர்ப்பு ஆகியவற்றில், முதுநிலைப் பட்டப் படிப்புகள் தொடங்க இருப்பதை யும், மாவட்டந்தோறும், பல்கலைக் கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், அமைய இருப்பதையும் அறிந்து, நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

'எங்கும் எதிலும் மங்காத தமிழ்', என்று சங்கநாதம் முழங்கிக் கொண்டிருக் கும், தமிழக அரசின் கொள்கைக்கு, வலிமை சேர்க்கின்ற வகையில், இந்தப் பல்கலைக் கழகம், 'கால்நடை இயல் கலைச் சொற்களஞ்சியம்' (Glossary of Technical Words) ஒன்றினைத் தயாரித்து வெளியிட்டதற்கு, எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக் கழகம், உலகக் கல்வித் தரத்திற்கு ஒப்பான கல்வியை வழங்கி, திறன்வாய்ந்த பட்டதாரிகளை உருவாக்க, பாடத் திட்டங்களில், உரிய மாற்றங் களைத் தொடர்ந்து செய்திடவேண்டும்; கால்நடை உற்பத்தியில், மாறிவரும் சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்கு, ஏற்ற ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். ஆய்வு முடிவுகளைப் பல்கலைக் கழகத் திலிருந்து, வயல்வெளிகளுக்கு விரைவில் கொண்டு சேர்த்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங் களிலும் - வறுமை நீங்கிடவும், வேலை வாய்ப்புகள் பெருகிடவும், வளமை சேர்த்திடவும், மகிழ்ச்சி வளர்ந்திடவும், தொடர்ந்து பாடுபடுவோம் - என்று உறுதி கூறிக்கொள்கிறேன்.

# திருநெல்வேலி- கட்டபொம்மன் மாவட்டம்

## - ஒரு கண்ணோட்டம்

திருநெல்வேலி(கட்டபொம்மன்) மாவட்டம் 1790-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ஆம் நாள் உருவாக்கப்பட்டது. இந்த மாவட்டத்தின் மொத்தப்பரப்பளவு 6,838 சதுர கி.மீட்டர். இதன் மொத்த மக்கட் தொகை 24,93,189. இதில் ஆண்கள் 12,24,319 பேர். பெண்கள் 12,68,870. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் படித்தவர்களின் எண்ணிக்கை 14,09,304. இது மொத்த மக்கட் தொகையில் 57 சதவிகிதம் ஆகும்.

இந்த மாவட்டத்தில் மூன்று வருவாய்க் கோட்டங்களும் (திருநெல்வேலி, சேரன்மகாதேவி, தென்காசி), 9 வட்டாட்சியர் அலுவலகங்களும் உள்ளன. அவை: திருநெல்வேலி, பாளையங் கோட்டை, சங்கரன்கோயில், தென்காசி, செங் கோட்டை, சிவகிரி, நாங்குநேரி, ராதாபுரம், அம்பாசமுத்திரம்.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் 19 ஊராட்சி ஒன்றியங்களையும், 38 பேரூராட்சி களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவற்றைத் தவிர திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம், தென்காசி, செங்கோட்டை, கடையநல்லூர், சங்கரன்கோயில், புளியங்குடி ஆகிய 8 நகராட்சிகளும் இங்கு உள்ளன.

**எண்ணும் எழுத்தும்**

14 கல்லூரிகளைத் தன்னகத்தே கொண்டு மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்' இங்கு இயங்கி வருகிறது. இந்த மாவட்டத்திலுள்ள ஒரே பல்கலைக்கழகம் இதுதான். இந்த மாவட்டத் தில் மொத்தம் 2091 பள்ளிகள் உள்ளன. இவற்றில் 114 மேல்நிலை மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள். திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தம் 4072 சத்துணவு மையங்கள் இயங்கிவருகின்றன.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் ஒரு அரசு மருத்துவக் கல்லூரியும், ஒரு பொறி யியல் கல்லூரியும், சித்த மருத்துவக் கல்லூரி ஒன்றும் உள்ளன.

**கண்கவர் சுற்றுலா மையங்கள்**

**பாபநாசம் நீர்வீழ்ச்சி**

பாபநாசம் மலைமீது மேலணை, கீழணை என்று இரண்டு அணைகள் கட்டப்பட்டுள்ளன. மேலணையில் சிற்றாறுகளின் நீர் தேக்கி வைக்கப் பட்டு அது இரு திறப்புக் குழாய்களின் வாயிலாக வெளியேற்றப்படுகிறது.

**மணிமுத்தாறு நீர்வீழ்ச்சி**

கல்லிடைக் குறிச்சி இரயில் நிலையத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் மணிமுத்தாறு அணை கட்டப்பட்டுள்ளது. அணையின் மொத்த நீளம் 3 கி.மீ. மணிமுத்தாறு அருவியில் ஆண்டு முழுவதும் நீர் விழுகிறது.

**முண்டந்துறை புலிகள் சரணாலயம்**

களக்காடு புலிகள் சரணாலயம், குற்றாலம், கிருஷ்ணாபுரம் சிற்பக்கலை, பத்தமடை, கூந்தக் குளம் பறவைகள் சரணாலயம், அரியகுளம் பறவைகள் சரணாலயம், மூன்றடைப்புப் பற வைகள் சரணாலயம் போன்றவை பிற சுற்றுலாத் தலங்களாகும்.

**பழம்பெரும் கோயில்கள்**

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருக்குறுங் குடியிலுள்ள சிவன் கோயில், சங்கரன் கோயிலி லுள்ள சங்கர நாராயணசாமி கோயில், நாங்கு நேரியிலுள்ள வானமாமலைக் கோயில், உவரி யிலுள்ள சுயம்புலிங்கசுவாமி கோயில் தென்காசி யிலுள்ள காசி விஸ்வநாதர் கோயில் போன்றவை வரலாற்றுச் சிறப்புமிக்கவையாகும்.

## ஊரும் பேரும்

**சங்கரநயினார் கோயில்**

நெல்லை நாட்டுச் சிறந்த கோயில்களுள் ஒன்று சங்கர நயினார் கோயில். ஆதியில் அது புற்றுக் கோயிலாக இருந்திருக்க வேண்டும் என்று தோன்று கிறது. இன்றும் பாமர மக்கள் அதனைப் பாம்புக் கோயில் என்றே வழங்குவர். அங்குள்ள புற்று மருந்து என்னும் திருமண் எவ்வகைப் பிணியையும் தீர்க்க வல்லதென்று கருதப்படுகிறது. அக்கோயிலை யுடைய ஊர் முன்னாளில் இராசபுரம் என வழங் கிற்று. இதனாலேயே இராசை என்னும் பெயர் இலக்கியத்தில் அவ்வூரைக் குறிப்பதாயிற்று. பிற் காலத்தில் கோயிற் பெயரே ஊர்ப் பெயராகக் கொள்ளப்பட்டது.

திருநெல்வேலி துணுக்குகள்

## வெள்ள நிவாரணப் பணிகள்

சென்ற ஆண்டு நவம்பர் திங்கள் 12-ஆம் நாள் முதல் 14-ஆம் தேதி முடிய நெல்லை மாவட்டத்தில் வீசிய புயல் காரணமாகப் பெய்த கடும் மழையால் திருநெல்வேலி, பாளையங் கோட்டை, தென்காசி, செங்கோட்டை, சிவகிரி, அம்பாசமுத்திரம், நாங்குநேரி, ராதாபுரம் வட் டாரங்களில் பெருத்த சேதம் ஏற்பட்டது. இதன் காரணமாக ரூபாய் 101.53 கோடி அளவுக்கு உயிர்ச்சேதமும் பயிர்ச் சேதமும் பிற சேதங்களும் ஏற்பட்டன.

வெள்ள நிவாரணப் பணிகளுக்கென அரசு இந்த மாவட்டத்துக்கு ரூபாய் 959.91 இலட்சம் ஒதுக்கியிருந்தது. இதில் 21.5.1993 முடிய ரூ.744.475 இலட்சம் வெள்ள நிவாரணப் பணிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

## முதியோர் உதவித் தொகை

முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி- கட்டபொம்மன் மாவட்டத்தில் மே 1993 முடிய 22,938 நபர்களுக்கு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

## நீர்த்தேக்கங்கள்

நெல்லை மாவட்டத்திலுள்ள முக்கிய நீர்த் தேக்கங்களும் (Reservoirs) அவற்றின் உயரமும்

1. பாபநாசம் - 143 அடி
2. மணிமுத்தாறு - 118 அடி
3. கடானா - 85 அடி
4. ராமா நதி - 84 அடி
5. கருப்பா -நதி - 72 அடி
6. குண்டாறு - 36 அடி

## நெல்லை மாவட்டத்தின் உயிரோட்டம்!

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் தமிழ்நாட்டின் தென்கிழக்குப் பகுதியில் அமைந் துள்ளது. இந்த மாவட்டம் வடக்கே காமராசர் மாவட்டத்தாலும் தெற்கே குமரி, கிழக்கே சிதம்பரனார் மாவட்டங்களாலும் மேற்கே கேரளா மாநிலத்தினாலும் சூழப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தின் உயிரோட்டம் தாமிர பரணி ஆறுதான். ஏனெனில் நெல்லை மாவட்டத் தின் பெரும்பாலான விவசாய நிலங்கள் இந்த ஆற்று நீரினால் தான் வளம் பெறுகின்றன. இந்த மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் கால் பகுதி விவசாய நிலங்களாகும்.

### அழகிய ஆறுகள்

நெல்லை மாவட்டத்தின் வாழ்வும், வளமும், வனப்பும், செழிப்பும் மண்டிக்கிடப்பது இங்கு பாயும் ஆறுகளின் வளத்திலேயேதான். நெல்லை மாவட்டத்தின் பெருமையே தாமிரபரணியில்தான் உள்ளது. இதைத் தவிர சிற்றாறு, பச்சை ஆறு, நம்பியாறு, கொடுமுடியாறு, கடகை நதி, இராம நதி போன்றவையும் இங்கு பாயும் பிற ஆறு களாகும்.

நெல்லை மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 814.8 மி.மீ

இந்த மாவட்டத்தில் மொத்தம் 6 அணைக் கட்டுகள் உள்ளன. அவை பாபநாசம், மணி முத்தாறு, கடகை நதி, இராம நதி, கருப்பா நதி, குண்டாறு ஆகியன.

### விளையும் பயிர்கள்

நெல்லை மாவட்டத்தின் மொத்த பயிர்ப்பரப்பு 4,39,298 எக்டேர். இதில் நன்செய் 79,668 எக்டேர், புன்செய் 3,59,630 எக்டேர். இதில் 99,934 எக்டேரில் நெல் பயிரும், 4,955 எக் டேரில் சோளமும், 695 எக்டேரில் கம்பும், 1197 எக்டேரில் கேழ்வரகும் பயிர் செய்யப்படுகிறது. இவற்றைத் தவிர பருத்தி, மிளகாய், கரும்பு, நிலக் கடலை போன்ற பணப் பயிர்கள் சுமார் 2,17,718 எக்டேரிலும் பயிராகின்றன.

மேலும், வாழை, மா, கொய்யா, திராட்சை, தக்காளி போன்ற பழவகைகளும் சுமார் 11,392 எக்டேரில் பயிர் செய்யப்படுகிறது.

### வனப்பகுதிகள்

நெல்லை மாவட்டத்திலுள்ள காடுகளின் மொத்தப் பரப்பளவு 1,22,055 எக்டேர் ஆகும்.


### மருத்துவமனைகள்

இந்த மாவட்டத்தில் மொத்தம் 10 மருத்துவ மனைகளும், 55 ஆரம்பச் சுகாதார நிலையங் களும், 385 துணைச் சுகாதார நிலையங்களும் உள்ளன. இவை தவிர 4 கால்நடை மருத்துவ மனைகளும், 35 கால்நடை மருந்தகங்களும் உள்ளன.

### வளரும் தொழிற்சாலைகள்

நெல்லை மாவட்டத்தில் 21 பெரிய தொழிற் சாலைகளும், 4,455 சிறு தொழிற்சாலைகளும் உள்ளன. இவற்றில் மொத்தம் 13 இலட்சத்து 84 ஆயிரத்து 521 தொழிலாளர்கள் பணியாற்று கின்றனர். இதில் பெண் தொழிலாளர்கள் மட்டும் 89,147 பேர்.

## திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்



நல்வாழ்த்துக்கள்:

அரிசி ஆலை மற்றும் நெல் அரிசி வியாபாரிகள் சங்கம்
20, செஞ்சி ரோடு, விழுப்புரம் 605 602

S.K. ஷாகுல் ஹமீது
பொதுச் செயலாளர்

With Best Compliments From


PANRUTI OIL MILL OWNERS ASSOCIATION

(Regd. No.35/93)
11, Madras Road
Panruti-607 106

*President:* V.P. GNANASEKARA PANDIYAN
*Secretary:* A. SHANMUGAM

சிறப்புப் பேட்டி:

# மனநிறைவு தரும் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்



**நெல்லை மாவட்டம் பல்வேறு துறைகளில் முன்னேறி வருகிறது என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். வேலு, இ.ஆ.ப., அவர்கள் விளக்கிக் கூறுகிறார். அறிவொளி இயக்கம், வெள்ள நிவாரணப் பணிகள், குடிநீர்த் திட்டம் முதலான வளர்ச்சிப் பணிகள் துரிதமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதையும், தொழில் துறையில் தன்னிறைவு பெற்று விளங்குகிறது என்பதையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்தச் சிறப்புப் பேட்டியில் கூறுகிறார்.**

இயற்கை அமைப்பாலும், வரலாற்றுச் சிறப்பாலும் சமுதாய அமைப்பாலும், சமய வளர்ச்சியாலும், அரசியல் முறையாலும் திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம் பேரும் புகழும் பெற்று விளங்குகிறது.

இந்த மாவட்டம் அரசியல், கல்வி, தத்துவம், சமுதாயம், நிர்வாகம் போன்ற பல துறைகளில் சிறந்து விளங்கிய பெருந்த தலைவர்களை இந்த நாட்டுக்குத் தந்து பெருமை சேர்த்துள்து. அகத்திய முனிவர் தவமிருந்து தமிழ் வளர்த்த பொதிகை மலையும், தமிழ் கண்ட தோர் பொருநை ஆறும் உடைய நெல்லை மாவட்டம் இன்னும் எத்தனையோ சிறப்புகளுக்கும் உரியதாகும்.

விடுதலைக்கு வித்திட்டு முதல் முழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவாக இந்த மாவட்டம் 20.10.1986-ஆம் நாள் உருவாக்கப்பட்டது. இந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக திரு ஆர். வேலு, இ.ஆ.ப., அவர்கள் 1991-92-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் பணியாற்றி வருகிறார். தனி மாவட்டமாகப் பிரிந்த நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தின் பத்தாவது ஆட்சியாளர் ஆவார் இவர்.

### குற்றாலச் சாரல் விழா

**அருவிகள் நிறைந்த சிறந்த சுற்றுலாத் தலமான குற்றாலம் சென்ற ஆண்டு ஏற்பட்ட திடீர் வெள்ளத்தினால் பெரும் சேதம் அடைந்து அங்கு தற்சமயம் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதாக அறிந்தோம். இந்தப் பணிகள் தற்சமயம் எந்த நிலையில் உள்ளன?**

குற்றாலச் சீரமைப்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இன்னும் ஓரிரு வாரங்களில் இந்தப் பணிகள் முடிவடைந்துவிடும். குற்றாலச் சாரல் விழா திட்டமிட்டபடி நடக்கும்.

### அறிவொளி இயக்கம்

**நெல்லை மாவட்டத்தில் அறிவொளி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறதே?**

ஆம். நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் 1991-ஆம் ஆண்டு இறுதியில் அறிவொளி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 11 இலட்சம் பேர் கல்வி அறிவு பெறாதவர்கள். இதில் 15 முதல் 35 வயதுக்கு உட்பட்ட 2,80,000 பேருக்கு எழுத்தறிவு புகட்டும் நோக்கத்துடன் அறிவொளி இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. முதற் கட்டமாக 2 இலட்சம் பேருக்குக் கல்வி அறிவு புகட்டப்பட்டுள்ளது. இவர்களுக்கு மே மாதம் 15-ஆம் நாள் முதல் தொடர் கல்வி தொடங்கப்பட்டுள்ளது. இந்தப் பணியில் மொத்தம் 26 ஆயிரம் தொண்டர்கள் (Volunteers) ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் அறிவொளி இயக்கம் தொடங்கப்பட்டுள்ள 5-வது மாவட்டம் ஆகும் இது''

## நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவருடன் ஒரு சந்திப்பு

இந்த அறிவொளி இயக்கத்தில் ஈடுபட்டுள்ள தொண்டர்களில் பெரும்பாலோர் தங்களை இந்தப் பணிக்கு முழுமையாக அர்ப்பணித்துள்ளனர். தற்போதைய நிலவரப்படி இந்த மாவட்டத்தில் மொத்த எழுத்தறிவு சதவிகிதம் 56.53-லிருந்து 70.47 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

**வெள்ள நிவாரணப் பணிகள்**

வெள்ள நிவாரணப் பணிகள் முடிவடைந்துவிட்டனவா? கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நெல்லை மாவட்டத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தின் காரணமாக சுமார் 105 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டது. (இது தனியார் மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட மொத்த இழப்பீடு ஆகும்). வெள்ள நிவாரணப் பணிகள் ஏறக்குறைய முடியும் தறுவாயில் உள்ளன. வெள்ள நிவாரணப் பணிகளுக்காகத் தமிழக அரசு 10 கோடி ரூபாய் வழங்கியது. தனியார் தொண்டு நிறுவனங்களும் இந்த வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பல வகைகளில் உதவின.

நெல்லை மாவட்டத்தில் புதிதாகக் குடும்ப அட்டைகள் கேட்டு எத்தனை விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன? இவர்களுக்குக் குடும்ப அட்டைகள் எப்போது வழங்கப்படும்?

இந்த மாவட்டத்தில் 1.25 இலட்சம் பேர் புதிதாகக் குடும்ப அட்டைகள் கேட்டு மனு செய்துள்ளனர். 31.5.1993 உடன் இந்த மனுக்கள் மீதான விசாரணை முடிந்தது. 30.6.1993-க்குள் புதிய அட்டைகள் வழங்கப்பட்டுவிடும்.

**குடிநீர்த் திட்டம்**

உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்பட்டுவரும் சங்கரன் கோயில் குடிநீர்த் திட்டம் எப்போது முடிவடையும்?

திருநெல்வேலியிலிருந்து 60 கி.மீ. தூரத்திலுள்ள சங்கரன் கோயிலுக்கு ரூ.12.5 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுவரும் குடிநீர்த் திட்டப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. குழாய்கள் பொருத்தும் பணி ஏறக்குறைய முடிவடைந்துவிட்டது. இவ்வாண்டு இறுதிக்குள் இந்தப் பகுதிக்குக் குடிநீர் கிடைத்துவிடும்.

இதைத்தவிர, இந்த மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினை உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் தாமிரபரணியை ஆதாரமாகக் கொண்டு, ரூபாய் 85 கோடி செலவில் குடிநீர் வழங்கும் ஒரு பெருந்திட்டம் (Master Plan) தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் இதன்மூலம் இந்தக் கிராமங்களின் குடிநீர்ப் பிரச்சினை நிரந்தரமாக நீக்கப்படும் என்றும் கூறினார் ஆட்சித் தலைவர்.

**மனுநீதி நாள்**

வாரந்தோறும் நடைபெறும் மாவட்ட ஆட்சியரின் குறை தீர்க்கும் நாளில் சுமார் எத்தனை விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன?

திங்கட்கிழமைதோறும் (குறை தீர்க்கும் நாள்) 340 முதல் 400 வரை மனுக்கள் பெறப்படுகின்றன. இவற்றில் ஓய்வூதியம், வேலை வாய்ப்பு, வங்கிக் கடன், வீட்டு மனைப்பட்டா போன்றவைகள் கேட்டும், வரதட்சிணைக் கொடுமை, சொத்துத் தகராறு போன்றவை சம்பந்தமாகவும்தான் நிறைய மனுக்கள் வருகின்றன. இதைத் தவிர நாங்கள் மாதம் ஒரு முறை இரண்டு வட்டாரங்களில் மனுநீதி நாள் நடத்துகிறோம். இதில் ஒரு வட்டாரத்தில் மாவட்ட ஆட்சியரும் மற்றொன்றில் மாவட்ட வருவாய் அலுவலரும் (DRO) கலந்து கொள்கிறார்கள். மனுநீதி நாளில்தான் அதிகமான குறை தீர்க்கும் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. இவற்றில் சாலை வசதி, குடிநீர், தெரு விளக்குகள், கூடுதல் பேருந்து போன்றவை கேட்டுதான் அதிகமான விண்ணப்பங்கள் இருக்கும். இந்த ஒரு நாளில் மட்டும் சுமார் 500 விண்ணப்பங்கள் அந்த இடத்திலேயே பரிசீலிக்கப்பட்டு முடிவு செய்யப்படும். மற்ற மாவட்டங்களில் இல்லாத அளவுக்கு நாங்கள் இதைச்சிறப்பாக நடத்துகிறோம்.

பேட்டியைத் தொடர்ந்து நெல்லை மாவட்டத்தின் மேலும் பல சிறப்புகளை விவரிக்கிறார் ஆட்சித் தலைவர்.

''சாதிக் கலவரங்களுக்குப்பெயர் போனது நெல்லை மாவட்டம். அறிவொளி இயக்கம் போன்றவை மூலம் இதுமக்களுக்குஎடுத்துரைக்கப் பட்டு சாதிக் கலவரங்கள் தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கல்வி, பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்ற சாதனங்கள் சமுதாயத்திற்குக் குறிப்பிடத் தக்க சேவை செய்து இந்த மாவட்ட மக்களின் பிற்போக்கான வாழ்க்கை முறையை மாற்றி அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

சமுதாயக் கொடுமை, சமூக அநீதி போன்றவற்றில் மாவட்ட ஆட்சியரே நேரடியாகத் தலையிட்டு பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கிறார். இப்போதுதான் தங்கள் சொந்தப் பிரச்சினைகளுக்காக இம் மாவட்ட மக்கள், அரசை நேரடியாக அணுக முன்வந்திருக்கிறார்கள்.

இந்த மாவட்டத்தின் முக்கிய தொழில் விவசாயம்தான். நெற்பயிர் அதிக அளவிலும் அதை அடுத்து கரும்பு, வாழை போன்றவையும் இங்கு பயிர் செய்யப்படுகின்றன.

## ஊரும் பேரும்

கங்கை கொண்டான்

'கங்கை கொண்டான் சோழச் சதுர்வேதி மங்கலம்' என்று கல்வெட்டுக்களால் குறிப்பிடப்படும் இவ்வூர், கங்கை கொண்ட சோழ மன்னன் இராசேந்திரன் பெயரைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

மேலகரம்

'திருக்குற்றாலக் குறவஞ்சி' பாடிய திரிகூடராசப்பக் கவிராயர் பிறந்த ஊர் இது. தென் காசியிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் இவ்வூர் உள்ளது.

கடையம்

தொழில்வளம் மிக்க ஊர் கடையம். இங்கு திங்கட்கிழமை தோறும் சந்தை கூடுகிறது. பன்னீர் இங்கு தண்ணீர் பட்டபாடு! இங்கிருந்து ரோஜாப்பூ, தாழம்பூ ஆகிய மலர்கள் நிறைய மற்ற இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. மகாகவி பாரதியாரின் மாமனார் இவ்வூரைச் சேர்ந்தவர்.

மற்ற மாவட்டங்களுக்கு இல்லாத ஒரு சிறப்பு இந்த மாவட்டத்திற்கு உண்டு. அதுதான் ஐவகை நிலம். பாலை (தேரி நிலம்) உட்பட 5-வகை நிலத்தை உடைய ஒரே மாவட்டம் நெல்லை மாவட்டம் தான்.

இந்த மாவட்டத்தின் மொத்தப் பரப்பில் 30 சதவிகிதம் காட்டுப் பகுதியாகும். குற்றால நீர் மூலிகை மருந்துகளால் ஆனது. அதனால் தான் இந்தக் குளிர்ந்த நீரில் (அருவி) குளித்தாலும்கூட சளி பிடிப்பதில்லை. அத்தகைய சக்தி வாய்ந்தது குற்றால அருவி. குற்றாலத்தில் முக்கனிகளும் உண்டு.

மேற்குத் தொடர்ச்சி மலையில் மூலிகைகள் அதிகமாகக் காணப் படுகின்றன. இதைக் கொண்டு தென்காசிப் பகுதியில் ஒரு மூலிகைப் பண்ணை விரைவில் ஆரம்பிக்கப் படும்.

களக்காடு பகுதியில் கள்ளத் தனமாக நடைபெற்றுவந்த வைடூரியம் தோண்டும் பணி முழுவதுமாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

முண்டந்துறைப் புலிகள் சரணாலயத்தில் சிங்கவால் குரங்கு என்ற ஒருவகைக் கருங்குரங்குகள் காணப் படுகின்றன.

**தொழில் வளம்**

சங்கரன் கோயில் பகுதியில் காற்றாலை (Wind Mill) அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இராதாபுரம் வட்டம் கூடங்குளம் கிராமத்தில் ஒரு அணுமின் நிலையம் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்து அதனைச் செயல்படுத்த தமிழக அரசைக் கேட்டுக் கொண்டது. இந்தத் திட்டத்திற்கான நிலங்களைக் கையகப்படுத்தும் பணி 31.7.1993 உடன் முடிவடைந்து விடும். வெளிநாட்டு உதவி இல்லையென்றாலும்கூட மத்திய அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முன்வந்திருக்கிறது. தற்சமயம் கட்டடங்கள் கட்டும் பணியும் நடைபெறுவதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார்.

திருநெல்வேலி தாலுகாவிலுள்ள கங்கைகொண்டான் மற்றும் பிராஞ்சேரி கிராமங்களில் சிப்காட் உதவியுடன் தொழில் மையம் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. நிலம் கையகப்படுத்தும் பணி தற்சமயம் நடைபெற்று வருகிறது.

பீடித் தொழில், தீப்பெட்டி செய்தல் போன்றவையே இம்மாவட்ட மக்களின் முக்கிய ஆதாரமாகும். பீடி சுற்றும் தொழில் நெல்லை மாவட்டம் முழுவதும் நடைபெறுகிறது.

**பழங்குடியினர்**

பாபநாசம் பகுதியில் 5 குடியிருப்புகளில் சுமார் 300 எண்ணிக்கையில் காணிக்கர் என்ற பழங்குடியினர் வாழ்கின்றனர். இதுவரை இவர்கள் பழங்குடியினர் (Tribels) வகுப்பில் சேர்க்கப்படவில்லை. தற்சமயம் இவர்களைப் பழங்குடியினர் பிரிவின்கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்குத் தற்போது கல்வி, வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்தப்பழங்குடி மக்களில் 25 நபர்களுக்கு காடுகளில் வேலை கொடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**வேலைவாய்ப்பில் பெண்கள்**

செயற்கை வைரம் பட்டைத் தீட்டும் தொழிலில் (Gem Cutting) பெண்கள் ஈடுபட்டுள்ளனர். செருப்பு தைக்கும் தொழிலிலும் தற்சமயம் பெண்கள் ஈடுபட்டிருப்பது ஒரு நல்ல முன்னேற்றமே.

**பல்துறை விளக்க முகாம்**

மாதம் ஒரு முறை எல்லாத் துறைகளும் இணைந்து 'பல்துறை விளக்க முகாம்' (Multi Media Campaign) நெல்லை மாவட்டத்தில் நடத்தப்படுகிறது. இந்த முகாமின் மூலம் அரசுத் துறை சலுகைகள், நிதி உதவி போன்றவற்றை எவ்வாறு பெறலாம் என்பது மக்களுக்கு எடுத்துரைக்கப்படுகிறது. அரசின் வளர்ச்சித் திட்டப் பணிகள் மக்களிடம் நேரில் எடுத்துச் செல்லப் படுகிறது.

அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட அனைத்துத் துறை அலுவலர்களும் வருகை புரிந்து நிகழ்ச்சியில் பங்கு பெறுவார்கள். இந்தப் பல்துறை விளக்க முகாம் தமிழ்நாட்டிலேயே மாதந்தோறும் இம்மாவட்டம் ஒன்றில் தான் நடத்தப் படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

**குடும்ப நலம்**

இந்த மாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் இப்போது அதிகமாக குழந்தைகள் பெற்றுக் கொள்வதில்லை. இது ஒரு நல்ல முன்னேற்றம். குடும்ப நலத்தில் இந்தியாவில் கேரளாவுக்கு அடுத்தபடியாக நமது மாநிலம் இருப்பது பெருமைப் படக்கூடியதாகும். இதற்கு, திரைப் படங்கள் மூலமாக மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்ட நல்ல கருத்துகளும் ஒரு முக்கியக் காரணமாகும்.

சென்ற ஆண்டு சிறுசேமிப்பில் இந்த மாவட்டம் நிர்ணயிக்கப்பட்ட தொகையான ரூபாய் 25 கோடிக்கு பதிலாக 26.1 கோடி ரூபாய் வசூல் செய்து சாதனை படைத்தது.

கடைசியாக, சாதி சமய பேதங்கள், சமுதாய இன்னல்கள் போன்றவை இந்த மாவட்டம் முன்னேறாததற்கு ஒரு முக்கியக் காரணமாகும். தற்போது மக்களை நல்வழிப் படுத்துவதில் பத்திரிகைகள் பெரும்பங்காற்றுகின்றன. மக்களை நல்ல வழியில் கொண்டு செல்ல நெல்லை மாவட்டப் பத்திரிகைகள் ஆற்றும் பணியை வெகுவாகப் பாராட்டினார் மாவட்ட ஆட்சித் தலைவர்.

- ஜே. சந்திரன்.

## ஊரும் பேரும்

**சீவலப்பேரி**

சிற்றாறு, கயத்தாறு, பொருநை ஆகிய மூன்றும் கலக்கும் இடமே முக்கூடல். தற்போது, சீவலப்பேரி முக்கூடல் என்றே அழைக்கப் படுகிறது. திருநெல்வேலியிலிருந்து 17 கி.மீ. தொலைவில் உள்ளது இது.

**தச்சநல்லூர்**

தச்சர் ஒருவரின் வேண்டுகோளுக்கிணங்க சீர்நெடுமாறன் என்னும் மன்னனால் வழங்கப்பட்ட பெயரே தச்சநல்லூர் ஆகும். இது, திருநெல்வேலியிலிருந்து 3 கி.மீ. வடக்கே உள்ளது. 'காந்திமதி பிள்ளைத் தமிழ்' எழுதிய அழகிய சொக்கநாதப் பிள்ளை இவ்வூரைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

# கலைக்கோயில்

**கிருஷ்ணாபுரம்.**

**தென்னகச் சிற்பக் கலைக்குப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலம்.**

**இது, திருநெல்வேலிக்குக் கிழக்கே 12 கி.மீ. தொலைவில் உள்ளது. மதுரை நாயக்க மன்னர்களில் ஒருவரான குமார கிருஷ்ணப்ப நாயக்கன், இங்கே ஒரு ஊரை**

உலகத்து மாந்தரெல்லாம்
உவப்புடன் வந்து பார்க்கும்
ஒப்பற்ற சிலைகள்!

தமிழகத்துச் சிற்பக்கலைக்குத்
தரணியில் ஈடுஇணை
இல்லை என்று இறுமாந்து
கூறும் வண்ணம் எழுந்து
நிற்கும் எழில்மிகு
திருவுருவங்கள்!

கண்ணையும் கருத்தையும்
கவரத்தக்க வகையிலே
கல்லிலே கலைவண்ணம்
கண்ட அற்புதச் சிற்பங்கள்!

இவையெல்லாம் காண
கிருஷ்ணாபுரத்துக்கு
வரவேண்டும்... வாருங்கள்
போகலாம்!

உருவாக்கினான். அவன் பெயராலேயே இது கிருஷ்ணாபுரம் என வழங்கலாயிற்று.

இங்கே, திருவேங்கடநாதர் கோயில் ஒன்று உள்ளது. 'நெல்லையப்பர் கோயிலுடன் இணைந்த கலைக்கோயில் கிருஷ்ணாபுரம் அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயில்' என்று அங்குள்ள கல்வெட்டொன்று தெரிவிக்கிறது.



அப்சரஸ் நடனம் - கிருஷ்ணாபுரம்

கிருஷ்ணாபுரம் கோயிலினுள் நுழைகிறோம்.

முதல் சிலையே நம்மை மெய்மறக்கச் செய்கிறது. நாடோடிப் பெண் ஒருத்தி நடனமாடுவது போன்ற உயிரோவியம் அது. ஒரே கல்லால் ஆன அந்த அழகிய சிற்பத்தின் கை நரம்புகள் தெரிகின்றன. விலா எலும்புகள் கூடத் தத்ரூபமாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன.

கைதேர்ந்த சிற்பக் கலைஞனின் கைவண்ணத்தால் உருவான சிற்பங்களை வரிசையாகப் பார்த்துக்கொண்டே போகிறோம்.

அடுத்து, நாம் காண்பது, குறத்தி ஒருத்தி ராஜகுமாரன் ஒருவனைக் களவாடிச் செல்கின்ற தோற்றம். குறத்தி, ராஜகுமாரன், திருவுருவச் சிலையொட்டிய தூண் யாவும் நேரில் காண்பது போன்ற பிரமையே ஏற்படுகிறது. தூணைத் தட்டிப் பார்க்கிறோம். உலோகத்தைத் தட்டினால் ஏற்படும் சத்தமல்லவா கேட்கிறது! இதுவும் ஒரே கல்லால் ஆன, சிற்பியின் எண்ணத்தை எழிலுருவமாக வடித்திருக்கும் வடிவம்தான்!

அர்ச்சுனன் தவம் புரியும் காட்சி அற்புதம்! அற்புதம்! அவனது தாடி, கைவிரல்களிலுள்ள நகங்கள் தத்ரூபம்.

கர்ணன் இப்படித்தான் இருந்தானோ? அவனை வடித்த சிற்பியின் கைகளை எடுத்து அப்படியே கண்களில் ஒற்றிக் கொள்ளவேண்டும்.

வில்லேந்தி நிற்கும் கர்ணனின் தொடை நரம்புகள் தெரியும்படியும், கால் முட்டிகள் இயல்பாய் அமைந்திருப்பதையும் கண்டு வியக்கிறோம்.

குறத்தி ராஜகுமாரனைத் தூக்கிச் சென்ற காட்சியைப் பார்த்தோம்.



ரதி - கற்சிற்பம் - கிருஷ்ணாபுரம்



இந்தச் சிலையோ, குறவன் ராஜகுமாரியைத் தூக்கிச் செல்லும் சிலையாகும். இதிலும் குறவன் விலா எலும்புகள் தெரியும்படியாகத் தன் கைத்திறமையைக் காட்டியிருக்கிறான் சிற்பி. ராஜகுமாரி முக்காடு போட்டிருக்கும் துணியைக்கூடக் கல்லால் வடித்திருக்கும் அழகே அழகு!

எண்ணிய உருவத்தை நுண்ணிய வேலைப்பாட்டுடன் காட்டியிருக்கும் அந்தக் கைவினைஞனுக்குத் தலைவணக்கம் செய்ய வேண்டும்.

பூலோக ரம்பையைப் பார்த்திருக்கிறோமா? அவளை இங்கே பார்க்கிறோம் - பேசாத கற்சிலையாக! ஒரு கையில் (உள்ளங்கையில்) மாதுளையையும், ஒரு கையில் பூச்செண்டையும் வைத்து நடனமாடும் அந்த நங்கையின் நளினம் நம் நயனத்தைவிட்டு அகலவே இல்லை.

இப்போது நாம் வருவது உள் மண்டபத்துக்கு... வீரபுரத்திரரின் நடனக் காட்சி. ஒரு காலைத்தூக்கி நின்றாடும் அந்தக் காட்சி மட்டுமல்ல, கையில் வாளும் கேடயமும் ஏந்தி நிற்கும் அந்தக் கம்பீரத் தோற்றமும் இன்றும் நம் மனக் கண் முன் தோன்றுகிறதே!

இந்தச் சிலையைச் செதுக்கிய சிற்பியின் திறமையைப் பாருங்கள், சிலையின் கால் எந்தவித ஆதாரமும் இல்லாமல் இருக்கிறது! இன்னொன்றையும் நாம் குறிப்பிட வேண்டும், அந்த மீசை எத்தனைத் தத்ரூபமாக அமைக்கப்பட்டிருக்கிறது!

பூலோக ரம்பையைப் பார்த்த நாம் மன்மதனையும் பார்க்க வேண்டாமா? கையில் வில்லுடன் காட்சியளிக்கும் மன்மதச் சிலையைச் சற்று உன்னிப்பாகப் பார்க்க வேண்டும். அதாவது வில்லில் ஒரு சிறு துவாரம் உள்ளது. அதில் ஊசியைப் போட்டால் மறு துவாரத்தின் வழியாகக் கீழேவந்து விழுகிறது. அத்தனை நுணுக்கமாக வில்லுக்குள்ளேயே - அந்தக் கல்லுக்குள்ளேயே துவாரத்தையும் வைத்து நம் கண்ணுக்குள்ளேயே நிற்கிற மாதிரி கைவண்ணம் காட்டியிருக்கிறார் அந்தக் கைதேர்ந்த சிற்பி!

புருஷா மிருகம் என்பது கலையெழில் மிக்க சிலை. அதாவது மனிதனும் மிருகமும் இணைந்த ஒரு தோற்றம். இடைக்கு மேலே மனித உருவம்; கீழே மிருக உருவம். அதாவது யாளி உருவம். இதுவும் நம் கண்ணையும், கருத்தையும் கவர்கிறது.

அடுத்து நாம் காண்பது, பீமன் - தர்மர் சிலை. தர்மருக்குக் கிருதா உள்ளது. அந்தக் காலத்திலேயே கிருதா வைத்துக் கொள்ளும் பழக்கம் இருந்ததோ?

அவர் அணிந்துள்ள அங்கவஸ்திரம், அவர் கைவிரல்களில் உள்ள மோதிரங்கள் அனைத்தும் தத்ரூபம்.

கல்லிலே ஜாலம் புரிந்திருக்கிறார் அந்தக் கல் தச்சன்!

நம் கையை, அங்குள்ள ஒரு சிலையின் மேல் வைத்து ஒருபக்கம் மறைத்துக் கொண்டு பார்த்தால், யானை தெரிகிறது! மறுபக்கம் கையை வைத்து மறைத்துப் பார்த்தால் காளை தெரிகிறது!

அதோ! அங்கே முனிவர் ஒருவர் நிற்கிறாரே! போய்ப் பார்க்கிறோம். அவரது மேலாடையில் பட்டன்கூட இருக்கிறது. 'ராஜகுமாரி'! உன்னைத்தான் திருமணம் செய்வேன்!'' என்று சபதம் செய்திருக்கிறாராம் அவர். அவர் அருகே அந்த ராஜகுமாரி கூட நின்று கொண்டிருக்கிறாள். அவளது முகம் பளபளவென்று மெருகேற்றப்பட்டிருக்கிறது. ராஜகுமாரியின் தோழி ஒருத்தி அருகே நிற்கிறாள். அவள் கையில் தம்புரா கூட இருக்கிறது. நெற்றியில் நெற்றி சூடி -

சந்திரப்பிறை உள்ளது. எல்லாமே ஒரு நாடகக் காட்சியைப் பார்ப்பது போன்ற பிரமைகூட அல்ல, பிரமிப்பு!

ரதிதேவியின் கூந்தலை - அந்தத் தலைமுடியை - வரிவரியாக இழைஇழையாக அதுவும் கல்லிலே காட்டப்பட்டிருக்கும் திறமையை என்னவென்று சொல்வது!

ரதியின் மூக்கில் ஒரு சிறு துவாரம்கூட உள்ளது. எதற்கு? மூக்குத்தி போடவாம். ரதிக்கு ஒரு தோழி. வெற்றிலைபாக்கைத் துப்பப் பணிக்கம் (சிறு கிண்ணம்) ஒன்று அவள் கையில் உள்ளது. மற்றொரு தோழி, வெற்றிலையை மடித்துத் தருகிறாள்.

அடுத்து, நாம் அங்கே பார்ப்பது, ஏவலருடன் உள்ள வீரபுரத்திரர் சிலை. ஒரு கையில் கொம்பு வாத்தியத்துடன் காட்சி தரும் அவர் வலது காலை, இயல்பாக இல்லாமல் திருப்பி வைத்திருக்கும் நிலையில் காணப்படுகிறார். இங்கேயும் சிற்பியின் கைவண்ணத்தையே பார்க்கிறோம்.

இந்தச் சிலையிலும் விலா எலும்புகள் தத்ரூபமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. வீரபுரத்திரரின் தோழி ஒருத்தி பரதநாட்டியம் ஆடிக் கொண்டே, கிளிக்குப் பழம் தரும் காட்சியும் நம் கண்ணைக் கவர்கின்றது.

அதோ, வரிசையாக இரு பக்கமும் சிற்பக் கலையெழில் மிக்க தூண்களுடன் காட்சியளிக்கும் அந்த மண்டபம்தான் வீரப்பநாயக்கர் மண்டபம். 16-வது நூற்றாண்டில் கட்டப்பட்டது. இதை உற்சவ மண்டபம் என்றும் கூறுவர். இதேபோல உள் மண்டபம் ஒன்றும் காட்சியளிக்கிறது.

பொதுவாக, இங்குள்ள சிற்பங்கள் அனைத்துமே ஒரே கல்லால் உருவாக்கப்பட்டது.

தமிழகச் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் கிருஷ்ணாபுரம் சிற்பங்கள், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்துக்குப் பெருமை சேர்க்கும் ஒன்றாக நின்று நிலவி வருகின்றன.

- பி.வி. கிரி




மன்மதன் - கிருஷ்ணாபுரம்








# தமிழே! உன்னை வாழ்விக்க வாழ்வதுதான் நெல்லைச்சீமை!



நிலமகளின் தலைமகளே தமிழே! உன்னை
நீள்மாடக் கூடல்நகர் வளர்த்த போதும்
மலைமகளின் தலைமகளாம் பொதியை தானே
மணிவயிற்றில் தாங்குகின்ற பேறு பெற்றாள்!
அலைமகளின் தலைமகளாம் பொருநை யாற்றின்
அன்புத்தாய் ஆனவளும் அவளே! அந்த
மலைமகளின் காலடியில் மணக்கும் நெல்லை
மாநகரே கலைமகளின் கோவில் அம்மா!

மலையினிலே நீபிறந்தாய் உனைவ ளர்க்கும்
மரபுடையார் சாரலிலே பிறந்த வந்தார்!
தலையினிலே நீபிறந்தாய், தாயே, உன்னைத்
தாலாட்டு வோர்நெல்லை தனிற் பிறந்தார்!
அலைமரபு தொடர்வதைப்போல் தொடரும் நெல்லை
அறிஞர்புகழ் யாருரைக்கக் கூடும்! ஏதோ
சிலபெயரை மட்டும்நான் செப்பு கின்றேன்
சிற்றரிசிச் சித்திரமிக் கவிதை யம்மா!

தெள்ளுதமிழ் அகத்தியனார், திருமால் பக்திச்
சிறப்புரைத்த நம்மாழ்வார், திசைகள் போற்றும்
வள்ளுவத்தின் உரைப்பரிமேல் அழகர், என்றும்
வாழும் சே னாவரையர், சிவஞா னத்தார்


உள்ளுதொறும் இனிக்கும்அதி வீர ராமர்
உலகறிந்த குமரகுரு, கடிகை முத்து,
கள்ளவிழும் மலர்க்கூந்தல் பிராட்டி எங்கள்
காந்திமதி தனைப்பாடும் சொக்க நாதர்


கவிராச பண்டிதனார், கிருஷ்ணப் பிள்ளை
காவடிச்சிந் தளித்தஅண்ணா மலையார், தெய்வச்
செவிகளிக்கக் கவியளித்த தண்ட பாணி,
திரிகூட ராசப்பன், பூர்ணலிங்கம்
புவிமதிக்கும் மில்டனையே தமிழில் தந்த
புகழாளர் வெள்ளக்கால் சுப்ர மண்யர்,
அவனி தொழத் தமிழ்வளர்த்த கா. சுப் பிள்ளை,
அனவரத விநாயகனார், மாத வய்யா,


செக்கிழுத்த சிதம்பரனார், கம்பன் பாட்டுச்
சிறப்புரைத்த டி.கே.சி., நெல்லை யப்பர்,
மக்கள் தமிழ் தனைத்தந்த சொக்க லிங்கம்,
மகராச நீதிபதி, அறிஞர் பி.ஸ்ரீ.,
சொக்க வைத்த சங்கரதாஸ், இசைவெள் ளத்தில்
சுழலவைத்த கிட்டப்பா, சேதுப் பிள்ளை,
நக்கீர எழுத்தாளர் புதுமைப் பித்தன்,
நல்லறிஞர் பெ.நா.அ, நற்பா வாணர்,

ஆய்வறிஞ ராம்வையா புரியார், நல்ல
அ.சீ.ரா., பாஸ்கரர், சுப் பையா பிள்ளை,
காய்கதிர்போல் கனன்றெழுந்த தமிழர் தந்தை
கவிபோற்றும் ஆதித்தர் இவர்க ளோடு
தேய்வறியாத் தமிழ்நிலவு கவிதைத் கோமான்
தீரரெங்கள் பாரதியார் வாழ்ந்த சீமை!
வாய்வலிக்கச் சொல்வானேன், தமிழே, உன்னை
வாழ்விக்க வாழ்வதுதான் நெல்லைச் சீமை!

— கவிஞர் இளந்தேவன்










# களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம்

காடு, காட்டிலுள்ள விலங்குகள் இவற்றைப் பாதுகாப்பது மனிதனின் தலையாய கடமை. காட்டை வளர்ப்பதனால் இயற்கையையும் காட்டிலுள்ள விலங்குகளைப் பாதுகாப்பதனால் ஒரு நாட்டின் வளத்தையும் உணர்த்த முடியும்.

காடுகளையும், காட்டிலுள்ள விலங்குகளையும் வளர்ப்பதற்கு அரசு பலவித நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. முக்கியமாக புலிகளைப் பாதுகாப்பதில் அரசு தனித்த நடவடிக்கைகள் எடுத்ததன் மூலம், அவை அழிவதிலிருந்து பாதுகாக்கப்படுகின்றன. இந்தியாவில் புலிகள் காப்பகம் 18 இடங்களில் அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் களக்காடு- முண்டந்துறையில் புலிகள் காப்பகம் அமைந்துள்ளது.

களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், மேற்கு மலைத் தொடர் அடர்ந்த காடுகளின் தென்கோடியில் திருநெல்வேலி- கட்டபொம்மன் மாவட்டத்தில் சுமார் 817 சதுர கிலோமீட்டர் அளவில் நீண்டு விரிந்து 1988-ஆம் ஆண்டு உதயமாகியது. இப்பகுதியில் காண்பதற்குரிய வகை வகையான அரிய விலங்குகளும், தாவர இனங்களும் பெருகி நிறைந்துள்ளன. 175 குடும்பத்தைச் சார்ந்த 4,390 தாவர இனங்களில் 157 குடும்பத்தைச் சார்ந்த 2,105 இனங்கள் இவ்வன உயிர்க் காப்பகத்தில் மட்டுமே உள்ளன எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 17 வகையான விலங்கினங்கள் இங்கு வாழ்கின்றன.

தாமிரபரணி ஆறு, இவ்வன உயிர்ப் பகுதியாகிய மலையுச்சியிலிருந்து உற்பத்தியாகி பாம்பார், மைலார், காரையார், சேர்வலார், மணிமுத்தார், பேயார், உள்ளார், கவுதலையார் ஆகிய ஆறுகளில் இணைந்து, கலந்து, தவழ்ந்து வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். இதிலிருந்து சுமார் 48 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் திருநெல்வேலியிலிருந்து சுமார் 50 கிலோமீட்டர் தூரத்தில் இப்புலிகள் காப்பகம் அமைந்துள்ளது. மொத்த வன உயிர்ப் பரப்பளவான 817 சதுர கிலோமீட்டரில் 459 சதுர கிலோ மீட்டர் பகுதி இடையூறுகள் இல்லாத 'கோர் பகுதி' யாகவும், 358 சதுர கிலோமீட்டர் பரப்பளவு பஃபர் பகுதியாகவும் பராமரிக்கப்படுகிறது. 35 சதுர கிலோமீட்டர் பகுதி மட்டும் சுற்றுலாப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.


இப்பகுதியில் 10 வகைக் காடுகள் உள்ளன. அவை: பசுமை மாறாக் காடுகள், பாதி பசுமை மாறாக் காடுகள், ஈரப்பசையுள்ள இலையுதிர்க் காடுகள், உலர் இலையுதிர்க் காடுகள், தேக்கு மரக் காடுகள், ஆற்றோரக் காடுகள், முட்புதர்க் காடுகள், ஈத்தக் காடுகள், புல்வெளிக் காடுகள், தட்ப வெப்ப இலையுதிர் காடுகள்.

இந்தியாவில் காணப்படும் 18 வகையான மனித இனமல்லாத குரங்கு வகைகளுள் சிங்கவால் குரங்கு, தேவாங்கு, கருமந்தி, ஹனுமான் மந்தி, போன்னட் குரங்கு ஆகிய 5 இனங்கள் உள்ளன. இவைகளுடன் மிளா, காட்டுப் பன்றி, புள்ளிமான், முள்ளம் பன்றி, கீரிப்பிள்ளை முதலிய பல விலங்குகள் உள்ளன.

இக்காப்பகம் இந்தியாவின் தென் கோடியிலுள்ள புலிகளின் உறைவிடமாக அமைகிறது. புலி தவிர சிறுத்தைப் புலி, காட்டுப் பூனை, புனுகுப் பூனை, செந்நாய், குள்ள நரி, கழுதைப்புலி ஆகிய மிருகங்களும் வாழ்கின்றன. மேலும் வரை ஆடு, கரடி, காட்டு மாடு, யானை, மலபார் அணில், பறக்கும் அணில், சருகுமான், அலுங்கு ஆகிய அரிய இன விலங்குகளும் காணப்படுகின்றன. ராஜநாகம், கட்டு விரியன், கண்ணாடி விரியன், பார்க் பிட் வைப்பர், உடும்பு, பல்லி, ஓணான், ஆமை, முதலை, அரிய வகைத் தவளை இனங்களும் உள்ளன. கொக்கு, நாரை, ஸ்பர்வுள், கதுவாலி, மினிவெட், ஈ உண்ணி, நைட்ஜார், கழுகு, ஸ்விப்ட், வாக் டெயில்ஸ், டிராங்கோஸ், பாரடைஸ் பிளைகேட்சர், பாரகீட் முதலிய 80-க்கும் மேற்பட்ட பறவையினங்கள் வாழ்ந்து வருகின்றன.

இப்புலிகள் காப்பகம் பற்றியும், திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சித் திட்டங்கள் பற்றியும் திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆட்சித் தலைவர் திரு வேலு அவர்களிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:

“இந்த வனக் காப்பகம் தென்றல் உற்பத்தியாகும் இடம். 60 சதவிகிதம் அரிய வகைத் தாவரங்கள் இங்கு உள்ளன. மூலிகைச் செடிகள் அதிக அளவில் காணப்படுகின்றன. சந்தனம், தேக்கு மரங்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளன. இக்காடுகளில் அரிய வகைக் கற்கள் கிடைப்பதால் மக்கள் அதை எடுப்பதற்கு வருவதால் தமிழக அரசு பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி வருகிறது”



இப்புலிகள் காப்பகத்தில் ஆராய்ச்சி அதிகாரியாகப் பணி புரியும் திரு டி. பாண்டியன் அவர்கள் புலிகள் காப்பகம் பற்றியும் அதன் சிறப்புகள் பற்றியும் எடுத்துக் கூறினார். அழிந்து வரும் புலிகளின் எண்ணிக்கையைக் குறைக்க அரசும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக விளக்கினார். புலிகளின் வளர்ப்பு பற்றிய சிறப்புப் படங்களைக் காண்பித்தார். தலையணை என்ற இடத்தில் நூலகமும், அருங்காட்சியகமும், தங்கும் விடுதியும் உள்ளன.

புலிக் குட்டியானது பிறந்து 3 வாரங்கள் வரை கண் திறப்பதில்லை. அதுவரை புலி தனது குட்டிகளை மிகப் பாதுகாப்புடன் கவனித்துக் கொள்கிறது. 3 வாரத்திற்குப் பிறகு நடப்பதற்குப் பழகுகிறது. வளர்ந்தவுடன் உணவு வேட்டையாடச் செல்லும்பொழுது குட்டிகளையும் அழைத்துச் செல்கிறது. மானை வேட்டையாடியவுடன் குட்டிகளை உண்ணச் சொல்லி விட்டுக் காவல் புரிகிறது.

முண்டந்துறையில் இருந்து காரையார், கண்ணிக் கட்டி, பேயார், காளிபார் புல் மொட்டை வரை சுமார் 22 கிலோமீட்டருக்கு சாலை உள்ளது. கேரளாவில் இருந்து போனக்காடு எஸ்டேட் வரை ஒரு வழி உள்ளது. முண்டந்துறையில் இருந்து கேரளா வரை சாலை வரவேண்டும் என்று ஒரு திட்டம் உள்ளதாம். அத்திட்டம் நிறைவேறினால் இப்புலிகள் காப்பகம் பாடு திண்டாட்டமாகி விடும்.

முண்டந்துறையில் சின்ன மயிலார், பெரிய மயிலார், இஞ்சிக் குழி போன்ற கோர் பகுதியில் காணிக்காரர்கள் என்றழைக்கப்படும் 52 மலைவாழ் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. குச்சில்காடு பகுதியில் 15 குடும்பங்கள் உள்ளன. இந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் மின்சார வாரியத்திற்குச் சொந்தமான நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துப் பயிர் செய்து வருகிறார்கள்.

களக்காடு-முண்டந்துறையில் 7 வனச் சரகம் உள்ளன. அவை: கடையம் வனச் சரகம், பாபநாசம் வனச் சரகம், முண்டந்துறை வனச் சரகம், அம்பாசமுத்திரம் வனச் சரகம், சேரன் மகாதேவி வனச் சரகம், களக்காடு வனச் சரகம், திருக்குறுங்குடி வனச் சரகம். ஒவ்வொரு சரகத்திற்கும் இடையே ஒரு கி.மீ. இடைவெளி உள்ளது. ஒவ்வொரு சரகத்திலும் 8 கண்காணிப்பாளர்கள் உள்ளனர்.

முண்டந்துறையில் எக்கோ வளர்ச்சித் திட்டத்தின் மூலம் மலை வாழ் கிராமங்களுக்கு இலவச மருந்து, ஆலோசனைகள் வழங்குகின்றனர். ஒவ்வொரு மாதமும் 5 கிராமங்களுக்கு 5 மருத்துவர்கள் சென்று சிகிச்சை செய்து வருகின்றனர். இந்த மருத்துவ முகாம்களுக்கு மக்களிடையே பெரும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது என்று வன விலங்கு உதவிக் காப்பாளர் திரு எபனேசர் அவர்கள் கூறினார்.

களக்காடு-முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் 2,500 அடி உயரத்தில் செங்குறிஞ்சி மரம் (Gluta Travncorca) உள்ளது. இது 24 ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் அதிசய குணம் கொண்டது.

## ஊரும் பேரும்

**சிவகிரி**

தோப்புகள் நிறைந்த ஊர் இது எனலாம். அரண்மனைத் தோப்பு, கண்மாய்த் தோப்பு, புறகரைத் தோப்பு. சண்முக ஆல் தோப்பு, தென்னந்தோப்பு, மாந்தோப்பு ஆகியவை இங்கு மிகுதியாக உள்ளன. நெல் விளையும் பூமியான இங்கு மாம்பழத்துக்கும் குறைவில்லை.

புல்வர்ட்டன் என்ற ஆங்கிலேயத் தளபதி, மூன்று மைல் தூரத்துக்குக் காடுகளை அழித்து சிவகிரி கோட்டையைக் காப்பாற்றினார் என்பது வரலாறு.

# நூல் நயம்

### உத்தரமேரூர் உலா

**ஆசிரியர்: இனியவன்**

**வெளியீடு:**

வாசுகி நூலகம்,
விநாயகநல்லூர்,
வேடந்தாங்கல் அஞ்சல்-603 314.

பக்கம்:136 விலை:ரூ.30/-

**ஊ**ரும் பேரும் அறிந்து கொள்ள ஆவல் எழுவது இயல்புதானே? அந்த வகையில் உத்தரமேரூர் குறித்த செய்திகளையெல்லாம் ஒருசேரத் தொகுத்துத் தந்திருக்கிறார் நூலாசிரியர்.

இந்த நூலில் உத்தரமேரூர் குறித்த விரிவான வரலாற்றுச் செய்திகள், செவி வழிக் கட்டுக் கதைகள் ஆகியவற்றோடு நிகழ்கால உண்மைகளும் இழையோடி இருக்கின்றன.

புதுமைச் சிறப்போடு விளங்கும் புத்தக அமைப்பு நூலுக்கு மெருகேற்றுகிறது. பண்டைய சிறப்பை விளக்கும் இந்நூல், பள்ளி மாணவர்க்கு மட்டுமல்ல, இத்துறை ஆர்வலருக்கும் பயன் தரும் களஞ்சியமாகும்.

—பி.வி.ஜி.

### ஞானச்சுடர் பட்டினத்தார்

**ஆசிரியர்: மயிலைத் தொண்டன்**

**வெளியீடு:**

தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு)
சூளைமேடு, சென்னை-94.

பக்கம்:112 விலை:ரூ.16/-

**ப**க்திச் சுவையுடன் சமுதாயச் சீரழிவுகளையும் இழையவிட்டுப் பாடியவர் பட்டினத்தடிகள்.

இந்நூலில் அவரது வரலாற்றோடு, அவர் மனித குலத்துக்கு வழங்கிய மாபெரும் கருத்து மணிகளை ஆங்காங்கே ஒலித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

மானிட வாழ்க்கையின் தத்துவமும், மாய வாழ்க்கையின் மன மயக்கமும் அழகுற எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அனைவரும் படிக்க வேண்டிய நூல்.

### மென்மலர்

**ஆசிரியர்: ரா. ராஜதுரை**

**வெளியீடு:**

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
பார்க் டவுன், சென்னை-600 003.

பக்கம்:87 விலை:ரூ.25/-

**மி**கச் சிறந்த பத்துச் சிறுகதைகளின் தொகுப்பாகும் இது. முதல் கதை 'மென் மலர்' மனத்தை நெகிழ வைக்கிறது. இதே போல, மற்ற கதைகளும் சமுதாயப் பிரச்சினைகளை நமக்கு உணர்த்துகின்றன. ஆசிரியரின் எளிய நடை இதயத்தைத் கவருகின்றது. எப்போதோ எழுதப் பட்ட சிறுகதைகள் என்றாலும், இப்போதும் படிக்கத் தூண்டுகிறதே!

### புதுயுகச் சிற்பி

**ஆசிரியர்: கவிஞர் துளசிதாசன்**

**வெளியீடு:**

துளசிதாசன் பதிப்பகம்,
26, டாக்டர் பெசன்ட் சாலை,
சென்னை-600 004.

பக்கம்:80 விலை:ரூ.12.50/-

**பு**துக் கவிதைகளின் தொகுப்பு. பல கவிதைகள் இதயத்தைத் தொடுகின்றன. சமுதாயப் பிரச்சினைகளைப் படம் பிடித்துக் காட்டும் பாடல்கள் பல. குழந்தைகளுக்கும்கூடப் பாட்டு உண்டு.

மதம் அழிப்போம் - ஜாதி
மதம் அழிப்போம் - தம்பி
'மதம்' எனும் நச்சதன்
வேரறுப் போம்!'

என்கிறார்.

### கடவூர் மணிமாறன் பாடல்கள்

**ஆசிரியர்: டாக்டர் கடவூர் மணிமாறன்**

**வெளியீடு:**

விடியல் வெளியீட்டகம்,
109, மேலைத்தெரு,
கிருட்டிணராயபுரம்-639 102.
திருச்சி.

பக்கம்:112 விலை:ரூ.15/-

**இ**ந்நூலில் 54 கவிதைகள் உள்ளன. ஒவ்வொன்றும் தித்திக்கும் தீங்கரும்பு. பாவேந்தர் பக்கம், கொள்கை முழக்கம், குமுகாயச் சிந்தனை ஆகிய மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

பாவேந்தரைப் பற்றிக் கூறுகையில், 'வளமான சிந்தனையின் உரைகல்' என்றும், 'விழிப்புக்கு நாற்றங்கால் நீயே' என்றும் தமக்குப் பின்னால் பன்னூறு பாமலரை அரும்பச் செய்த பாங்குமிகு பூம் பொழிலே!' என்றும் போற்றுகிறார்.

குமுகாயச் சிந்தனையில், 'இல்லாமை இடம் / பெயர வேண்டும்' என்கிறார். நல்ல கவிதைத் தொகுப்பு.

### குளிர் சாதனங்கள் ஏர்கண்டிஷன் ரெப்ரிஜிரேஷன்

**ஆசிரியர்: ஏ.கே. சேஷய்யா**

**வெளியீடு:**

கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:112 விலை:ரூ.16/-

**ஒ**ரு காலத்தில் ஆடம்பரப் பொருளாகக் கருதப்பட்ட குளிரூட்டும் பெட்டி (ரெப்ரிஜிரேட்டர்) இன்று பல மத்தியத் தரக் குடும்பங்களில் பயன்படுத்தப் படுகிறது. குளிர்சாதனப்பெட்டி இன்று ஒரு இன்றியமையாத சாதனமாக அமைந்து விட்டது. இதைப்போலவே இன்று பல அலுவலகங்கள் மற்றும் உயர்தரக் குடும்பங்களில் ஏர்கண்டிஷன் அமைக்கப்பட்டு பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

இவ்விரு குளிர்சாதனங்களைப் பற்றி விவரமாக எடுத்துரைக்கிறது இந்நூல். இந்தக் குளிர்சாதனங்களின் அமைப்பு முறை, இவற்றில் பயன்படுத்தப்படும் வாய்ப்புகள், இயங்கும்முறை ஆகியன பற்றிப் படங்களுடன் விளக்கியிருக்கிறார் ஆசிரியர்.

குளிர்சாதனங்களைப் பழுதுபார்க்கும் முறைகள் பற்றி இந்நூலின் கடைசி அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது, இந்தச் சாதனங்களை வைத்திருப் போருக்குப் பயன்தரக் கூடியது ஆகும்.

—ஜே.சந்திரன்

### 'கொலைகாரன் கை'

**ஆசிரியர்: மோபசான்**

**வெளியீடு:**

சாந்தா பப்ளிஷர்ஸ்,
5, ஸ்ரீபுரம் 2-ஆம் தெரு,
இராயப்பேட்டை, சென்னை-600 014.

பக்கம்:110 விலை:ரூ.15/-

**மோ**பசான் சிறுகதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு நூல்.

ஒவ்வொரு சிறுகதையையும் ஓர் எழுத்தாளர் மொழிபெயர்த்திருக்கிறார். 'பிரெஞ்ச்' மொழியிலிருந்து நேரடியாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளதாலும், இவற்றை மொழி பெயர்த்துள்ள அறிஞர் பெருமக்கள் பிரெஞ்ச், தமிழ் மொழிகளில் புலமை பெற்றவர்கள் என்பதாலும், இக்கதைகளில் மோபசானின் எழுத்தில் உள்ள உணர்வுகளையும், உயிரோட்டத்தையும் காண முடிகிறது.

பல அற்புத மலர்களின் மணங்கமழும் கதம்ப மாலை இந்நூல்.

—என். குமாரசாமி



# மக்களாட்சித் தத்துவத்தின் மாட்சிக்கு அடிப்படை - பயனுள்ள விவாதங்களே...

**அகில இந்தியச் சட்டப்பேரவைத் தலைவர் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை**

அகில இந்தியச் சட்டப்பேரவைத் தலைவர்கள் மாநாடு தொடர்பாக நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கின் தொடக்க விழாவில் உங்களோடு கலந்து கொள்ளும் வாய்ப்பை எனக்குத் தந்த மாண்புமிகு நாடாளுமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருமைமிகு இம்மாநாடு, உன்னதமான சென்னை மாநகரில் நடைபெறுவது குறித்து, நான் தனிப்பட்ட முறையில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இங்கு தங்களுக்கு உயர்ந்த தங்குமிட வசதிகள் செய்யப்பட்டிருக்கும் என்பதோடு உங்களுடைய விவாதங்கள் பயனுள்ளவையாகவும் ஆக்கப்பூர்வமாகவும் அமையும் என நான் நம்புகிறேன்.

இங்கே தங்கியிருக்கும் இந்தக் கால கட்டத்தில் தமிழகச் சட்டப்பேரவை ஆவணக் காப்பகத்துக்குச் சென்று, அங்குள்ள ஆவணங்களைப் புரட்டிப் பார்த்து, இந்தப் பேரவை பாதுகாத்துப் பேண விரும்புகின்ற மரபுகளையும் பண்புகளையும் நீங்கள் அறிந்து கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமையும் என நம்புகிறேன்.

புகழ்வாய்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் மாபெரும் தலைவர்களும் இதே மண்டபத்தில் அமர்ந்து நம் நாட்டின் சட்டப்பேரவை வரலாற்றுக்குக் குறிப்பிடத்தக்க பங்கினை அளித்துள்ளார்கள். தலைசிறந்த அரசியல் தலைவர்கள் இந்த உன்னத அவையில் நடைபெற்ற விவாதங்களில் பங்கெடுத்ததன் மூலம் ஜனநாயக மரபுகளை வரைமுறைப்படுத்தி வடிவமைத்துள்ளார்கள். தொலைநோக்குப் பார்வையையும், மக்களின் நலன்களையும் தங்கள் இதயங்களில் நிறுத்திய மாமனிதர்கள். இங்கே உறுப்பினர்களாகிய

சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு மக்களின் பொருளாதார, சமூக வளர்ச்சிக்கான கொள்கைகளை வகுப்பதில் அரசுக்கு உதவியாக, இருந் திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தலைவர் களின் பெயர்ப் பட்டியல் மிக நீளமாக இருப்பதால், அவர்கள் அனைவரின் பெயர்களைக் குறிப்பிடுவது கடினமாக உள்ளது. அவர்களில் ஒரு சிலரை மட்டும் குறிப்பிட்டால், நான் பாரபட்சமாக நடந்து கொள்ளுகிறேன் என்ற குற்றச் சாட்டுக்கு ஆளாவேன்.

இங்கே அங்கம் வகித்த உறுப்பினர் களின் உயர்ந்த தரத்தின் காரணமாக, அகில இந்தியச் சட்டப்பேரவை வரலாற் றில், தமிழ்நாடு சட்டப்பேரவை ஒரு பெருமைமிகு இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை மட்டும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

எனவே, தமிழ் மக்களின் தலை நகராம் எழில்மிகு சென்னையை, அது வும், மதிநுட்பமும், தேர்ந்த அணுகுமுறை யும் ஒருங்கே இணைந்து சட்டமன்றத்தின் சிறப்பான இயக்கத்துக்குக் காரணமான மக்களைக் கொண்ட தமிழகத்தின் தலை நகரை நீங்கள் தேர்ந்தெடுத்திருப்பது சாலப் பொருத்தமானதாகும்.

சட்டமியற்றும் அவை, நாடாளு மன்றமுமாக இருந்தாலும், சட்டப் பேரவை அல்லது மேலவையாக இருந் தாலும் அது மக்களாட்சியின் மைய மாகவே விளங்குகின்றது. அது மக்களாட் சிப் பண்புகளின் இதயமாகவும், ஆன்மா வாகவும் உள்ளது. அது அரசியல் அமைப் பின் உண்மையான சிறு வடிவமாக (true miniature) அமைகிறது. மக்களின் எண்ணங்களைப் பிரதிபலித்து, கருத்துக் களாக அவற்றை உருவாக்கி, சட்டங் களாக இயற்றி, செயல் திட்டங்களாக அது நிறைவேற்றுகிறது.

''மக்களுக்கும் அரசுக்கும் இடையே பாராளுமன்றம் ஒரு பாலமாக அமை கிறது. சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ள வும், உருவாக்கவும் இயலும் இடமாக இது அமையும். பேரவை உறுப்பினர்கள் மக்களின் கருத்துக்களை வெறுமனே பின்பற்றுகிறவர்களாக இல்லாமல், அவர்களை வழிநடத்துபவர்களாக இருக்க வேண்டும்'' என்று டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் கூறியிருக் கிறார்கள். எனவே, பேரவையானது, தலைமைப் பண்பு மற்றும் அரசியற்கலை ஆற்றல்களை வெளிப்படுத்திக் காட்டுகிற சிறந்த வாய்ப்புகளை நல்குகிறது. பேரவை யின் கவனம், நிகழ்காலப் பிரச் சினைக்குத் தீர்வு காண்பது என்ற அளவோடு நின்றுவிடுவதில்லை; எதிர் காலப் பிரச்சினைகளுக்காகவும் அர்ப் பணிக்கின்ற வகையில் இருக்குமானால் அது நிகழ்காலத் தேவையை நிறைவு செய்வதோடு எதிர்காலச் சமுதாயத்தின் நலனையும் கருத்தில் கொண்டதாக அமையவேண்டும். ஹெரால்டு லாஸ்கி சொன்னதைப் போல, பிரச்சினைகளை வெறுமனே உற்று நோக்காமல், அவை களைப் பற்றிய ஒரு விசாலமான பார்வை யும் இருந்திடல் வேண்டும். இத்தகைய செயல்பாடுகள் தான் பேரவை அதன் உண்மையான நோக்கத்தை நெருங்கச் செய்யும்.

குடியாட்சிக் கோட்பாட்டுக்குக் கட்ட மைப்பும் வடிவமும் தந்து, அதைச் செயல்படச் செய்யும் முக்கியமான ஒரு அமைப்பு சட்டப்பேரவையாகும். ஆனால், மக்களின் எதிர்பார்ப்புகளே அதிமுக்கியத் துவம் வாய்ந்தவையாகும். 'மக்கள்' 'சக்தி' என்று பொருள்படும் இரண்டு கிரேக்கச் சொற்களிலிருந்து வந்தது தான் 'மக்களாட்சி' என்னும் சொல் ஆகும். அதன் சொற்பொருள் 'மக்களின் ஆட்சி' என்பதே ஆகும்.

இதைத்தான் 'மக்களால், மக்களுக் காக, மக்களே நடத்தும் மக்களின் அரசு' என்று அருமையாகக் குறிப்பிட்டார், ஆபிரகாம் லிங்கன்.

இன்றைய மக்களாட்சி அமைப்பில், மக்களால் தேர்வு செய்யப்பட்ட பேரவை மக்களின் எதிர்பார்ப்புகளை வலி யுறுத்துகிற இடம் அதோடு நிர் வாக அமைப்பானது பேரவைக்குப் பதில ளிக்கக்கூடிய பொறுப்பையும் உள்ளடக் கியதாகவுள்ளது.

பண்டைய கிரேக்கத்தில் மக்களாட்சி முறை விரிந்து பரந்திருந்தது. ஆனால், அப்போது இருந்த மக்களாட்சி முறை தற்போதைய மக்களாட்சி முறையில் அடிப்படையிலேயே வேறுபாடு கொண்ட தாக உள்ளது. அன்றைய மக்களாட்சி நேரடியானது; அதாவது இன்றைய பிரதிநிதித்துவ முறை அன்றைய மக்கள் அறிந்திராத ஒன்றாகும். மேலும் இந்த அரசமைப்பில் அனைத்து மக்களும் ஈடு பாடு கொண்டிருந்தனர். ஏனெனில், மாநிலம் என்பது ஒரு நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை உள் ளடக்கிய குறுகிய எல்லை கொண்டதாக இருந்தால் அது சாத்தியமாமிற்று.

இன்று மக்களாட்சி தத்துவம் சட்டப் பேரவையில் வெளிப்படுத்தப்படுகிறது. சட்டப்பேரவையில் மக்கள் பிரதிநிதித்துவ அமைப்பின் மூலம் இது வெளிப்படு கிறது. சட்டப்பேரவை அலுவல் நடை முறை மற்றும் செயல் முறைகள் மூலமும்

## ''எல்லாச்சட்டமன்றங்களுக்கும் அனுப்பவேண்டிய சிறந்த உரை!''

### மாண்புமிகு தமிழக முதல்வர் உரைக்கு மக்களவைத் தலைவர் திரு சிவராஜ் பட்டீல் பாராட்டு!

''இன்று நமது கருத்தரங்கின் பொருளான ''அவையில் விவாதத்தின் தரத்தை எவ்வாறு உயர்த்துவது'' என்பது குறித்து முதல்வர் ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை எண்ணங்களைத் தூண்டுவதாகவும், முழுமையாகவும் இருந்தது. அவரது உரை எங்களுக்கு உற்சாகமூட்டுவதாக இருந்தது.

''அனைத்து மாநிலச் சட்டமன்றங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பக்கூடிய வகையில் அவரது உரை இருந்தது. அவையில் பேசக்கூடிய பேச் சாளர்களுக்குத்தான் இந்த உரை என்று கருதுகிறேன்.

''முதல்வர் ஜெயலலிதா அவர்களின் இந்த உரை, இன்றைய கருத்தரங்கின் தரத்தை உயர்த்தி விட்டது. இந்தக் கருத்தரங்குக்கு மேலும் புகழைச் சேர்த்து அதிக அர்த்தமுள்ளதாக ஆக்கிவிட்டது. அவருக்கு நாங்கள் அனைவரும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்''.



**நம்பிக்கையைக் கைவிடாதே. அதுதான் வெற்றியின் முதல் படிக்கட்டு.**

**- பேரறிஞர் அண்ணா**

மாண்புமிகு உறுப்பினர்களின் செயற்பாடுகளின் வெளிப்படுத்தப்படுகிறது. எனவே, இன்று மக்களாட்சிஸ்யச் செயல்படுத்துவது மிகச் சிக்கலான பணியாகும். அது, சட்டப்பேரவையின் அன்றாடப் பணிகளுடன் நின்றுவிடுவது மட்டுமல்ல; மக்கள் சக்தியில் நம்பிக்கை வைத்திருக்கும் பொதுப் பிரச்சினைகளை நிர்வகிப்பதில் தகுந்த அணுகுமுறையைப் பயன்படுத்துவதாகவும் அமையவேண்டும்.

குறிப்பிட்ட வாழ்க்கை முறைகளையும், ஒழுங்குமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டுமென மக்களாட்சி முறை நெறிமுறைப்படுத்துகிறது. இவையனைத்தும், மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காகச் சமுதாயத்தின் சக்தியினை ஒருமுகப்படுத்துவதற்கே ஆகும். பகுத்துப் பார்த்தல், அலசிப் பார்த்தல், விவாதித்தல், பொருத்தமானவற்றை ஏற்றுக்கொள்ளுதல் என்பவைகள் பிரச்சினை தீர்க்கும் அணுகுமுறையாக இருக்க வேண்டுமென வலியுறுத்துகிறது. சுருங்கக் கூறின், மக்களாட்சி நமக்கு ஒரு கண்ணோட்டத்தையும், வாழ்க்கை முறையையும் தந்து, சில லட்சியங்களையும், கோட்பாடுகளையும் சிறந்த நடைமுறைகளையும் ஏற்றுக் கொள்ளச் சொல்கிறது.

சிந்திக்கவும், சிந்தித்ததை வெளிப்படுத்தவும், தேவையான சுதந்திரத்திற்கு மக்களாட்சி வழிவகுக்கிறது. ஆனால், இந்தச் சுதந்திரம், நடுநிலையோடு, கனிவுடன் அடுத்தவர்களின் எண்ணங்களுக்கும், நோக்கங்களுக்கும் மதிப்பளிப்பதாக இருக்க வேண்டும். மக்களாட்சியின் வெற்றிக்கும் இதுவே அடிப்படையாகும். ஒரு குழப்பமான நிலைமைக்கு மக்களாட்சி இறங்கிவிடக்கூடாது. அதே நேரத்தில், மக்களாட்சி பெரும்பான்மையினரின் அல்லது சிறுபான்மையினரின் கொடுங்கோல் ஆட்சியாகவும் மாறி விடக்கூடாது.

என்னைப் பொறுத்தவரையில், மக்களாட்சி செயல்பாட்டுக்குச் சரியான அடையாளம் என்பது வேறு எதையும்விட நமது சாதனைகளின் தரம், எண்ணங்களின் தரம், அரைகளைப் பிரதிபலிக்கும் விதம் ஆகியவைகளைப் பொறுத்தே அமையும்.

விவாதித்தல், விவாதிப்பதன் மூலம் நமது கருத்துக்களை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வைத்தல், மாறுபட்ட கருத்துக்களைச் சரி செய்து கொள்ளுதல் ஆகியவையே மக்களாட்சி அணுகுமுறையாகும். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது சரியான நிலையையோ, தங்களுடைய கருத்தில் புதைந்துள்ள நியாயங்களையோ, தங்கள் தத்துவங்களின் ஏற்றுக் கொள்ளக் கூடிய தன்மைகளையோ, சக உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் முன் வைப்பதே விவாதமாகும். சிந்தனைகளைத் தூண்டும் விதமாகவும் விவாதங்கள் உயர்தரமாக அமைய வேண்டும். சிறந்த விவாதம் என்பது திறமைகளை மட்டுமே வெளிப்படுத்துவதாகாது. அது நாகரீகத்தையும், நன்னடத்தையையும் பிரதிபலிப்பதாகும்.

நாம் நமது பேரவைகளை அமைக்கும் போது 'பாராளுமன்றங்களின் தாய்' என்று, அழைக்கப்படும் ஆங்கிலேயப் பாராளுமன்ற முறையின் தாக்கத்தால் உந்தப் பெற்றோம். கருத்துக்களைப் பிரதிபலிப்பது என்ற வகையில் விவாதங்கள், ஆங்கிலேய மக்களவையில் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன. இங்கிலாந்து மக்களவையில் மூன்றில் ஒரு பங்கு நேரம் விவாதங்களுக்காகவே ஒதுக்கப்படுகிறது என அறிகிறேன். கிளாட்ஸ்டன், டிஸ்ரேலி, வின்ஸ்டன் சர்ச்சில், ஆட்லி ஆகிய பிரபல அரசியல் வித்தகர்கள் தங்களுடைய வரலாற்றுப் புகழ் மிக்க விவாதங்களின் மூலம் சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கட்சிக் கண்ணோட்டத்தில் மற்றவர்கள் மீது புழுதி வாரி வீசுதல் - தம் கட்சிக்குப் பலம் சேர்த்தல் என்பவற்றைத் தாண்டி வெற்றுச் சடங்காக இல்லாமல் அமைகின்ற வாதமே சிறப்புடைய வலிமையான வாதமாகும். பிரச்சினைகளை அலசி, அடுத்தவர்களுடைய கருத்துக்களை நன்கு புரிந்து கொண்டு அவைகளைத் திறமையாக மடக்கும் திறமையை இது பிரதிபலிக்கிறது.

சட்டமன்றம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் தலை சிறந்த சாதனமாகவே 'விவாதம்' நிலை நிறுத்தப்படுகிறது. இங்கிலாந்து நாட்டில், கடினமான கால கட்டங்களில், நாட்டின் ஒட்டுமொத்த மனநிலையை வெளிப்படுத்த விவாதங்கள் பயன்படுத்தப்பட்டன. 1940 மே திங்களில் நார்வே படையெடுப்புப் பற்றி இரண்டு நாடகளாக இடைவிடாது நடைபெற்ற ஆணித்தரமான விவாதங்களின் காரணமாகத்தான் போர்க்காலப் பிரதமராக இருந்த நெவில்சேம்பர்லின் பதவி விலக வேண்டியிருந்தது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அண்மையில், 1982, ஏப்ரல் திங்கள் 2-ஆம் நாள் பாக்லாந்து தீவுகளின் மீது எடுக்கப்பட்ட படையெடுப்பின் போது, இங்கிலாந்து பாராளுமன்றத்தில் கொட்டப்பட்ட உணர்ச்சிகள் நாட்டு மக்களின் ஒட்டுமொத்த எண்ணங்களைப் பரதிபலிப்பதாக அமைந்தன. எதிர்க்கட்சித் தலைவர் திரு மைக்கேல் புட் அவர்களின் உணர்ச்சிகரமான முழக்கத்தைத் தொடர்ந்து தான் அர்ஜென்டினாப் படைகளை வெளியேற்ற திருமதி தாட்சர் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைஏற்பட்டது. தவறான், மிருகத்தனமான ஆக்ரமிப்பு உலகில் வெற்றியடையாது என்பதை அரசாங்கம் இப்பொழுது செயல்களின் மூலம் நிரூபித்தாக வேண்டும். அவற்றை வார்த்தைகளால் எப்போதுமே சாதிக்க முடியாது. அப்படி இந்த ஆக்ரமிப்பு வெற்றி பெற்றுவிட்டால், அது பாக்லாந்து தீவுக்கு மட்டுமல்ல, அபாயகரமான இந்தப் பூமிப்பந்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் ஆபத்தாகவே முடியும்.

இங்கிலாந்து மக்களவையின் உறுப்பினர்களின் விவாதத் திறமைகளைக் கொண்டே அவர்களின் அரசியல் அந்தஸ்து உயர்ந்தும் தாழ்ந்தும் இருக்கின்றன. உறுப்பினர்களின் அறிவாற்றலையும், மற்றவர்கள் தங்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவைக்கும் ஆற்றலையும் பரிசோதிப்பதாக இந்த விவாதங்கள் அமைகின்றன. சிறந்த அரசியல்வாதியின் படைக்கலன்களில், விவாதம் ஓர் இன்றியமையாத ஆயுதமாகவே கருதப்படுகிறது. ஆகவே, விவாதங்கள், விவாதங்களாக மட்டுமல்லாமல், அரசின் கொள்கைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதால் உயர்ந்த மதிப்பையும் பெற்றுள்ளன. விவாதங்கள், ஆளுங்கட்சியினருடையதாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியினருடையதாக இருந்தாலும் சரி, அமைச்சர்கள் தொடர்ந்து தங்களுடைய கொள்கைகளையும் செயற்பாடுகளையும் வகுத்துக் கொள்ளப் பெரிதும் உதவுகின்றன.

சட்டமன்றம் வெற்றிடத்தில் பணி புரியவில்லை. எனவே, சட்டமன்றத்தின் தாக்கம் மக்களிடையே அது கொண்டுள்ள உறவைப் பொறுத்துள்ளது.''

''சட்டப்பேரவை தேசத்தின் ஒலிக் கருவியாகும். அது மக்களுக்காகவும் பேசுகிறது மக்களுடனும் பேசுகிறது'' என்று இலாயிட்ஸ் ஜார்ஜ் கூறினார். எனவே, சட்டப்பேரவையின் விவாதங்கள் மக்கள் கருத்தைப் பாதிக்கின்றன. மக்கள் கருத்தாலும் பாதிக்கவும் படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய

பொறுப்புகளை நிறைவேற்ற ஒரு கருவியாக விவாதங்களைப் பயன்படுத்தும் அளவில் சட்டப்பேரவையின் வெற்றிகரமான இயக்கம் உறுதி செய்யப்படுகிறது.

மற்றொரு முக்கியமான பொருளை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஜனநாயகத்தில் ஒரு முக்கியமான அம்சத்தைச் சட்டப்பேரவைகள் கோடிட்டுக் காட்டுகின்றன. அதாவது, தார்மீக அணுகுமுறையின் அவசியத்தை அவை வற்புறுத்துகின்றன. விவாத முறையன் மூலம், மாண்புமிகு உறுப்பினர்கள், கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொண்டு, பிரச்சினைகளைத் தீர்க்க ஒப்புக்கொள்கிறார்கள். டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் ஒரு முறை கூறினார்.

''மக்களாட்சித் தத்துவத்தின் அறப் பண்புகளை நாம் வலியுறுத்துகிறோம். நாம் விண்ணப்பித்து நற்பலன் அடைகிற அளவுக்கு ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் பகுத்தறிவுக்கூறு இருக்கிறது என்று கருதுகிறோம். நாம் எப்போதும் சரியாகத்தான் இருப்போம் என்று சொல்ல முடியாது, என்பதையும், நமது எதிராளிகள் சில நேரத்தில் சரியாக இருப்பார்கள் என்பதையும் நாம் நம்ப வேண்டும். நமது எதிராளிகளிடத்திலும் சில நற்பண்புகள் இருக்கலாம் என்பதை ஒத்துக் கொள்கின்ற வகையில் நமக்குத் தன்னடக்க உணர்வைத்தான் - குடியாட்சித் தத்துவம் நம்மிடத்தில் வலியுறுத்துகிறது. மற்றவர்களைப் புரிந்துகொள்ள வேண்டியதும் அவர்களோடு இணக்கமான ஒரு முடிவுக்கு வரவேண்டியதும் நம்முடைய கடமையாகும். மக்களாட்சிக் கோட்பாடும், வன்முறைச் செயல்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாகும்.

சட்டப்பேரவையில் விவாதங்களின் போது மாண்புமிகு உறுப்பினர்கள் வெளிப்படுத்தவேண்டிய அடிப்படை நாகரீகத் தன்மைகளையே டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களுடைய வார்த்தைகள் வலியுறுத்துகின்றன. இந்தியாவில் உள்ள பாராளுமன்றமும் சட்டமன்றங்களும் பல ஆண்டுகளாக மாண்புமிகு உறுப்பினர்களுடைய கண்ணியத்தையும், உரிமைகளையும், கடமைகளையும், நன்னடத்தைகளையும் முதன்மைப்படுத்தக் கூடிய நெறிமுறைகளை வகுத்து நடைமுறைப்படுத்தி வந்துள்ளன. விவாதங்களை நடத்துவதற்குரிய விதிமுறைகளை நான் குறிப்பிட்டுக்காட்டத் தேவையில்லை. ஏனென்றால், நம் அனைவருக்குமே அவைகள் நன்கு தெரியும். விவாதங்களின் பொருளடக்கம், அதன் தன்மைகளும் பெரும்பாலும் மாண்புமிகு உறுப்பினர் ஒவ்வொருவரும் மக்களாட்சித் தத்துவத்தைப் புரிந்து கொள்ளும் அளவைப் பொறுத்தே அமையும். எனவேதான், இந்தக் கொள்கைகளை உங்களுக்கு விளக்குவதில் உங்கள் பொன்னான நேரத்தை நான் எடுத்துக்கொண்டுள்ளேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய தனிப்பட்ட நடத்தையால் ஒளிமிக்க சாதனைகளால், மக்களாட்சி முறையில் வைத்த நம்பிக்கையாலும், உறுதிப்பாட்டாலும், சபையின் கண்ணியத்தையும், பெருமையையும் உயர்த்துகிறார்கள் என்பதை அவர்கள் உணர வேண்டும். பழுத்த பல பாராளுமன்ற உறுப்பினர்கள், தங்களுடைய பேச்சின் உயர்ந்த தரத்தாலும், தெளிந்த எண்ணங்களாலும் மட்டுமல்லாமல் தங்களின் கடமை உணர்ச்சியாலும் சட்டப்பேரவையின் நெறிமுறைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஊக்கத்தாலும், உண்மை உணர்வாலும் தங்களின் தனிப்பட்ட ஆளுகையால் பாராளுமன்ற வரலாற்றில் தங்களின் முத்திரைகளைப் பதித்துச் சென்றிருக்கிறார்கள்.

சட்டப்பேரவையில் சிறந்த பேச்சாளராக ஆவதற்கு, மாண்புமிகு உறுப்பினர்கள் இடைவிடாத கடும் உழைப்பின் மூலமாக இத்தகைய தேவையான பண்பு நலன்களைப் பெறவேண்டும். பேச்சுக் கலையை வளர்ப்பதில் இடைவிடாது தொடர்ந்து ஈடுபடுவதோடு பேசு பொருள் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதும் அவசியம். கேட்பவர்கள் மனதில் பாதிப்புரை ஏற்படுத்த வேண்டுமென்றால் பேசப்படுகின்ற பொருளும், பேசுகின்ற முறையும் மிகவும் முக்கியமாகும். மாண்புமிகு உறுப்பினர்கள், ஆண் ஆனாலும், பெண் ஆனாலும், பொருளைப் பற்றி நன்கு புரிந்து கொண்டால் ஒழிய மற்றவர்களுக்குப் புரிய வைக்க முடியாது. இதற்காக முழுமையான பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். தன்னுடைய முழு நேரத்தையும், ஆற்றலையும், நாம் புரிய விருக்கும் பணிக்காகவே செலவிட வேண்டும்.

அண்மைக் காலத்தில் துரதிருஷ்டவசமாக, சட்டப்பேரவையின் நடவடிக்கைகளின் காலஅளவு வெகுவாக அதிகரித்து விட்டது. சட்டப்பேரவையில் விவாதிக்கப்படும் பொருட்கள் சமுதாயத்தின் பலதரப்பட்ட மக்களினுடைய மிகுந்த விளைவுகளை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன. சமுதாயத்தின் பலவேறு பிரிவினர்களைப் பலவிதமாகப் பாதிக்கின்றன. விவாதப் பொருட்கள் மிகவும் சிக்கலாகிவிடுவதோடு மக்களின் தேவைகளுக்குத் தொடர்பே இல்லாத தோற்றத்தையும் சிலவேளைகளில் அவைகள் ஏற்படுத்தி வருகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்திற்குத் தயாராக வரும் வகையில், பல்வேறு பொருட்களைப் பற்றிப் படிக்க நேரம் மிகக் குறைவாகவே உள்ளது. இதன் விளைவாக, பாராளுமன்ற விவாதங்களைப் பற்றித் தீவிரமாக எண்ணாது மிகச் சாதாரணமாகவே எடுத்துக் கொள்கிறார்கள். பெரும்பாலான உறுப்பினர்கள் பேச்சை முன்கூட்டித் தயாரிக்காமல் மத்தமின்றி விவாதத்தில் பங்கேற்கிறார்கள். விவாதப் பொருட்களைப் பற்றிச் சிந்திப்பது மிகவும் குறைந்து விட்டது. அரசியல் சர்ச்சைகளிலும், தீவிரமடைந்து வருகிற முரண்பாடுகளிலும் அதிக நேரம் வீணாகிறது. சட்டப்பேரவைக்கு வெளியே உள்ள அரசியல் சூழ்நிலை அவைக்கு உள்ளே விவாதங்களைச் சூடேற்றுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள், சபையின் விவாதங்களைச் சுய வளர்ச்சிக்கான தொடர்ந்த, நிலையான முயற்சியாகவே கருத வேண்டும். சட்டப்பேரவை என்பது சாதாரணப் பொதுமேடை அல்ல. ஒரு சில அதிர்ஷ்டசாலிகள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றத் தங்களது கருத்தையும், ஆசைகளையும் வெளிப்படுத்துகின்ற பெருமைக்கும், கௌரவத்திற்குமுரிய அவையாகும். இத்தகைய மதிப்பு வாய்ந்த விவாதச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் சட்டப்பேரவையின் விவாதங்களின் தரமும் சாதனைகளும் சீர்குலைந்துவிடும்.

விவாதத்தில் பங்கு பெறுவதைப் புனிதமாகவும், தலையாய கடமையாகவும் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத வேண்டும். அவர்கள் கிஞ்சிற்றும் சுயநலமற்ற முறையிலும் மக்களது நலத்துக்காகவும் இந்தப் பணியை ஆற்ற வேண்டும். தங்களது எண்ணத்திலும் சொல்லிலும், செயலிலும் அவர்கள் சட்டமன்றத்தின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டும். விவாதத்தின்போது நன்னடத்தையின் தரத்திற்கு ஒத்துவராத எதைச் சொன்னாலும், சட்டமன்றத்தின் கண்ணியத்திற்கு அவை ஒத்துவராதவையாகத்தான் அமையும். விவாதத்தின் போது பயன்படுத்தும் மொழி மாண்புமிகு

**உங்கள் வீட்டுத் திண்ணை சும்மா கிடக்குமானால், அதை ஒரு திண்ணைப் பள்ளிக்கூடமாக மாற்றுங்கள். அது ஒரு கோவிலைக் கட்டியதற்கு ஒப்பாகும்.**

**- மூதறிஞர் இராஜாஜி**



உறுப்பினரின் தனிப்பட்ட கலாச்சாரத்தை இனம் காட்டும் அடையாளமாகும். விவாதத்தின்போது உபயோகப்படுத்தப்படும் மொழி எப்பொழுதும் தண்மையாகத்தான் இருக்க வேண்டுமே தவிர ஆத்திரமூட்டும் வகையில் அமையக் கூடாது. அவை ஒட்டுமொத்த நல்லிணக்கத்தை மேம்படுத்த வேண்டுமே தவிர, சட்டமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் உறுப்பினர்களின் உணர்வுகளைப் புண்படுத்தக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர்களின் ஒழுக்க உணர்வும், கண்ணியமும் விவாதங்களின் தரத்திற்குப் பலத்தையும் நளினத்தையும் ஊட்டி, பாராளுமன்ற நெறிமுறைகளின் வெற்றியை உறுதி செய்கின்றன. அவையின் கண்ணியத்தை நிலை நிறுத்தும் எண்ணத்தில் சிறந்த பாராளுமன்றப் பேச்சாளர்கள் விவாதங்களின்போது ஒழுங்காக நடந்து கொள்வதில் மிகவும் கவனத்துடன் இருப்பார்கள். பண்டித ஜவகர்லால் நேரு அவர்களுடைய வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு சம்பவம் இந்த உண்மையை வலியுறுத்துகிறது. அவர் ஒரு சமயம் பாராளுமன்றத்தில் 'பொய்' (lies) என்ற வார்த்தையை உபயோகப் படுத்தினார். அது தகாத வார்த்தை என்று ஆட்சேபிக்கப்பட்டது. ஜவகர்லால் நேரு அவர்கள் அந்த வார்த்தைக்குப் பதிலாக 'உண்மை அல்லாதவை' (untruths) என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். ஆனால், அது அத்துடன் முடிந்துவிடவில்லை. தகாத வார்த்தையைப் பேசியதற்காக ஜவகர்லால் நேரு அவர்கள் மிகவும் வேதனைப்பட்டார். 1951 ஜூன் திங்கள் 15-ஆம் நாள் முதலமைச்சர்களுக்கு வரைந்த கடிதத்தில் அவர் கூறினார்'.



★ கலை என்பது நெறி முறை, வீரம், ஒழுக்கம், கற்பு, காதல் என்னும் பண்புகளைத் தரக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

''அரசியல் நிர்ணய திருத்தச் சட்ட மசோதா கொந்தளிப்பான சில நேரங்களில் உணர்ச்சிகரமான விவாதங்களுக்கு வழி வகுக்கிறது. உணர்ச்சிகள் கொந்தளித்து தடித்த வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன, என நான் அஞ்சுகிறேன். இந்த விவாதத்தின்போது ஒரு சமயம் உயர்ந்த தரத்திலிருந்து நான் இறங்கி தேவையின்றிக் கடின வார்த்தையைப் பயன்படுத்தியமைக்காக வருந்துகிறேன். ஆனால், இந்த விவாதத்தை இரண்டு வாரங்களாக நடத்திய அலுப்பும் தொடர்ந்து வந்த குற்றச்சாட்டுக்களைக் கேட்டுக் கொண்டிருந்ததும், அவமானப்படுத்தப்பட்ட பேச்சுக்களும் என் பொறுமையை மிகவும் சோதித்துவிட்டன.''

ஆனால், ஜவகர்லால் நேரு அவர்கள் அதற்கும் மேலாக ஒன்று கூறினார். 1963-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27-ஆம் நாள் ஆந்திர மாநில இரு சபை உறுப்பினர்களிடையே அவர் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை இங்கே விளக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். ஏனெனில், அது தீர்க்கதரிசனமாகவும், அதே நேரத்தில், சட்டப்பேரவைகளில் தரம் தாழ்ந்த நடவடிக்கைகளை, ஜனநாயக அமைப்பாக விளங்கும் சட்டப்பேரவைக்கு நாம் புரியும் புனித சேவையாகக் கருதி, தடுத்து நிறுததாவிட்டால் அது ஒரு தொடர்கதையாகவே ஆகிவிடும் என்பதைக் குறிப்பதாகும் அமைகிறது.

''பொது வாழ்வில் நாகரிகம் குறைந்து கொண்டே வருவது துரதிர்ஷ்டவசமானது பொதுச் சேவையின் தரத்தை வெகுவாக இது குறைத்து விடுவதுடன் இது நம்மையும் நமது நிறுவனங்களையும், நமது பாராளுமன்றத்தையும், நமது சட்டமன்றங்களையும் தரம் தாழ்த்துகிறது. மாண்புமிகு உறுப்பினர்களின் நடவடிக்கையை ஒழுங்குபடுத்த நமது பாராளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் நிறைய விதி முறைகள் உள்ளன. அவர்கள், வரன்முறைப்படுத்தப்பட்ட அவைக்கு ஏதுவான சொற்றொடர்களைத்தான் பயன்படுத்த வேண்டியுள்ளது. இவையெல்லாம் கண்டிப்பாகப் பின்பற்றப் படுவதற்குக் காரணம், சபையின் விவாதங்கள் சூடாகிவிடாமலும் சில சமயங்களில் நாம் நடந்து கொள்வதைப்போல ஒருவரையொருவர் சபித்துக்கொள்ளாமலும் இருப்பதற்கே ஆகும். ஆனால் சட்டப்பேரவைத் தலைவர் கடைப்பிடிக்கும் இந்த அனைத்து மரபுகளும், சிறந்த பழக்க வழக்கங்களும், ஒழுங்குமுறைகளும் பண்டைய கால முறையாகத் தோன்றினாலும், அவை சபையின் நடவடிக்கைகளை ஒழுக்கத்துடனும், நாகரிகத்துடனும் கொண்டு செல்வதற்கே ஆகும். எந்த அர்த்தமும் இல்லாத இத்தகைய பழைய பாணியை நாம் ஏன் பின்பற்ற வேண்டும் என்று தற்பொழுது சிலர் கேட்கின்றனர். உதாரணமாக, சட்டப்பேரவைத் தலைவர் சில உறுப்பினர்களை வெளியேற்ற உத்தரவிடும் அளவுக்கு நிர்ப்பந்தப்படுத்தப்படுவார். நீங்கள் பாராளுமன்றத்தில் இருந்தால் பேரவைத் தலைவரின் சொல்லைக் கேட்டே ஆக வேண்டும். இல்லையெனில் நீங்கள் அங்கு இயங்க முடியாது என்பதோடு, அங்கே குழப்பந்தான் நிலவும். இதேதான் தற்போது நடைபெற்று வருகின்றது. குழப்பம் விளைவிக்கும் போக்கே நிலவுகின்றது. சட்டப் பேரவைக்கு வெளியே இதுபோன்ற நடவடிக்கைகள் தவறுதான். ஆனால் சட்டப்பேரவைக்குள் இது நிச்சயமாக மிகப்பெரிய தவறுதான். இதுபோன்ற போக்குகள் நிலவுவதால் தான் ஐரோப்பாவில் பல நாடுகளில் மக்களாட்சி தோல்வியடைந்துள்ளது. ஒரு கட்சி சர்வாதிகாரப் போக்கில் நடந்து கொள்ள முற்படும் பொழுது மற்ற கட்சிக்கும் இதேபோல் நடந்து கொள்ள எத்தனிப்பதால் அனைத்துக் கட்சிகளும் தங்களைத் தாங்களே தரந்தாழ்த்திக்கொண்டு நாட்டின் ஒட்டுமொத்த தேவைகளும் குலைக்கப்படுவதோடு மக்களாட்சி முறையும் துண்டு துண்டாகச் சிதறியடிக்கப்படுகிறது. எனவே, இதுபோன்ற நடவடிக்கைகளைப் பற்றி நீங்கள் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும என நான் விரும்புகிறேன்.''

1963-இல் நேருவினால் சொல்லப்பட்ட இந்த வார்த்தைகள் 1993-லும் பொருத்தமுடையதாகவே தோன்றுகின்றன. ஓரளவுக்கு விட்டுக்கொடுத்தலும், நகைச்சுவை உணர்வுகளும், பேரவை நடவடிக்கைகளை அழகுபடுத்துவதுடன், சாதனைகளின் தரத்தை உயர்த்தி, மாண்புமிகு உறுப்பினர்களின் சிறந்த குணநலன்களை வெளிப்படுத்த ஏதுவாகிறது. ஒருவர் தன்னுடைய கட்சியின் சார்பாக ஒரு நிலையை எடுக்க வேண்டியிருந்தாலும், நினைவில் நிற்கத்தக்க வகையில் ஒரு சில பாராட்டு வார்த்தைகளுடனான வாதத்திறமை கொண்டு தம்முடைய கருத்தை மற்றவர்களுக்கும் உணர்த்தலாம். 1939-ஆம் ஆண்டு ஒரு மசோதாவின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு திரு வி.எஸ். சீனிவாச சாஸ்திரி அவர்கள் கூறிய ஒரு சில கருத்துக்களுக்குச் சென்னை மகாணத்தின் முதன்மைப் பொறுப்பை வகித்த மாண்புமிகு திரு சி. ராஜகோபாலாச்சாரியார் கூறிய சில கருத்துக்கள் நினைவுக் கூரத் தக்கவையாகும்.

''நேற்று மாண்புமிகு சாஸ்திரி அவர்கள் சிறந்த பல கருததுக்களைக் கூறினார்கள், ஆனால், முதலில் அவர் பேசிய பேச்சில் இருந்த சிறந்த அழகையும் சிறந்த முழுமையையும் நான் பாராட்டியே ஆக வேண்டும். இப்படி முழுமையாகப் பாராட்டுகின்ற அதே நேரத்தில், நான் ஒன்று சொல்லியாக வேண்டும்... நான் சொல்ல அவர் அனுமதிக்க வேண்டும். அதாவது அந்தப் பேச்சு

அழகிய பெண்ணின் குடை போல அமைந்திருந்தது. நல்ல வடிவமைப்புடன் அழகாக அமைக்கப்பட்ட வண்ணமய மான ஒரு பட்டுக்குடை - வெயிலிலிருந் தும், காற்றிலிருந்தும், மழையிலிருந்தும் நம்மைக் காப்பாற்ற முடியாத குடை (சிரிப்பு).''

ராஜாஜி அவர்கள் சொல்ல விரும்பி யதை மிக அழகாகச் சொன்னார் என் பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். அழகான அந்த வார்த்தை ஜாலங்கள் சட்டமன்ற நடவடிக்கை களுக்கு உயிரூட்டியது மட்டுமல்லாமல், சொல்லப்பட வேண்டிய கருத்துக்களை அழகாகச் சொல்ல உதவி புரிந்ததோடு ஒரு இறுக்கமான சூழ்நிலையையும் தளர்த்த உதவியது.

முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு, மொழி மேதை யாவார். அவர் மிகச் சிறந்த பாராளு மன்றவாதி. அவர் இந்த ஒரு பொருளைப்பற்றியும் மிக ஆழமாகப் புரிந்து கொள்வார். அவர், மற்றவர் களுக்குப் புரியாத கூர்மதியுடன், உறுப் பினர்களின் கருத்துக்களை அறிந்து கொண்டு, அவர்களுடைய வாதங்களை உடைக்கின்றார் என்ற எண்ணத்தை ஏற்படுத்தாமலேயே தம்முடைய திறமை யான பதில்களால் எதிரியின் வாதங் களை உடைத்துவிடுவார். 1968-இல் ஆண்டு மார்ச் திங்கள் 20-ஆம் நாள் தமிழகச் சட்டப்பேரவையில் நடைபெற்ற விவாதத்தின்போது அவர் கூறினார்:

''திரு விநாயகம் அவர்கள் (எதிர்க் கட்சியின் மூத்த உறுப்பினர்) கூறினார்: உங்கள் அரசை நாங்கள் கவிழ்க்க மாட்டோம்.''

''விநாயகம் போன்று திறமையான காங்கிரஸ்காரர்கள் எங்களுக்கு ஆதரவாக இருப்பது குறித்து நான் மகிழ்ச்சி அடை கின்றேன்.''

''நான் மீண்டும் சொல்கின்றேன். நீங்கள் எங்களது அரசைக் கவிழ்த்தால் நஷ்டம் எங்களுக்கல்ல, மாறாக நஷ்டம் நாட்டிற்கே.''

பேச்சுக்கலையிலும் விவாதக்கலை யிலும் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு தன்னிகரற்ற ஆசான் ஆவார். எல்லாக் காலத்திற்கும் அவர் தலை சிறந்த பேச்சாளர். அவர் அசாதாரண திறமை யுடன் விவாதிப்பார். அவர் தன்னுடைய பேச்சுக்களுக்கு அழகும் வண்ணமும் சக்தியும் ஆற்றலும் வேறுபாடுகளும் வலிவும் தர உயர்ந்த இலக்கியங்களைக் கருவியாகப் பயன்படுத்தினார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் பேரறிஞர் அண்ணா சொன்னதாவது:

''ஒரு திருமண வரவேற்பு விழாவிற்கு நீங்கள் செல்லும்போது, உங்களை உபசரிப்பவர் உங்கள் மீது பன்னீரைத் தெளிக்கும்போது, அதில் ஒரு சொட்டு உங்கள் கண்ணில் விழுந்து ஒரு எரிச் சலை உண்டாக்குகிறது. ஆனால், அதற் காகப் பன்னீரைத் தெளித்து உபசரித்த வரிடம் நீங்கள் குற்றம் காணமாட்டீர்கள். நீங்கள் எவ்வாறு அவரிடம் குற்றம் காண மாட்டீர்களோ, அதேபோன்று என் மனது புண்படும்படி பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பேச்சுக்களைக் கோபப் படாமல் நான் ஏற்றுக்கொள்ளக் கற்றுக் கொண்டேன். குறிப்பாக, கடந்த என்னு டைய 25 ஆண்டுக் காலப் பொது வாழ் வில் எனக்கு ஏற்பட்ட அவமானங் களையும் என்மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளையும் எண்ணிப்பார்க்கும் போது இத்தகைய பேச்சுக்கள் எவ்வளவு கடினமாக இருந்தாலும் அவற்றை என் மேனியைத் தழுவிச் செல்லும் குளிர் தென்றலாகவே நான் கருதுகிறேன். இந்த விவாதத்திற்கு வலுவூட்டிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.''

நாம் மக்களாட்சி வழிமுறைகளைத் தேர்ந்தெடுத்துள்ளோம். நம் நாட்டின் மன்னர்களாக விளங்கக்கூடிய பொது மக்களின் கருத்துக்கள் சட்டமன்றங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன. எனவே, இம்மாபெரும் நாட்டின் பிரதிநிதியான இந்தியாவின் சட்டப்பேரவைகள் திகழ் கின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் நம்முன்னே உள்ள பெரிய பிரச்சினைகளை விசால உணர் வுடன் திறமையான முறையில் சாதாரண நிலைகளிலிருந்து உயர்ந்து நாம் பொறுப் புகளை நிறைவேற்றவேண்டும். தேசத்தின் குறிக்கோள்களை விளக்கவும், மக்களாட்சி நெறிமுறைகளில் நமக்குள்ள நம்பிக்கை களை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ள வும், கருத்துப் பரிமாற்றங்கள் - நல்ல கருத்துப்பரிமாற்றங்கள், விவாதங்கள்- திறமையான விவாதங்கள் ஆகியவற்றைத் தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை. ஜவகர்லால் நேரு ஒரு முறை கூறினார்:

''வார்த்தைகள் பெரும்பாலும் மந்திர சக்தி வாய்ந்தவை. ஆனால், மனித உணர்ச்சிகளின், தேச உணர்வுகளின் மந்திரச் சக்திகளை சில நேரம் வார்த்தை களின் மந்திர சக்திகூட சரியாகத் தெரிவிக்க முடியாமல் போய்விடக் கூடும்.''

அதே நேரத்தில், வார்த்தைகளைப் பயன்படுத்தி, தகுந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி, கண்ணியமிக்க வார்த்தை களைப் பயன்படுத்தி, அறிவுப்பூர்வமான வார்த்தைகளைப் பயன்படுத்தி, மக்க ளாட்சி உணர்வை நாம் பெற்றாக வேண் டும். இந்தியச் சட்டமன்றங்களில் நடை பெறும் விவாதங்களின் தன்மைகளை எப்படி உயர்த்துவது? விவாதங்களின் பங்கையும், முக்கியத்துவத்தையும் மீண்டும் எப்படி உறுதிப்படுத்துவது? என்பதைப் பற்றி இந்தக் கருத்தரங்கில், மிக அதிகப் பொறுப்புக்களைச் சுமக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் விவாதிப்பார்கள் என்று நம்புகிறேன். நான் ஒரு சில பொதுவான கருத்துக்களை மட்டும் உங்கள் பரிசீலனைக்குக் கொண்டு வந்துள்ளேன்.

இந்த அருமையான சந்தர்ப்பத்தை வழங்கிய உங்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**(தமிழ்நாடு சட்டப்பேரவையில் 27.6.93 அன்று நடைபெற்ற அகில இந்தியச் சட்டப்பேரவைகளின் முதன்மை அலுவலர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.)**

## மாண்புமிகு முதல்வர் உதவி

o மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்வதற்காக நிதியுதவி வேண்டி, திருவண்ணாமலை- சம்புவராயர் மாவட்டம் - ஆரணியைச் சேர்ந்த திருமதி. சரஸ்வதி என்பவரும், சேலம் மாவட்டம்- கனவேலம்பட்டி புதூரைச் சேர்ந்த திரு. எம். தங்கவேல் என்பவரும் மனு செய்திருந்தார்கள். அவர்களின் கோரிக்கைகளைக் கனிவுடன் பரி சீலனை செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இருவருக்கும் தலா ரூ.20,000 மருத்துவச் சிகிச்சைக்காக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணை யிட்டார்.

## மக்கள் நலனுக்காக

# உங்கள் கடமைகளை அர்ப்பணிப்பு உணர்வோடும், உறுதியோடும் தொடர்ந்து செய்யுங்கள்!

## மாண்புமிகு முதல்வர் உரை

மாவட்ட ஆட்சியாளர்கள்; காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் அரசு உயர் அலுவலர்களுடைய இம்மாநாடு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மாநில நிர்வாகத்தின் கடந்த காலச் செயல்பாடுகளை ஆய்வு செய்து நிர்வாகத்தின் பலத்தையும், பலவீனத்தையும் தெரிந்துகெள்ள நமக்கு அரிய வாய்ப்பை அளித்துள்ளது. நம்முடைய செயல்பாடுகளை மேலும் செழுமைப்படுத்த அலுவலர்களின் அனுபவங்களைச் சேர்த்து அறிந்துகொள்ள உதவுகிறது, இம்மாநாடு பல்துறைகளிலுள்ள முக்கியமான பிரச்சினைகள் குறித்து உகந்த நியாயமான, ஆக்கப் பூர்வமான முறையில் விவாதிக்க ஒரு இனிமையான சூழ்நிலையை அளித்துள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலே, இம்மாநாடு அரசியல் நோக்கத்தையும், விருப்பத்தையும் நமது நிர்வாகத் திறமைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து, அதன்மூலம் நமது நோக்கங்களையும், இலக்குகளையும் நியாயமான படிப்படியான முறையில் திட்டமிட்டுத் தேவையான திறமைகளுடன், விரைவாகச் சாதிக்க, அற்புதமான அமைப்பை அளிக்கிறது. எனவே, இம்மாநாட்டில் கலந்துகொண்டு, இன்றும் நாளையும் விவாதிக்கப்படவேண்டிய பொருட்கள் மீது உங்கள் கருத்துக்களைக் கேட்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.


மாவட்ட நிர்வாகம் என்பது, ஆங்கிலேயர்களால் விட்டுச் செல்லப்பட்ட



அமைப்பு - நம்முடைய முக்களின் கலாச் சாரத்தையும், அறிவாற்றலையும், அடிப்படையாகக் கொண்டு பல நூற்றாண்டுகளுக்குமுன் ஏற்படுத்தப்பட்டது இந்த அமைப்பு! கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் நாடு முழுவதும் மாபெரும் அரசியல், பொருளாதார, சமுதாய எழுச்சி ஏற்பட்டாலும், இந்நிர்வாக அமைப்பு இன்றளவும் நிலைக்கக் காரணம், மாறிவரும் தேவைகளைச் சமாளிப்பதில் காட்டும் உடனடி ஆக்கம்மிக்க ஆற்றல் தான்.

சட்டம் ஒழுங்கு பராமரிப்பு மற்றும் வரிவசூல் ஆகிய பணிகளுக்காக இயங்கி வந்த இம்மாவட்ட நிர்வாக இயந்திரம் படிப்படியாகப் பயன்மிக்க திட்டம் மற்றும் வளர்ச்சிக்கான இயந்திரமாக மாற்றப்பட்டது. அமைப்பும் செயல் முறையும் அப்படியே இருந்தாலும், நோக்கங்களும், இலக்குகளும் மாறி உள்ளன. ஓரளவு பராமரிப்புப் பணிகளைச் செய்து வந்தவர்களே தற்போது புதிய சூழ்நிலையில் புதிய சவால்களைப் பழைய பணியில் அவர்கள் காட்டிய அதே நிர்வாக ஆர்வத்துடன் சந்திப்பது ஒரு சுவையான செய்தியாகும்.








இன்று மாநில நிர்வாகத்தின் கடமை சிக்கலானதாகும். மக்களின் ஆசைகள் வேகமாக வளர்கின்றன. ஆனால், மக்களின் அடிப்படைத் தேவைகள் கூட இன்னும் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. மக்களுடைய தேவைகள் அரசியல் அடிப்படையில் வளர்ந்து வருகின்றன அது மக்களாட்சியில் நியாயமான வளர்ச்சியுமாகும். பிரதிநிதித்துவ அரசு அரசியலாக்குவதை ஏற்றுக் கொள்கிறது. எந்த அளவிற்கு எழுத்தறிவு வளர்கிறதோ அந்த அளவு ஒருவருடைய சுய உரிமையைப் பற்றிய விழிப்புணர்வு அதிகமாக இருக்கும். அதன் விளைவாக, மக்கள் வாய்ப்புகளை ஒரு உரிமையாகக் கோருகிறார்கள். மாநிலமும் அவர்கள் திருப்தி அடையும் அளவில் வாய்ப்புகளை அளிக்க வேண்டியுள்ளது. மேலும், உரிமை, பொறுப்பு என்பனவற்றின் பொருள்களும் மாறிவருகின்றன. நமது அரசியல் அமைப்புச் சட்டங்களின் விளக்கங்களாலும், பலவேறு நீதிமன்றத் தீர்ப்புகளாலும், இந்த மாற்றங்கள் ஏற்படுகின்றன. சுதந்திரமும், வாய்ப்புகளின் சமத்துவமும் இனி சட்டப் பொருளின் வரம்பிற்குள் அடங்குவதில்லை. அரசியல் சட்டத்தின் அமைப்பின்படியும், விளக்கங்களின்படியும் மேலும் அவை ஆழமாகச் சமுதாய, பொருளாதார, நெறிமுறை முக்கியத்துவம் பெறுகின்றன. அதன் பலனாக, மாநில அரசின் பொறுப்பு மிகவும் விரிவடைகின்றது.

உதாரணமாக, தொடக்கக் கல்வி என்பது தொடக்கத்தில் நேரடிக் கொள்கையாகக் கருதப்பட்டது. இன்று உச்சநீதிமன்றம் அதனை அடிப்படை உரிமை என்று விளக்கியுள்ளது. அதைப்போல, சமுதாய, பொருளாதாரக் கடமைகள் மாநில அரசின் கட்டாயக் கடமைகளாக்கப்பட்டுள்ளன. அதனால் அரசுப் பணியாளர்கள் அதிகமான பொறுப்புகளை ஏற்கவேண்டியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் அலுவலர்களின் முறையான கண்ணோட்டம், அணுகுமுறை, நோக்கத்தின் தேவையைக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். அரசுப் பணியாளர்கள் தனிமைப்பட்டுச் செயல்படமுடியாது.

அரசுப் பணியாளர்கள் மாறிவரும் சமுதாய, பொருளாதார நிலைமைகளைப் புரிந்துகொண்டு, அதில் பங்கு கொண்டு, மக்கள் நலனுக்காகப் புதிய அக்கறையுடன், புதிய தெளிவுடன், புதிய தொலைநோக்குடன் வளர்ச்சி மற்றும் பெருக்கத்தின் பிரச்சினைகளைக் கையாள அரசு இயந்திரத்தை முடுக்கவேண்டும். அதிகார அமைப்பு எப்பொழுதும் திறமையாக இயங்குவது, ஆனால் அதற்கென்று எல்லைகளும் வரையறைகளும் உள்ளன என்பதை நாம் அனைவரும் தெரிந்துள்ளோம். - ஆனால், இன்று அரசுப் பணியாளர்கள் அரசு இயந்திரத்தைச் சமுதாய, பொருளாதார மாற்றங்களுக்குக் கடந்த காலத்தில் பயன்படுத்தியதைவிட அதிகஅளவில் திறமையுடன், விரைவாகப் பயன்படத்தக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த மாறிவரும் சூழலில், நிர்வாகத்திற்கு ஒரு ஆதார நிலை உள்ளது. மாவட்ட அளவிலுள்ள அலுவலர்கள் அளவற்ற பொறுப்புகளை ஏற்கவேண்டும். அவர்கள் நிர்வாகத்தின் கண், காதுகளாக இருப்பவர்கள், அவர்கள் மக்களிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும் நேரடித் தொடர்புடையவர்கள். பொதுமக்களின் தேவைகளின்பால் அவர்களுக்குப் போதிய இரக்கமும், அனுதாபமும் இருக்கவேண்டும். அவர்களுக்கு மக்கள் பிரதிநிதிகளின் பங்கினைப் பற்றி, முறையான தெளிவும், பொறுமையும் இருக்கவேண்டும். அவர்கள் ஏழை மக்களுக்கான தேவைகளைப் புரிந்து, ஏற்பாடு செய்து அவர்களுக்குத் திறமையாகவும், தாமதமில்லாமலும் வழங்கச் சேவை செய்யும் மனஉறுதி கொண்டவர்களாக இருக்கவேண்டும். மக்களின் விருப்பங்களையும், தேவைகளையும் நிறைவு செய்யும் விதமாக திட்டங்கள் அமைத்துச் செயல்படும் வகையில் அரசுப்பணியாளர்கள், கற்பனைச் சக்தியும், புதுமை வளமும் கொண்ட திறமைகளை வளர்த்துக் கொள்ளவேண்டும். அவற்றையெல்லாம் விட தலத்திலுள்ள மாநில அரசின் பிரதிநிதி என்ற வகையில் மாநில அரசின் தத்துவங்களை உணர்ந்து, கொள்கைகளை நடைமுறைப்படுத்தி அனைத்து வழியிலும் மாநில அரசின் நோக்கம் சிறப்புறும் வகையில் செயல்படவேண்டும்.

நமது அரசு மிகச் சரியாக இரண்டாண்டுகளுக்கு முன்பு பொறுப்பேற்ற போது மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு மிகவும் சீர்குலைந்திருந்ததை நீங்கள் நினைவுகூரவேண்டும். இலங்கைத் தீவிரவாதிகள் விருப்பம்போல் மாநிலத்தில் நடக்க அனுமதிக்கப்பட்டு அதனால் மக்களிடையே பயஉணர்வும், வன்முறையைப் பற்றிய கவலையும் இருந்தது. மாவட்ட நிர்வாகம், குறிப்பாக காவல் துறையினரின் திறமை மிகவும் சோதனைக்கும், நெருக்கடிக்கும் உள்ளாகியது. நாங்கள் பொறுப்பேற்றவுடன், சட்டம் ஒழுங்கை நல்லமுறையில் பராமரித்து, அமைதியை மீட்டு, பயமும், கவலையும் இல்லாத சகஜ வாழ்க்கையைக் கொண்டு

## அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களுக்கும் 'Fax Machine' வாங்க மாண்புமிகு முதல்வர் ஆணை

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு ஜூன் 24 முதல் 26 முடிய மூன்று நாட்களாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் நடந்த இந்த மாநாட்டில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 'Fax Machine' இல்லையென்றும், தாங்கள் விரைந்து செயல்பட மற்றும் அறிக்கைகளை அரசுக்கு உடனுக்குடன் அனுப்புவதற்கு 'Fax Machine' அவசியம் தேவை எனவும் வேண்டுகோள் விடுத்தனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கருத்தை அறிந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு நடந்துகொண்டிருக்கும் பொழுதே, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களுக்கு 23 'Fax Machine'-களை வாங்குவதற்குக் கோப்பில் கையெழுத்திட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனுக்குடன் தங்கள் குறைகளைக் கேட்டு முடிவெடுத்தது கண்டு, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கைதட்டி தங்களுடைய நன்றியினை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

வந்து மாநிலத்திற்குச் சிறப்பு சேர்க்க தமிழ்நாட்டிலிருந்து அனைத்துத் தீவிர வாதச் சக்திகளையும் அப்புறப்படுத்தி மக்கள் மனதில் நம்பிக்கை உண்டாக்கும் பொறுப்பினை எங்கள் மீது ஏற்றுக் கொண்டோம். பொறுப்பேற்றுக் கொண்ட சில மாதங்களில், உங்களது ஒத்துழைப்பாலும், நிலைமைகளைப் புரிந்துகொள்ளும் உங்களது தெளிவாலும், உங்களது மனமுவந்த உதவியினாலும், இந்தச் சவாலில் நாங்கள் வெற்றி பெற்றோம். மிகக் குறைந்த அளவிலுள்ள படையினாலும், பழைய ஆயுதங்களாலும், மாநிலக் காவல்துறை குறிப்பிடத் தகுந்த வெற்றிபெற முடிந்தது. தங்களுடைய அலுவலர்களை ஊக்கப்படுத்தி, நிர்வாகத்தை முடுக்கி விட்டதன் மூலம் கவலைப்படும் தேவை கடந்துவிட்டது என்றாலும், நிம்மதியாக இருக்க வேண்டிய காலம் இதுவல்ல, அதற்கான காலம் இன்னும் கனியவில்லை.

தீவிரவாதம் என்பது தந்திரமான ஒரு காரியமாகும். அது பதுங்கி இருந்து கொண்டு சிறிய வாய்ப்புக் கிடைத்தாலும், தனது கோரத் தலையைத் தூக்கிப் பெயர் தெரியாத அப்பாவிகளைத் தாக்கும். ஜனநாயகத்துக்கும், ஜனநாயக வாழ்வுக்கும் தீவிரவாதம் எதிரானது. ஜனநாயக நடைமுறைக் கொள்கைகளை நிலைநிறுத்த வேண்டிய நிர்வாகம் நமது மத்தியில் இருந்து தீவிரவாதத்தை ஒழித்துக்கட்ட எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும். எனவே, மாவட்ட நிர்வாகம் எப்போதும் விழிப்புடனும், கண்காணிப்புடனும் இருக்க வேண்டும். உங்கள் பணியை நிறைவேற்ற உங்களுக்குத் தேவையான மனித சக்தி, கருவிகள் மற்றும் பொருட்களைப் பொறுத்த மட்டில் அனைத்து உதவிகளையும் மாநில அரசு வழங்கும் என்று உறுதி கூறுகிறேன். தீவிரவாத நடவடிக்கை என்பது நமது நாட்டின் பாதுகாப்புக்கு எதிரானது என்பதை நீங்கள் தயவு செய்து நினைவில் கொள்ளவேண்டும்.

கடந்த இரண்டாண்டுகளாக நாம் தீவிரவாதிகளின் பலத்தை முழுவதுமாகத் தகர்த்துவிட்டோம். விடுதலைப்புலிகள் உள்பட இலங்கைப் போராளிகள் குழுக்களை விரட்டிவிட்டோம். மாநிலத்தில் தீவிரவாதம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் எந்தவகையிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தலை தூக்காத வகையில் நாம் தொடர்ந்து கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதில் எந்தவிதத் தொய்வும் இருக்கக்கூடாது. திருப்தியும் இருக்கக்கூடாது. கடலோரப் பகுதிகளில், அகதிகள் முகாம்களில் தொடர்ந்து கண்காணிப்பு, சிறப்பு முகாம்களில் தீவிரக் கட்டுப்பாடு ஆகியவை தீவிரவாதத்தையும், பயங்கரவாதிகளையும் ஒடுக்கும் செயல் திட்டத்தின் முக்கிய பகுதிகளாகும்.

உரிய நேரத்தில் சரியான தகவல்களை அளிக்கும் வகையில், நமது உளவுத் துறையை முடுக்கிவிடவேண்டும். ஏனெனில் அதனடிப்படையில்தான் காவல் துறையினர் செயலாற்ற முடியும். இதுவரை இந்த விஷயத்தில் நாம் அடைந்த வெற்றிகளுக்காக நான் உங்களைப் பாராட்டுகிறேன். தொடர்ந்து உங்கள் திறமையைச் செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது நாட்டையே உலுக்கிய இனக் கலவரம் ஏற்பட்ட கால கட்டத்தில், சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் மாவட்ட நிர்வாகம் சிறந்த பணியாற்றியது. நான் இதற்குமுன் பலமுறை குறிப்பிட்டதைப் போல் நாட்டின் மற்ற பகுதிகளில் குழப்பங்கள் நிலவினாலும், நம் மக்களிடையே நிலவிவரும் சமய, வகுப்புப் பொறையுடைமையும், நமது மாவட்ட நிர்வாக அதிகாரிகள், கவனமாகக் கையாண்டமுறைகளும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து அமைதிச் சோலையாக விளங்கச் செய்தன. எந்தச் சூழ்நிலையிலும் நீங்கள் சிறந்து விளங்க முடியும் என்பதற்கு இது எடுத்துக்காட்டாகும். சாதாரண நேரங்களிலும் ஆழ்ந்த ஈடுபாடு நிலைநிறுத்தப் பட்டால், மக்களுடைய நலன் ஒரு அர்ப்பணிக்கப்பட்ட நிர்வாகத்தால் முழுமையாகப் பாதுகாக்கப்படும். இது சம்பந்தமாக அரசியல்வாதிகள் என்ன சொன்னாலும், அதைப் பொருட்படுத்தாமல் நீங்கள் இதுவரையில் செயலாற்றியதைப் போல சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க நீங்கள் தொடர்ந்து சிறப்பாகச் செயலாற்றி நாட்டிலேயே தமிழ்நாடுதான் அமைதி தவழும் மிகச் சிறந்த மாநிலம் என்ற நல்ல பெயரைப்பெற்றுத் தர உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கண்களை மறைத்துக் கொள்ளும் அரசியல்வாதிகள் என்ன சொன்னாலும் பரவாயில்லை. உண்மையைத் தெரிந்த, சிறந்த நீதிபதிகளாக விளங்கும் பொது மக்களால் உங்கள் சேவை பெரிதும் பாராட்டத்தக்கதாகும். விவாதங்களுக்குச் சம்பந்தமான, மாவட்ட நிர்வாகத்தின் மற்ற பிரச்சினைகள் குறித்து நான் கண்டிப்பாகச் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டும். அவற்றிற்குமுன், மாநில நிதிநிலைமையை பற்றி இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் மீது உங்கள் கவனத்தை ஈர்க்கிறேன். எல்லா வகையிலும் செலவுகளில் மிகவும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். மக்களின் நலனுக்காகத் திட்டம் மற்றும் திட்டம் சாராத இனங்களில் கணிசமான தொகை ஒதுக்கப்படுகிறது. இப்படி ஒதுக்கப்படும் தொகை சரியாகவும், திறமையாகவும் பயன் படுத்தப்படுகிறதா என்பதை உறுதிப் படுத்த வேண்டியது அவசியமாகும்.

செயல்களின் அளவுகளைவிட, செயல்களின் தரத்தை உறுதிப்படுத்துவதை நீங்கள் வற்புறுத்தவேண்டும். யாருக்காக ஒதுக்கப்பட்டுள்ளதோ அந்த மக்களுக்காகப் பலன் கிடைக்கும் வகையில் நிதிகள் பயன்படுத்தப்படவேண்டும். உற்பத்தி அளிக்காத செலவினங்களைத் தவிர்த்து, மக்களுக்கு நேரடிப் பலன்களைத் தரும் திட்டங்களைச் செயல் படுத்த முனையவேண்டும். நாம் செலவிடும் செலவினங்களினால் நியாயமான உற்பத்தியினைத் திரும்பப் பெறுவதில் பணியாளர்களின் செயல்பாட்டினை மாவட்டங்களிலுள்ள துறைத் தலைவர்களை முறையாகக் கண்காணிக்கச் சொல்ல வேண்டும். மாவட்ட அலுவலர்கள் தங்களின்கீழ் பல்வேறு நிலையிலுள்ள பணியாளர்களின் பணிகளை ஆய்வு செய்து மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்குத் தகுந்த அளவு, உற்பத்திரீதியில் ஏற்பட்ட பலனைச் சரிபார்க்க வேண்டும்.

சிறுசேமிப்பு வசூலை மேற்பார்வையிடுவதில் மாவட்ட ஆட்சியர்கள் முக்கியப்பங்கு வகிக்கவேண்டும். மாநில அரசின் நிதி மற்றும் வரவுசெலவு நிலைக்கு இது உதவும். மேலும் இது மக்களின் சேமிக்கும் பழக்கத்தையும், சிக்கனப் பழக்கத்தையும் ஊக்கப்படுத்தி அவர்களது வளர்ச்சிக்கு உதவும். மாவட்ட நிர்வாகம் என்பது ஒரு வியாபாரம் என்ற எண்ணத்தை விதைத்தால், அரசு செலவிடும் பணத்திற்குச் சிறந்த பலனைப் பெறமுடியும். இந்த அடிப்படையில் மாவட்ட நிர்வாகத்தைச் சீரமைப்பின், திறமையும், உற்பத்திப் பெருக்கும் முதன்மையாக அமையும். இதுசம்பந்தமாக மாவட்ட ஆட்சியாளர்கள் செயல்திறத்தோடு செயல்படக் கேட்டுக்கெள்கிறேன். அவர்கள் நிர்வாகத்தில் திறமையை ஊக்கப்படுத்த புதிய வழிகளைக்கண்டு, செயல்முறைகளில் மாற்றங்களைத் தொடங்கவேண்டும்.

வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய தகவல்கள், ஆய்வுகளைத் திரட்டி வைக்கவும், கண்காணிக்கவும், கணிப்பொறிகளைப் பெரிய அளவில் பயன்படுத்த வேண்டுமென்று மாவட்ட ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நிலப்பதிவேடுகளைப் பராமரிப்பதற்கும் கணிப்பொறிகளைப் பயன்படுத்தவேண்டும். கணிப்பொறிகளைப் பயன்படுத்துவது கிராமப்புற மக்களின் ஆவணத் தேவைகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும், காலஅளவு நிர்ணயத் திட்டங்களை வகுத்து நிறைவேற்றவேண்டும். வருவாய் நிர்வாகத்தின் அடிப்படைப் பணி, நில

ஆவணங்களையும், நிலஅளவு ஆவணங்களையும், நில உரிமைப் பட்டாப் புத்தகங்களையும், அன்றன்றைய தேதிவரை சரிவரப் பராமரிப்பதுதான். தன்னுடைய உரிமைக்கான ஆவணங்கள் நிர்வாகத்தால் சரியாகப் பராமரிக்கப்படுகிறது என்பதை உணரும் எந்த ஒரு கிராமப்புற மனிதனும் மகிழ்ச்சி அடைவான். நில ஆவணங்களை நவீனமுறையில் கணிப்பொறியினைப் பயன்படுத்திப் பாதுகாப்பதுதான் நமது முயற்சியாகும்.

மக்கள் குறைதீர்க்கும் பணிகளில் நீங்கள் சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறீர்கள். உங்களில் சிலர் தனிப்பட்ட முறையில் பெருமளவில் அக்கறை எடுத்துப் பணியாற்றி இருக்கிறீர்கள். மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளை அறிந்து அதைப்போக்க உங்களுக்கு எல்லா வாய்ப்பும் இருக்கிறது. குறை தீர்க்கும் செயல்முறை, மற்ற துறைத் தலைவர்களின் ஒத்துழைப்பை நாடித் தீர்க்கவும் மாவட்டங்களில் உங்களுக்கு உதவுகிறது. தாமதம் இல்லாமல் நன்மைகள் கிடைக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகத்திடம் ஏழைகள் எதிர்பார்க்கிறார்கள். அவர்களுடைய பெரும்பாலான குறைகள் மிகவும் சாதாரணமானவைகள். நில ஒதுக்கீடு, வீட்டுமனை ஒதுக்கீடு, பட்டா மற்றும் முதியோர் உதவித் தொகை போன்றவை இந்தக் குறைகளை மக்களுக்கு திருப்தி அளிக்கும் வகையில் மாவட்ட ஆட்சியர்கள் போக்கி, நிர்வாகத்திற்கு நல்ல பெயர் கிடைக்க உதவவேண்டும். பெரும்பாலான தாமதங்கள் வழக்கமான மற்றும் தவிர்க்கக் கூடிய காரணங்களால்தான் ஏற்படுகின்றன. மாவட்ட ஆட்சியர்கள் நேரடி அக்கறை எடுத்துச் செயலாற்றும் போது நல்ல விளைவுகள் ஏற்படுகின்றன. அந்த நேரத்தில் பொதுமக்கள் அவர்களைப் பெரிதும் புகழ்கிறார்கள். பொது மக்களின் குறை தீர்க்க, மாவட்ட ஆட்சியர்கள் நேரடி அக்கறை எடுத்து, நிர்வாக இயந்திரத்தை வலுப்படுத்தி, அவர்களது பணியாளர்களையும் அக்கறைப்படுத்தும் படி கேட்டுக்கொள்கிறேன்.

அறிவொளி இயக்கத் திட்டங்களை நிறைவேற்ற நீங்கள் காட்டிய ஆர்வத்திற்காக உங்களைப் பாராட்டுகிறேன். இந்த அறிவொளி இயக்க நிலைகளைத் தொடர்ந்து பராமரிப்பது ஒரு முக்கியமான பணியாகும். அறிவொளி இயக்கத்தின் ஆரம்பக்கட்டப் பிராச்சாரத்திற்குப் பிறகு மாவட்டங்களில் வயது வந்தோருக்கு கற்பிப்போர்கள் கிடைக்கும்படியான திட்டங்களை நாம் அமைக்க வேண்டியிருக்கும். சமீபத்தில் அரசு அறிமுகப் படுத்தியுள்ள புதிய வேலைவாய்ப்புத் திட்டத்தில், வயது வந்தோர் கல்வியும் (அறிவொளி இயக்கம்), மதுவிலக்குப் பிரச்சாரமும் இரண்டு முக்கியப் பணிகளாகும். அவை படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் இந்தத் திட்டத்தில் சேரும்வண்ணம் இருக்கும். இந்த வேலை வாய்ப்புத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுவதை நீங்கள் கண்காணிப்பது அவசியமாகும்.

குடும்பநலத் திட்டத்திலும் அதன் குறியீட்டை அடைவதிலும் நீங்கள் காட்டும் தொடர்ந்த ஆர்வத்தை நான் கவனத்தில் கொண்டுள்ளேன். உங்களது ஈடுபாட்டினால் ஆண்டிற்காண்டு குறிப்பிடத்தகுந்த சாதனையைத் தமிழ் நாடு அடைந்துள்ளது. இது நமது மாநிலத்தில் குடும்பநலத் திட்டத்திற்கு நாம் அளித்துள்ள முக்கியத்துவத்தின் முன்னேற்றத்தைக் காண்பிக்கிறது. குடும்ப நலத் திட்டம் என்பது வெறும் இலக்கினைச் சாதிப்பதல்ல. தம்பதிகள், குழந்தைகள் பிறப்பதற்கான இடைவெளி, வரையறுக்கப்பட்ட குடும்பம், மழலைகளைச் சரியான முறையில் கவனித்தல் ஆகியவற்றைப் போதுமான அளவு புரிந்து கொள்வும். நமது மாநிலத்திலுள்ள சில மாவட்டங்களில் பழக்கத்திலுள்ள கொடுமையான பெண் சிசுவதையை நிறுத்துவதற்கும் குடும்பநலத் திட்டம் உதவ வேண்டும். மாவட்ட ஆட்சியர்கள் மனவளர்ச்சி குன்றிய, உடல் ஊனமுற்ற மற்றும் மகளிர் பலன்பெறும் சமூகநலத் திட்டங்களில் நேரடி அக்கறை காட்ட வேண்டுமென விரும்புகிறேன். அரசிடம் இத்தகைய மக்களுக்கான பல திட்டங்கள் இருக்கின்றன. ஆனால், இந்தத் திட்டத்தின் பலன்கள் அவர்களைச் சென்றடைகிறதா என்பதை உறுதிப்படுத்துவதுதான் முக்கியம். கடந்த காலங்களில் இத்தகைய திட்டங்களின் பலன்கள் யாருக்குச் சென்றடைய வேண்டுமோ அவர்களுக்குச் சென்றடையவில்லை என்று அறிந்தேன். அதனால்தான் மாவட்டங்களிலிருந்து, அவர்களைச் சென்னைக்கு வரவழைத்து நானே நேரடியாக நலத்திட்ட உதவிகளை வழங்க முடிவெடுத்தேன். இந்த உதவிகளை வாங்குபவர்கள் அதைப் பெறத் தகுதியானவர்கள் தானா என்று நானே நேரடியாகப் பார்க்க விரும்பினேன். மாவட்ட ஆட்சியர்கள் முறையான நடவடிக்கை எடுத்து, பலனாளிகளை இனங்கண்டு சென்னைக்கு அழைத்து வந்ததனால், நானே அவர்களைத் தனித் தனியாகச் சந்தித்து உதவிகளை அளிக்க முடிந்தது. இதுபோல மாவட்டங்களில் மக்களுக்கு இத்தகைய உதவிகள் வழங்கப் படும்போது, பொது நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து, நேரடியாக அவர்களுக்கு வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்யவேண்டும்.

விவசாயம், கால்நடை, மீன்வளம், ஊரகவளர்ச்சி, சுகாதாரம், தொழில்கள், குடிநீர் வழங்கல் போன்ற துறைகளிலுள்ள திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாவட்ட ஆட்சியர்களின் ஈடுபாடு மிகவும் முக்கியமானதாகும். நிதி மற்றும் பலன் பெறுபவர்களின் எண்ணிக்கை இலக்குகள் சாதிக்கப்படுவதைக் கவனிக்க வேண்டும். இந்தத் திட்டங்கள் உண்மையாக நடைமுறைப்படுத்துவதில் உள்ள தடைகளை நீங்கள் நீக்கவேண்டும். இந்தத் திட்டங்களில் பலனாளிகளின் பங்கை நீங்கள் உறுதிப்படுத்தினால்தான், அவர்கள் தங்களுக்கு வழங்கப்படும் உதவிகளையும் சேவைகளையும் நிலைநிறுத்தும் பராமரிப்புப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள முடியும்.

நமது மாநிலத்திலுள்ள ஊராட்சி நிறுவனங்களின் தோற்றத்தில், புதிய அரசியலமைப்பின் தேவைகளை உறுதி செய்வதற்கேற்றாற்போல் மாற்றம் கொண்டுவர எண்ணப்படுகிறது. இப்பொருள்மீது விவாதம் நடைபெறும்போது உங்களது கருத்துக்களைக் கேட்க ஆவலாக உள்ளேன்.

ஊராட்சி அமைப்புகளுக்கு விரைவில் தேர்தல் நடத்த வேண்டும். கிராமங்களில் வளர்ச்சித் திட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பை அதிகாரப்பற்றற்ற தலைமை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே எங்கள் கொள்கையாகும்.

இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு முதல் இடத்திலிருந்து நழுவிவிட்டது என்று அறிகிறேன். இந்த ஆண்டு அவ்வாறு நழுவாமல் முதல் இடத்தில் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கவேண்டும் என வலியுறுத்துகிறேன். அதேபோல் அனைத்துத் திட்டங்களிலும் தமிழ்நாடு முதலிடத்தை அடைய எல்லா நடவடிக்கைகளும் நீங்கள் எடுக்கவேண்டும் என விரும்புகிறேன்.

இம்மாநாட்டில் விவாதங்களுக்கு மிகவும் நெருக்கமான சில பொதுவான ஆலோசனைகளை நான் குறிப்பிட்டுள்ளேன். உங்களின் கடந்த இரண்டாண்டு அற்புதமான பணிகளுக்காக மீண்டும் ஒரு முறை பாராட்டுகிறேன். மக்களின் நலனுக்காக உங்கள் கடமைகளை அர்ப்பணிப்பு உணர்வோடும், உறுதியோடும், அனுதாபத்தோடும், நியாயமான உணர்வோடும் நீங்கள் தொடர்ந்து செய்வீர்கள் என நம்புகிறேன். இப்பொழுது, நிகழ்ச்சி நிரலில் காணப்படும் பல்வேறு பொருள்கள் மீது உங்களது ஆக்கப்பூர்வ ஆலோசனைகளை அளிப்பீர்களென எதிர்பார்க்கிறேன்.

மக்கள் நலனுக்காக உங்கள் கடமைகளை அர்ப்பணிப்பு உணர்வோடும், உறுதியோடும் தொடர்ந்து செய்யுங்கள்!

**(மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் மாநாடு 24.6.93 அன்று தலைமைச் செயலகத்தில் நடந்தது. அப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.)**

# சென்னைப் பெருநகரில் ஒரு

# தொழில் பூங்கா

“தமிழகத்தில் தொழில் வாய்ப்புகள்” குறித்த கருத்தரங்கின் தொடக்க விழாவில் கலந்து கொள்ளும் இந்நேரத்தில், தொழில் அதிபர்களான உங்களையெல்லாம் மீண்டும் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் என்னுடைய அரசு ஆட்சி பொறுப்பேற்றவுடன் நான் தொடங்கிய விவாதத்தின் தொடர்ச்சி தான் இந்தக் கருத்தரங்கம் என்று கருதுகிறேன். இத்தகைய கருத்தரங்கம், நாம் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கின்றோம் என்பதை அறிய உதவுவதோடு, எதிர்காலத்திற்கு நம்மைத் தயார் செய்து கொள்வதற்கும் உதவியாக இருக்கும். இந்த விவாதங்கள் அரசு நல்ல செயல் திட்டங்களை உருவாக்கி, அதன் மூலம் ஒருங்கிணைந்த செயலாக்கத்திற்கு அடித்தளமாக அமையுமென நம்புகிறேன்.

பல்வேறு முன்னணித் துறைகளில் தங்களை அர்ப்பணித்து போற்றத்தகு முன்னேற்றம் அடைந்ததற்காக விருதுகள் பெற்ற தொழிலதிபர்களை வாழ்த்தி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். இதை மற்றவர்களும் பின்பற்றி தொழில் துறையில் உயர்ந்த நிலையை அடைய, நமக்கு இது போன்ற மேலும் பல உதாரணங்கள் தேவைப்படுகின்றன.

ஊக்கமுள்ள முதலீட்டாளர்களுக்கு வழங்க, தமிழ்நாட்டில் பல வாய்ப்புகள் இருப்பதை நீங்கள் எல்லோரும் நன்கு அறிவீர். உகந்த தொழில் மற்றும் தொழிலாளர் சூழ்நிலையைத் தவிர தமிழ்நாட்டில் மிக உயர்ந்த பயிற்சி பெற்ற மற்றும் உற்பத்தித் திறன் கொண்ட மனித வளம் இருக்கிறது.

பல்வேறு மாநிலங்களில் உள்ள குழப்பமான சூழ்நிலையை ஒப்பிடும் போது, தமிழ்நாட்டில் உள்ள அமைதியான சட்டம் ஒழுங்கு நிலைமை ஆர்வமுள்ள தொழில் முதலீட்டாளர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக உள்ளது. தேவையான அடிப்படை வசதியைப் பொறுத்த மட்டில் தமிழகம் நமது நாட்டில் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. மின் உற்பத்தியை அதிகரிக்க தனியார்துறை ஈடுபாட்டுடன் நிறைவேற்ற, பல பெரிய திட்டங்களைத் தீட்டியுள்ளோம். முன்னோடித் திட்டமாக, ரூ.4,200 கோடி செலவில் மூன்று திட்டங்களை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளோம்.

இதைத்தவிர, கூட்டுத்துறையில் ரூ.7,000 கோடி செலவில் ஒருங்கிணைந்த சுரங்கம் மற்றும் மின் உற்பத்தித் திட்டம் ஒன்று நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. நீங்கள் மகிழ்ச்சி அடையத்தக்க வகையில் தமிழகத்தில் தற்பொழுது மின்வெட்டே இல்லை. எதிர்காலத்திலும் இந்த மகிழ்ச்சியான நிலை தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்பது தான் எங்கள் முயற்சி.

**‘தமிழகத்தில் தொழில் வாய்ப்புகள்’ குறித்த கருத்தரங்கினை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 23.6.’93 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்து ஆற்றிய உரை.**

எட்டாவது திட்டத்தில் மாநிலத்தின் தொழில்துறையின் அடிப்படை வசதிகளுக்காக, குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டங்கள் ரூ.1,450 கோடி செலவில் நிறைவேற்றப்படவுள்ளன. தொழில் உற்பத்தி, தரம், கடன் வசதி போன்ற பல்வேறு இனங்களில் அகில இந்தியாவில் தமிழகம் மற்ற மாநிலங்களைவிட முன்னணியில் உள்ளது. குறிப்பாக சிறு தொழில்களின் ஆண்டு வளர்ச்சி 15.25 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. இது நாட்டின் உயர்ந்த அளவாகும்.

ஏற்றுமதியைப் பொருத்தமட்டில் அகில இந்திய அளவில் நம்முடைய பங்கு 12.5 சதவிகிதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. நமது மாநிலம், தோல் பொருட்கள், ஆயத்த ஆடைகள், துணி உற்பத்தி, கடல் பொருட்கள், பொறியியல் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தியிலும் குறிப்பிடத்தக்க முன்னணியில் இருக்கிறது. தொழில் தொடங்குவதற்கான ஏற்றதொரு சூழ்நிலை நமது மாநிலத்தில் இருப்பதைக் கோடிட்டுக் காட்டுவதற்காகவே இதை நான் குறிப்பிடுகிறேன்.

தொழில்துறையைத் தாராளமயமாக்குவதில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்த பொருளாதாரச் சீர்திருத்தத்தை நாடு உருவாக்கியுள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதற்காக மைய அரசு பல நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. இதில் மாநிலங்கள் பின் தங்கிவிடக்கூடாது.







வேகமான தொழில் வளர்ச்சிக்காகத் தமிழக அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தொழில் தொடங்குவதற்கு வசதியாக ஏற்ற சூழ்நிலையையும், அடிப்படை வசதிகளையும் மாநில அரசு செய்து தர வேண்டியிருப்பதால், முக்கிய பொறுப்பு மாநில அரசின் மேல் விழுந்துள்ளது. இதனால் தனியார் துறைகளில் உள்ள தொழில் அதிபர்கள், அவர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி புதிய தொழிற்சாலைகள் அமைக்க இயலும். தாராளக் கொள்கை என்பது கட்டுப்பாட்டைத் தளர்த்துவதாகும்.

தனியார் துறையை ஊக்கப்படுத்துவதும் இதில் அடங்கும். உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் வலியுறுத்தும் முயற்சியையும் இது குறிப்பிடுகின்றது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, தொழில் வளர்ச்சிக்குத் தகுந்த சூழ்நிலைகளையும் தொழில் முனைபவர்களுக்கு நட்பான சூழ்நிலைகளையும் உருவாக்கும் நோக்கத்துடன் 1992-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் பரவலான நிதிச் சலுகை மற்றும் பிற ஊக்கங்களைக் கொண்ட புதிய தொழில் கொள்கையை நான் அறிவித்தேன்.

அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதை விரைவுபடுத்தவும், வழிகாட்டும் பணிகளுக்கும் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் (TACID), தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனம் (GUIDANCE) போன்ற தனி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனம், தொழில் மூலதனம் செய்பவர்களுக்கு உதவுவதற்காக ஓராண்டுக்கு முன் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகம் (TACID) மத்திய அரசு திட்டப்படி மூன்று தொழில் வளர்ச்சி மையங்களை உருவாக்கும் பணிகளை எடுத்துக் கொண்டுள்ளது. மாநில அரசின் சார்பில் தருமபுரி மாவட்டம், பருகூரில் தொழில் வளர்ச்சி மையம் ஒன்றையும், திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் நிலக்கோட்டையில் ஒரு வேளாண் தொழிற்பேட்டையையும் உருவாக்க தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகம் தொடங்கியுள்ளது.

இதைத்தவிர, பெரிய ஏற்றுமதி மையமான திருப்பூரில் ரூ.200

கோடி செலவில் அடிப்படை வசதிகளை அதிகரிக்கும் ஒரு பெரிய திட்டத்தையும் இந்த நிறுவனம் எடுத்துக் கொண்டுள்ளது.

இவையெல்லாம் நாங்கள் எடுக்கும் முயற்சிகளின் சிறு உதாரணங்களேயாகும். புதிய முதலீடுகளை வரவேற்பதே பொதுவான எங்கள் கொள்கையாகும்.

முக்கியமாக, போட்டியும், லாபமும் உள்ள துறைகளில் முதலீடுகளை நான் வரவேற்கிறேன். இம்முதலீடுகளில் சில புதிய தொழில் கொள்கையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்டுச் சிலவற்றைச் சொல்ல வேண்டுமானால், தோல் பொருட்கள், ஆடைகள், மோட்டார் வாகனப் பாகங்கள் மற்றும் மின்னணுவியல் சாதனங்கள் போன்ற சில பிரிவுகளில் நான் முக்கிய கவனம் செலுத்தவுள்ளேன். தொழில் வளர்ச்சியில் தாய்த் தொழில்களாகக் கருதப்படும் மாபெரும் திட்டங்களில் முதலீடுகளுக்கு அரசு எல்லா உதவிகளையும் வழங்கும். புதிய தொழில் மற்றும் முதலீடு முயற்சிகளுக்கு இவை முக்கிய அம்சமாக எடுத்துக் கெள்ளப்படும்.

மாவட்ட அளவில் சிறுதொழில் முனைவர்கள் ஒரே இடத்தில் அனைத்து அனுமதிகளும் பெற வழி செய்யும் அமைப்பை உருவாக்கி முதலீட்டாளர்களுக்கு ஒரு நட்பான சூழ்நிலையை உருவாக்கி வருகிறோம். குறிப்பிட்ட பகுதிகளிலும், தொழிற்பேட்டைகளிலும் தொழில் வளர்ச்சிக் குழுமங்கள் அமைக்க சட்டம் கொண்டுவரப்படும். இதன் மூலம் தொழில் முனைவர்களுக்கு ஏற்படும் பல சுமைகள் குறைக்கப் பட்டு அவர்கள், தங்கள் திட்டங்கள் மேல் முழுக்கவனம் செலுத்த வழி கோலும்.

உள்நாட்டு முதலீட்டை மட்டும் கவர வேண்டுமென்று நாங்கள் எண்ணவில்லை. வெளிநாட்டிலிருந்து குறிப்பாக சிங்கப்பூர், பசிபிக் நாடுகளிலிருந்து நேரடி முதலீட்டை ஊக்கப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு **''சென்னைத் தொழில் பூங்கா''** என்றழைக்கப் படும் ஒரு வணிக வளாகத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் வெளிநாட்டு முதலீடு ஊக்கப்படுத்தப்படுவதோடு, உள்நாட்டுப் பொருளாதாரத்தில் புதிய தொழில் நுணுக்கங்கள் அறிமுகப் படுத்தப்படும். இதைத்தவிர, தொழில் நுணுக்கத்திலும், நிர்வாகத் திறமையிலும் முன்னேற்றம் ஏற்படும். இது உலகச் சந்தையில் போட்டியையும் ஊக்குவிக்கும். சென்னை தொழில் பூங்காவுக்கு வெளிநாட்டு முதலீட்டைக் கவரும் தமிழக அரசின் குறிக்கோளை நிறைவேற்ற, தமிழக அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு எடுத்துக்காட்டாக இந்தத் தொழில் பூங்கா திகழும்.

**அடுத்த இதழிலும்... திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டச் சிறப்புக் கட்டுரைகள், சுவையான செய்திகள் இடம்பெறும்.**

சென்னை நகரின் புறநகர்ப் பகுதியில் அமைக்கப்படும் இத் தொழிற் பூங்கா, தென்கிழக்கு ஆசியாவில் எந்த ஒரு பகுதியுடனும் ஒப்பிடும் அளவுக்கு அடிப்படை வசதிகளைக் கொண்டிருக்கும். மேலும், இந்திய அளவில் தனித்தன்மையுடன் கூடிய ஊக்கத் திட்டங்களைக் கொண்டதாகவும் இது இருக்கும். தமிழ்நாட்டுக்கு விலை மதிக்கத்தக்க பயன்கள் கிடைக்கும் வகையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகரிப்பது இப்பூங்காவின் முக்கிய குறிக்கோளாகும். இதற்குத் தேவைப்படும் ஊக்கத்தை மத்திய, மாநில அரசுகள் அளிக்க வேண்டும். மாநில அரசைப் பொறுத்தமட்டில் மின்சார சப்ளை, மாநில அரசின் ஒப்புதலை விரைவாக வழங்குதல், அடிப்படை வசதிகள் போன்ற உதவிகளை முதலீட்டாளர்களுக்கு அரசு வழங்கும்.

மத்திய அரசின் ஒத்துழைப் போடுதான் ஒரு மாநிலம், தொழில் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைய முடியும். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், எண்ணூரில் ஒரு துணைத் துறைமுகம் அமைப்பது அவசரத் தேவையாகும். இதனால் மாநிலத்தின் மின் உற்பத்தி பாதிக்காத வகையில் நிலக்கரியை எளிதாகக் கொண்டுவர முடியும்.

மற்றொரு பெரிய திட்டம் தென்னக எரிவாயு இணைப்புத் திட்டம் ஆகும். இத்திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்துமாறு நாங்கள் மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். எரிசக்தி கிடைப்பதை இது அதிகரிப்பதோடு இரசாயனத் திட்டங்களுக்குத் தேவைப்படும் முக்கிய பொருளாகவும் விளங்கும். இது குறித்து மத்திய அரசு தேவையான ஒப்புதல்களை அளித்துள்ளதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். தென்மாநிலங்களின் தொழில் வளர்ச்சிக்குத் அத்தியாவசியமாகத் தேவைப்படும் இத் திட்டத்தை மிக விரைவில் செயல்படுத்தத் தேவைப்படும் பிற நடவடிக்கைகளையும் துரிதப்படுத்துமாறு நான் மைய அரசை வலியுறுத்த விரும்புகிறேன்.

தொழில் துறையில் எங்கள் முன்னேற்றம் மனநிறைவு அளிப்பதாக இருந்தாலும், இப்போதுள்ள நிலையை அப்படியே தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்று மட்டும் நினைக்காமல், தொழில் வளர்ச்சியை விரிவுபடுத்தி தமிழ்நாட்டைத் தொழில் துறையில் இந்தியாவிலேயே முதல் இடத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்பதில் முனைப்பாக இருக்கிறோம். எங்களுடைய இந்த முயற்சிக்குத் தொழில் அதிபர்கள் உற்சாகத்துடன் ஒத்துழைப்பு நல்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இறுதியில் இந்தக் கூட்டுமுயற்சி தான் தொழில் துறையில் மேன்மையடைய உதவியாக இருக்கும்.

இக்கருத்தரங்கத்தில் இடம் பெறும் பேச்சு வார்த்தைகள் பயனுள்ளவையாக இருக்கும் என நான் நம்புகிறேன். என்னுடைய உரையை முடிப்பதற்கு முன் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இம்மாதிரியான கருத்தரங்கில் நீங்கள் பலம் மற்றும் பலவீனங்களை விவாதித்து, தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பெருக வாய்ப்புகள் என்ன என்பதை ஆராய்ந்து, தொழில் வளர்ச்சியை ஊக்கப் படுத்த நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து எங்களுக்கு ஆலோசனை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். உங்களிடமிருந்து பயனுள்ள பல ஆலோசனைகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.



# கிருஷ்ணகிரியில் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா

தமிழ்நாடு அரசின் சார்பில் மாநில அளவிலான பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா 12.6.93 அன்று, கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டுத்திடலில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ.தசரதன் இ.ஆ.ப. அவர்கள் விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

அதனைத் தொடர்ந்து மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் தலைமையுரையாற்றிப் பேசும்போது, பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் தனது கவி ஆற்றல் மூலம் பெருமை சேர்த்த மாமனிதர் என்றும், பாரதிதாசன் கண்ட புதுமைப் பெண் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி என்றும் புகழாரம் சூட்டினார்.

தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில், பாவேந்தர் பாரதிதாசன் தமிழ் வளர்க்கப் பாடினார். மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைப் பற்றிப் பாடல்களில் பாடியுள்ளார். ஆகவேதான் தமிழ்நாட்டில் மட்டுமின்றி நாடு முழுவதும் அவர் புகழ் பரவியது. பாரதியார் மீது கொண்ட பற்றினால் தன் பெயரையே மாற்றிக்கொண்டார். அவர் பாடியது போன்ற புதுமையான திட்டங்களோடு தமிழகத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சி நடத்தி வருகிறார். இந்தியாவின் முதல் பெண் முதல்வர் என்று ஆட்சி நடத்தி வருகிறார் என்றார்.

பாவேந்தர் பாரதிதாசன் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது, நாட்டின் வளர்ச்சிக்குப் பாடிய கவிஞர்களில் முக்கியமானவர் பாவேந்தர் பாரதிதாசன் ஆவார். இவர் பாடிய பாடல்கள் விடுதலை உணர்வைத் தூண்டின. இவர் புகழ் நிலைக்க நாம் செய்யும் கைமாறுதான் இந்தப் பாராட்டு விழாவாகும். சாதிப் பிரச்சினையைக் கைவிட வேண்டும். மதப் பாகுபாடு கூடாது. ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று பாவேந்தர் பாடியுள்ளார் என்றார்.

விழாவினையொட்டி நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பரிசுகள் வழங்கி, அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

விழாவில், காவேரிப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் திரு முனுசாமி, கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் திரு முனிவெங்கடப்பன், மொரப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு சிங்காரம், பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் திரு புருசோத்தமன் ஆகியோர் பாவேந்தர் பாரதிதாசன் பெருமைகளைப்பற்றிப் பேசினார்கள்.

விழாவின் முடிவில், செய்தி மக்கள் தொடர்பு இணை இயக்குநர் திரு பா. செயப்பிரகாசம் அவர்கள் நன்றி நவின்றார்.

விழாவில் மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சி மற்றும் தருமபுரி மாவட்டக் காவல்துறையினரின் கரகம், காவடி நிகழ்ச்சி ஆகியவை வெகு சிறப்பாக நடைபெற்றன.

13.6.93 அன்று மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள், தொரப்பள்ளியில் மூதறிஞர் இராஜாஜி நினைவு இல்லத்தைப் பார்வையிட்டார்.

### இலக்கியம் எதற்காக?

இலக்கியம் எதற்காக? இலக்கியம் எப்படி இருக்க வேண்டும்? எப்படிப்பட்டதை இலக்கியம் என்று சொல்லலாம்? அவை எதற்காக இருக்க வேண்டும்? என்பது பற்றிச் சிந்தித்தால், மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு மட்டும் அல்லாமல், மனித சமுதாய வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் அது இருக்க வேண்டும் என்பது எனது கருத்து.

- தந்தை பெரியார்.

நான்காவது அட்டை சொல்லும் செய்தி:



# புதுப்பொலிவு பெறும் குற்றாலம்!

திரிகூடமலை என்றும், பொதியை என்றும் வரலாற்றுக் காலம் தொட்டு புகழ்பெற்ற குற்றாலம், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தென் மாவட்டங்களில் பெற்ற கன மழையினால் வெள்ளம் ஏற்பட்டு பெருத்த சேதம் அடைந்துள்ளது. இதற்குமுன் கண்டிராத வெள்ளம் பாய்ந்து குற்றாலத்தைச்சீர்குலைய வைத்துவிட்டது.

குற்றாலப் பேரருவியில் பெரிய பாறாங்கற்கள் வெள்ளத்தில் அடித்துவந்தும், பெரிய அளவிலான மரங்கள் வேருடன் சாய்ந்தும் சேதப்படுத்தியுள்ளன. நீர்வீழ்ச்சியில் குளிக்குமிட வளைவு, குளிக்கும் தளம் நடைபாதைப் பாலங்கள் குற்றாலநாதரின் திருக்கோவிலின் நடைபாதைத் தளங்கள் நீரால் அரிக்கப்பட்டு, பழுதடைந்த நிலையில் பயன்படுத்த இயலாதபடி சேதம் அடைந்துள்ளன. குற்றாலப் பேரருவியும், ஐந்தருவியும் வெள்ளத்தால் உருக்குலைந்து போய்விட்டன.

அரசு குற்றாலத்தை மேம்படுத்தும் பணியாக சீரமைப்புப் பணிக்காக ரூ.30 இலட்சம் முதல் கட்டமாகவும், இரண்டாம் கட்டமாக ரூ.27 இலட்சம் மேம்பாட்டு வேலைக்காகவும், மொத்தம் ரூ.57 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

சீரமைப்பு வேலைகள் தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின்வசம் ஒப்படைக்கப்பட்டு வேலைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகமும் போர்க்கால அடிப்படையில் தேர்ந்த பொறியாளர்களை வைத்து சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது. குற்றாலம் மற்றும் ஐந்தருவி சீரமைப்புப் பணிகள் முடிந்து, வரும் சாரல் பருவத்திற்குத் தயாராக உள்ளது.

ஆர்ச்சுப் (வளைவு) பகுதி நவீன முறையில் (Ganiting) வலுப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. சேதம் அடைந்த குளிக்கும் தளம் புதிய முறையில் கருங்கற்களால் பாவப்பட்டுள்ளது. வளைவுக்கு வெளிப்பகுதியில் நடைபாதை வசதியும் அமைக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட நடைபாதைப் பாலங்கள் மீண்டும் கட்டப்பட்டுள்ளன. பெண்கள் குளிப்பதற்குத் தனியாக, புதிய நடைபாதை வசதியும் உடைமாற்றும் அறையும் அமைக்கப்பட்டுள்ளன. வளைவுக்கு முன்பகுதியில் உள்ள குளம் தூர் நீக்கப்பட்டு நீச்சல் குளம் போல அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இயற்கைப்பொலிவு மிளிர நீர்வீழ்ச்சியின் இருபுறங்களிலும் தேவையற்ற கட்டடங்களை நீக்கி அழகுபடுத்த வேண்டி இயற்கைச் செடிகள், மரங்கள் அமைந்த கண்கவர் வனப்பகுதியும் (Landscape) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அருவிக்கு எதிரில் உள்ள மண்டபம் புதுப்பிக்கப்பட்டு அதன் கோபுர மற்றும் முகப்பு வேலைகள் தேர்ந்த ஸ்தபதிகளைக் கொண்டு சீரமைக்கப்படுகின்றன.

முதன்முறையாக, பொங்குமாங்கடல் வெள்ளத்தால் மண் மற்றும் கற்களால் மூடப்பட்டுள்ளதைத்தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகம் அப்புறப்படுத்தி நீர் மெத்தை (Water Cushion) அமைத்ததால் மேலிருந்து நீரோடு கல் மண் கலந்து வராதபடி தடுக்கப்பட்டு நீராடுபவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

இப்போது குற்றால சீசன் தொடங்கி, சுற்றுலாப் பயணிகள் அங்கே சூழ்ந்துள்ளனர்.

பேரருவியிலும், ஐந்தருவியிலும் நீர் வெள்ளம்போல் கொட்டுகிற காட்சி, கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்கிறது.

ஆடவர் மகளிர் குழந்தைகள் அருவியில் நீராடி மகிழ்கின்றனர். வெள்ளம் ஏற்படுத்திய வேதனை இப்போது அங்கே இல்லை. கொள்ளை இன்பத்தில் ஆழ்கின்றனர் மக்கள்!.

## ஊரும் பேரும்

திருநெல்வேலி

### வாசுதேவநல்லூர்

புளியங்குடியிலிருந்து 8 கி.மீ. தூரத்தில் உள்ளது, இது. புலித் தேவரால் கட்டப்பட்ட கோட்டை இங்குள்ளது. 1759-இல் கான் சாகிப்பின் படைகள் இக்கோட்டையை முற்றுகையிட்டன.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.

★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.

★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.

★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.

★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

